THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
30.00
பக்கங்கள் -28
வார சஞ்சிகை
டிசெம்பர் 05- டிசெம்பர் 11, 2012
December 05- December 11, 2012



ஜனநாயகத்திற்கெதிரான
## போர்!



## தமிழர் கோரும் அதிகாரம் முஸ்லிம்களுக்கும்தான்!



# அழிக்கப்படும் குளக்கரை நாகரீகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற தாயை 94 முறை குத்திக் கொலை செய்த மகன்





இங்கிலாந்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன் ஒருவன் தனது தாயின் முதுகுத் தண்டை அறுத்ததோடு மட்டுமல்லாமல் அவரை 94 தடவை கத்தியால் குத்தியும் கொலை செய்துள்ளான்.

இங்கிலாந்தில் உள்ள வேமவுத்தைச் சேர்ந்தவர் லீ விட்டில்(வயது 42). கணவரிடம் இருந்து விவாகரத்தான அவருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர்.

இவர்களில் ஒருவரான 16 வயது சிறுவனுக்கு கத்திகள் மீது அதீத ஈடுபாடு உள்ளது. கடந்த ஜூலை மாதம் அவன் தனது தோழிகளிடம் தனது தாய் இன்னும் சில நாட்கள் தான் வாழ்வார் என்று தெரிவித்துள்ளான். அதற்கு அவர்கள் ஒருவேளை லீக்கு ஏதாவது நோய் உள்ளதோ என்று நினைத்துக் கொண்டனர்.

பின்னர் அவன் வீட்டில் தனியாக இருந்த போது, தனது தாயை முதலில் முதுகுத் தண்டில் கத்தியால் குத்தி உள்ளான், பின்னர் அவரை 94 முறை குத்திக் கொன்றான்.

அதன் பிறகு அந்த ரத்தக்கரையோடு தோழிகளை சந்திக்க சென்று விட்டான். அவர்கள் கேட்டதற்கு யாரோ மர்மநபர்கள் தங்கள் வீட்டுக்குள் புகுந்து தனது தாயைக் கொன்று விட்டதாகக் கூறியுள்ளான்.

அவனது உடலில் ஏன் ரத்தக்கரை இருக்கிறது என்று கேட்டதற்கு பயந்துபோய் பைப் வழியே இறங்கி வந்ததில் அடிபட்டுவிட்டது என்று கூறியுள்ளான்.

இதனையடுத்து பொலிஸ் நடத்திய விசாரணையில், தனது தாயை தானே கொடூரமாகக் கொன்றதை அவன் ஒப்புக் கொண்டான். அதன் பிறகு அவன் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

# 25வது வாரத்தில் பிறந்து உயிர் தப்பிய அதிசய பிறவிகள்



உலகில் அவ்வப்போது சில ஆச்சரியமான சம்பவங்கள் நிகழ்வதுண்டு. அது போல இங்கிலாந்து நாட்டில் 25வது வாரத்தில் குறைப்பிரசவத்தில் பிறந்த 3 குழந்தைகள் நல்ல ஆரோக்கியம் பெற்று தங்களது முதலாவது பிறந்த நாளை கொண்டாடியுள்ளனர்.

அங்குள்ள பிரிஸ்டோல் நகரில் வசிக்கும் தம்பதி ராஷால்-ஆஷ்லே கர்ப்பிணியாக இருந்த ஆஷ்லேக்கு 24-வது வாரமே திடீரென்று வயிற்று வலி ஏற்பட்டது.

இதனால் அவரை அங்குள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். அடுத்த 5 நாளில் அடுத்தடுத்து 3 ஆண் குழந்தைகளை பெற்றெடுத்தார்.

குறைப்பிரசவமாக 24 வாரத்தில் பிறந்ததால் குழந்தைகளின் எடை 1 கிலோவுக்கும் (2 பவுண்ட்) குறைவாகவே இருந்தது.

இதனால் 3 குழந்தைகளையும் மருத்துவமனையில் இன்குபேட்டரில் வைத்து சில மாதங்கள் பராமரித்தார்கள்.

மேலும் மருத்துவர்கள் அளித்த தீவிர சிகிச்சை மற்றும் தாயின் சிறந்த அரவணைப்பு ஆகியவற்றின் மகிமையால் 3 குழந்தைகளுமே ஓராண்டிற்குள் முழு உடல்நலம் பெற்று விட்டார்கள்.

இந்த அதிசய குழந்தைகளின் முதலாவது பிறந்த நாளை பெற்றோர் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிக்கப்படும் குளக்கரை நாகரிகம்



> வட பகுதியில் குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே சிறு குளங்களைக் கொண்ட குளக்கரை நாகரிகம் உருவாகியிருந்தது. 1920இல் இரணைமடுக்குளம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட பின்பு இந் நாகரிகம் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் விரிவடைந்தது. அது மட்டுமன்றி முத்துஜயன் கட்டு, உடையார்கட்டு, விசுவமடு போன்ற குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு புதிய குடியேற்றங்களும் உருவாக்கப்பட்டன.

உலகின் தொன்மைவாய்ந்த நாகரிகங்கள் நதிக்கரைகளிலேயே உருவாகின. நைல் நதிக்கரை நாகரிகம் அலெக்சென்டரியா, பாரசீகம் போன்ற பழமைவாய்ந்த பெருமைக்குரிய நகரங்களையும் சிறப்பு மிக்க வாழ்க்கை முறையையும் உருவாக்கியது. இவ்வாறே சிந்து நதிக்கரை நாகரிகமும் பெருமைக்குரிய வகையில் சிறப்புப் பெற்றிருந்தது. யமுனை நதிக்கரையில் வாழ்ந்த இடையர்குலத் தலைவனான கண்ணனே வர்ணாசிரம தர்மத்திற்கு தத்து வார்த்த வடிவம் கொடுத்து பகவத்கீதையைப் படைத்தான். காவிரிக் கரையில் செழித்தோங்கிய நாகரிகமே சோழ சாம்ராச்சியம் இது கடல் கடந்த நாடுகளுக்கும் பரவுமளவுக்கு சிறப்புப் பெற்றிருந்தது.

காடுகளில் வேட்டையாடியும் இயற்கையாக விளையும் காய், கனி, கிழங்கு வகைகளையும் உண்டு வாழ்ந்த மனிதன் மந்தை வளர்ப்பு, பயிர்ச்செய்கை போன்ற உற்பத்திகளில் இறங்கியபோது அவன் நிரந்தரமாக நதிக்கரைகளில் தங்கவேண்டிய நிலை உருவானது. அலைந்து திரிந்த மனிதன் ஓரிடத்தில் தங்கும் போது தேவைகள் விரிய விரிய நாகரிகங்களும் விரிவாகின. அவையே தொன்மையான நாகரிகங்களின் மூலக் கருக்களாகின.

எப்படியிருந்த போதிலும் ஆதி நாகரிகங்கள் நீரையே அடிப்படையாகக் கொண்டிருந்ததால் அதில் ஆறுகள், குளங்கள் போன்றவை முக்கியமானவையாக விளங்கின.

இலங்கையில் ஆறுகள் நிறைந்த தேசமாகத் தென் பகுதியும், வரண்ட பகுதியாக வட பகுதியும் விளங்கியமையினால் நிலமானிய சமூகக் கட்டமைப்பு மெல்ல மெல்ல இங்கு உருவாகிய காலத்தில் ஒரு குளக்கரை நாகரிகத்திற்கான தோற்றுவாய் ஏற்பட்டிருக்க வாய்ப்புகள் உண்டு. குளங்கள் ஆரம்பத்தில் வடபகுதியின் முல்லைநிலம் சார்ந்த பகுதிகளிலே உருவாக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் காட்டில் பெய்யும் மழையே காட்டாறுகளாக மாரியில் ஓடுவதுண்டு. இந்தக் காட்டாறுகள் மண் அணைகள் கட்டப்பட்டுச் சிறு குளங்களாகத் தேக்கப்பட்டுப் பின் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த இரு மாவட்டங்களிலும் ஊருக்கு ஒரு சிறு குளம் இருப்பதைக் காணமுடியும். அது அந்த ஊர் மக்களுக்கே உரிய சொத்தாகவே கருதப்பட்டது.

எல்லாளன் காலத்திலேயே முதல் முதலாக பல ஊர்களுக்கு நீர் பாய்ச்சக் கூடிய பெரிய குளமான வவுனிக் குளம் கட்டப்பட்டதாகக் கருதப்பட்டது. இக்காலப் பகுதியிலேயே கரிகால சோழன் காவிரிக்குக் கல்லணை கட்டியதாகவும் தெரியவருகிறது.

அதன் பின்பு அவனாலேயே அனுராதபுரம் பசுவக் குளமும் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. பல ஆண்டுகளின் பின்பே தேவநம்பியதீசனால் திசவாவி கட்டப்பட்டது. அதே போன்று கந்தளாய்க் குளம் குளக்கோட்ட மன்னனால் கட்டப்பட்டது.

அதன் பின்பு பல சிங்கள மன்னர்கள் மலையில் உற்பத்தியாகும் ஆறுகளை மறித்துப் பெரியகுளங்களைக்கட்ட ஆரம்பித்தனர். இவர்களில் பராக்கிரமபாகுவும் முக்கியமானவன். அதன் பின்பு மின்னேரியா, பராக்கிரமசமுத்திரம் போன்ற பல பெருங்குளங்கள் கட்டப்பட்டன. இலங்கை சுதந்திரம் பெற்ற பின் ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களும் பல பழைய குளங்களை அபிவிருத்தி செய்தும் ஆறுகளைத் திசை திருப்பியும் பல விவசாயத் திட்டங்களை உருவாக்கினர்.

வட பகுதியில் குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே சிறு குளங்களைக் கொண்ட குளக்கரை நாகரிகம் உருவாகியிருந்தது. 1920இல் இரணைமடுக்குளம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட பின்பு இந் நாகரிகம் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் விரிவடைந்தது. அது மட்டுமன்றி முத்துஜயன் கட்டு, உடையார்கட்டு, விசுவமடு போன்ற குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு புதிய குடியேற்றங்களும் உருவாக்கப்பட்டன.

இந்நிலையில் இங்கு ஒரு செழிப்பான குளக்கரை நாகரிகம் நிலவியது என்றால் அது எவ்விதத்திலும் மிகையாகாது. அது கூட ஒரு கிராமியப் பொருளாதாரத் தன்னிறைவை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

யாழ்பாணத்திலிருந்து வைக்கோல், எரு, விறகு என்பன ஏற்றிச் செல்ல ஒவ்வொரு நாளும் ஏராளமான லொறிகள் வந்து போகும். பட்டி எரு என்பது விவசாயிகளால் மிகவும் விருப்பப்படும் பசளையாகும். அதாவது நூற்றுக் கணக்கான மாடுகள் இரவு நேரம் ஒன்றாகப் பட்டியில் அடைக்கப்பட்டு சேகரிக்கும் பசளையாகும். லொறிகளில் நேரடியாக பட்டிக்குச் சென்று பசளையை வாங்கிச் செல்வர். யாழ்ப்பாணத்தில் அதிகாலையில் கோப்பாய், உரும்பிராய், வசாவிளான், குஞ்சர்கடை போன்ற முக்கிய சந்திகளில் தரகர்கள் எரு லொறிகளை எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

வன்னியில் வைக்கோல் கற்றை கட்டுவது ஒரு முக்கிய தொழிலாக விளங்கிவந்தது. அதில் நிபுணத்துவம் பெற்ற பலர் அப்போது வாழ்ந்தனர். சூடடித்த பின்பு வரும் வைக்கோலைக் கற்றைகளாகக்கட்டி ஒரு இடத்தில் அடுக்கி வைப்பார்கள். வைக்கோல் லொறிகாரர் அதை வாங்கி யாழப்பாணம் கொண்டு செல்வார்கள். வைக்கோல் லொறிகளில் ஏற்றிக் கட்டுவதும் ஒரு தனிக் கலை. வைக்கோல் யாழ். குடாநாட்டில் மாடுகளுக்கு ஒரு முக்கிய தீவனமாக விளங்கியது.

இவ்வாறே வன்னியிலிருந்து தினமும் விறகு லொறிகளும்போய்க் கொண்டிருக்கும். இப்போது போன்று அபிவிருத்தி என்ற பேரில் கண்மூடித்தனமாகக் காடுகளை அழிப்பதில்லை. விறகு வெட்டுபவர்கள் தேக்கம் கன்றுகளை அழிப்பதில்லை. விறகு வெட்டுபவர்கள் தேக்கம் கன்றுகளை வைத்து வளர்த்துக்கொடுக்க வேண்டும். அதற்கு விசேட அனுமதியுண்டு.

அரிவுவெட்டு ஆரம்பித்து விட்டால் நெல்லு வாங்கும் லொறிகள் வர ஆரம்பித்து விடும். வன்னியில் நெல்லுக் கடை வைத்திருப்பவர்கள் விவசாயிகளில் தமக்கென வாடிக்கையாளர்களை வைத்திருப்பார்கள். அரிவு வெட்ட, சூடடிக்க அவர்களே நிதியுதவி வழங்குவார்கள். பின்பு சூடடிக்கும் களத்திலேயே போய் நெல்லை வாங்கிச் செல்வார்கள். அரிவு வெட்டுக் காலம் தொடங்கியதும் மட்டக்களப்பிலிருந்து கூலியாட்கள் வருவார்கள். அவர்கள் சிறந்த தொழிலாளர்களாதலால் ஒவ்வொருவரும் திரும்பிப் போகும் போது நிறையப் பணத்துடன் போவார்கள். அவர்கள் இரவில் ஒன்றாகக் கூடிச் சமைத்து உண்பதும் கூத்துப்பாட்டுகள் பாடிக் கும்மாளமடிப்பதும் மிகமிக இனிய அனுபவங்களாகும்.

சனி, புதன் ஆகிய நாட்களில் கிளிநொச்சியின் சந்தை கூடும். ஆனால் தென்னிலங்கையிலிருந்து சிங்கள முஸ்லிம் வியாபாரிகள் வெள்ளி, செவ்வாய் மாலையிலேயே வந்து விடுவார்கள். அவர்களின் கொள்முதல் இரவே நிறைவடைந்து விடும்.

விவசாயிகள் 20,30 என தங்கள் வாழைக்குலைகளை கிளிநொச்சி முற்றவெளியில் வட்டம் வட்டமாகக் கொண்டு வந்து அடுக்கிவிடுவார்கள். வியாபாரிகள் அப்படியே குவியல் குவியலாக விலைகேட்டு பேரம் பேசி லொறிகளில் ஏற்றுவார்கள். மிளகாய், வெங்காயம் என்பனவும் கொள்முதல் செய்யப்பட்டு மலைபோல குவிக்கப்படும்.

உட்சந்தையில் கருவாட்டு வியாபாரம் அமோகமாக நடக்கும். சந்தை வியாபாரிகள் மீனவர்களிடமிருந்து கருவாடுகளைக் கொள்முதல் செய்து சிப்பமாகக்கட்டி சிங்கள வியாபாரிகளுக்கு விற்பார்கள். இந்தச் சந்தை வியாபாரிகள் மீனவர்களுக்கு வள்ளம், வலை வாங்க நிதியுதவியும் செய்வார்கள்.

அதாவது கிளிநொச்சி சந்தையை மையமாக வைத்து ஒரு கிராமியப் பொருளாதார நாகரிகம் செழித்திருந்தது.

சுற்றியுள்ள கிராமமக்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களைச் சந்தையில் விற்று விட்டு ஒரு வாரத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வார்கள். அதே வேளையில் சற்று வசதி படைத்த விவசாயிகள் வெள்ளி இரவு தங்கள் பொருட்களைக் கொண்டு வந்து சந்தையில் விற்றுவிட்டு சனி காலையில் காக்கா கடைச் சந்தியில் வைத்து தமது தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவார்கள். பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி சந்தைகள் என்பன அதிவிசேடமாயிருக்கும்.

இப்படியான ஒரு சிறப்புமிக்க குளக்கரை நாகரிகம் இங்கு நிலவியதென்றால் இங்கு குளங்களை அடிப்படையாகக்கொண்ட ஒரு பொருளாதார அமைப்பு நிலவியமைதான். இவற்றில் இரணைமடுக்குளத்துக்கு ஒரு பிரதான பங்கு உண்டு. இது இலங்கையின் ஒரு முக்கிய குளம் என்பது மட்டுமன்றி இதனால் பயன் பெறும் மக்கள் தொகையும் மிக அதிகமாகும்.

இப்படியான ஒரு செழிப்பான நாகரிகத்தின் பல அம்சங்கள் இப்போது காணாமற் போய்விட்டது என்பது தான் மறுக்க முடியாததும், கவலைக்குரியது மான நிலைமையாகும். கிளிநொச்சி சந்தையின் மகத் துவம் உட்பட ஏனைய பல அம்சங்கள் காணாமல் போய் விட்டன. வைக்கோல் லொறி, எருலொறி, விறகு லொறி, மீன் லொறி என எல்லாமே பார்க்க முடியாதவையாகி விட்டன. நெல்லுக் கடைகளைக் காணமுடிய வில்லை. வாழைக்குலைகள் மிளகாய், வெங்காயம் என எவையுமே காணக்கிடைப்பதில்லை. ஆனால் இன்று எஞ்சியிருப்பது இரணைமடுக்குளமும் ஏனைய சிறு குளங்களும் அவற்றின் கீழுள்ள நெல்வயல்களுமே! இப்படியான நிலையில் இரணைமடுக்குளத்துக்கும் ஆபத்து வரும் நிலை ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்து விட்டன. அதாவது இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்சமயம் இரணைமடுக் குளத்திலிருந்து நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் காலப்போகத்தில் முழுமையாக விதைப்பு மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் நீர்ப்பற்றாக்குறை காரணமாக மூன்றில் ஒரு பகுதியோ அல்லது அரைவாசிப்பகுதியோதான் விதைக்கப்படுகிறது. இந்த நிலையில் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் நீர் வழங்கப்படுமானால் கிளிநொச்சி விவசாயத்தின் நிலை என்னவாகும்? கிளிநொச்சி விவசாயிகளின் வாழ்வாதாரம் என்னவாகும்.

இதற்குப் பதிலாக கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் அணை உயர்த்தப்பட்டு மாவலி நீர் திருப்பி விடப்படும் எனக்கூறப்படுகிறது. தற்சமயம் இரணைமடுவில் 34 அடி உயர நீர் தேக்க முடியும். ஆனால் 28 அடி அல்லது 30 அடியே தேக்கப்படுகிறது. காரணம் 1920ஆம் ஆண்டு கட்டப்பட்ட அணை அதிக நீரைத்தாங்கும் வலு உள்ளதாக இல்லை. ஒருமுறை அணையின் நடுப்பகுதியில் நீர்க்கசிவு ஏற்பட்டு அன்றைய நீர்ப்பாசன பொறியியலாளர் தலைமையில் விவசாயிகள் மேற்கொண்ட பெரும் முயற்சியால் அது சீர்செய்யப்பட்டது. மேலும் இரணைமடுவின் நீர்மட்டம் உயரும்போது பின்புறமுள்ள விமான நிலையத்திற்குப் பாதிப்பு ஏற்படுமாதலால் இராணுவம் அதை அனுமதிக்கப் போவதில்லை. மேலும் தற்சமயம் மாவலி நீரில் விவசாயம் மேற்கொள்ளப்படும் 'எல்' வலயம் பலமுறை நீர்த்தட்டுப்பாட்டால் பாதிப்படைந்துள்ளது. இந்நிலையில் இரணைமடுவுக்கு சிறுபோக காலத்தில் எப்படி நீர் வழங்கமுடியும்.

**சந்திரசேகர ஆசாத்**

இரணைமடுவிலிருந்து நீர் வழங்கப்படுவதன் மூலம் 3 இலட்சம்பேர் பயனடைவர் எனக் கூறப்படுகிறது. இதில் 2015 ல் யாழப்பாண மக்களுக்கு 13 வீதமும் கிளிநொச்சி மக்களுக்கு 6.5 வீதமும் குடிநீர் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படியாக ஒரு குறைந்த பகுதியினருக்கு குடி நீர் வழங்க பெரும் பாதிப்பு விவசாயத்தில் ஏற்படுத்தப் படவுள்ளது. தற்சமயம் யாழ்ப்பாண மக்கள் குடிநீர் இல்லாமல் அவதிப்படவில்லை. ஆனால் நிலக்கீழ் நீர் வற்றி வருவதாகவும் கிணற்று நீரில் மலக்கழிவுகள் கலப்பதாகவும் காரணம் கூறப்படுகிறது. ஆனால் அவற்றைச் சீர்செய்ய மாற்றுவழிகள் உண்டு. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டுள்ளன.

இதன் பயனாக தற்சமயம் நல்ல நீர் குடிக்கும் யாழ்ப்பாண மக்கள் குளோரின் கலந்த குழாய் நீர் குடிக்க வேண்டிவரும். அல்லது போத்தல் நீரில் சரணடைய வேண்டி வரும். எப்படியோ குடிநீருக்கே பிறரை எதிர் பார்த்து வாழவேண்டிய அவல நிலை ஏற்படலாம்.

அதே வேளையில் கிளிநொச்சியில் விவசாயம் பாதிக்கப்பட்டு முற்றாகவே குளக்கரை நாகரிகம் அழிந்து போகும் நிலை ஏற்படும். அதுமட்டுமன்றி இந்தியாவில் காவிரி நீர் பிரச்சினை காரணமாக கன்னடத்திற்கும் தமிழகத்திற்குமிடையே மோதல்கள் இடம்பெறுவது போன்று இரணைமடு நீர் காரணமாக யாழ்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் மோதல் ஏற்படுவதும் தவிர்க்க முடியாமல் போய்விடும்.

ஒரு மகிமைவாய்ந்த குளக்கரை நாகரீகத்தை முற்றாக அழிப்பதும் யாழ்ப்பாண மக்களின் தனித்துவத்தை அழிப்பதும் தமிழ் மக்களிடையே மோதல்களை ஏற்படுத்தி ஐக்கியத்தை சீர்குலைப்பதுமே இத்திட்டத்தின் உள்நோக்கமேஒழிய மக்களுக்கு வேறு எதுவித நன்மையும் கிட்டிவிடப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எழுதப்படாத சட்டங்கள்

அன்று ஓர் ஓய்வுநாள், நகர வீதிகளில் இரட்டைத் தட்டு பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. சாவகச்சேரிக்குப் போய் அங்கே எனது நண்பரைச் சந்தித்தபின் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தேன். கீழ்த் தட்டில் நான் அமர்ந்திருந்த, ஆசனத்திற்கு முன்னால் எனக்கு நன்கு தெரிந்த நண்பரொருவர் அமர்ந்திருந்தார். அவருடன் ஒரு புன்னகையைப் பகிர்ந்து கொண்ட நான், அவருக்குப் பின்னாக அமர்ந்து கொண்டேன். பஸ்ஸில் பயணிகள் குறைவாகவே இருந்தனர். மதிய உணவுக்குப் பின்னரான பயணத்தில் எனக்கு ஏற்பட்ட தூக்க மயக்கத்தினால் நண்பர் இருந்த ஆசனத்தில் தலையைச் சாய்த்துத் தூங்கி விட்டேன். பஸ் ஓடிக் கொண்டிருந்தது. எவ்வளவு தூரத்தை அது தாண்டியது என்பதை என்னால் அறியமுடியாத உறக்கத்தில் நான் இருந்தேன். திடீரெனப் படார்' எனக் கேட்ட சத்தம் என்னைத் திடுக்கிட வைத்தது. கண்கள் விழித்துக் கொண்டன. எதிரே பார்த்தேன். என் நண்பர் சொக்கலிங்கம் எழுந்து நிற்பது தெரிந்தது. அவருக்கு அருகான நடைபாதையைத் தாண்டியுள்ள அயல் ஆசனங்களுக்கு இடையே பஸ் நடத்துனர் வீழ்ந்து கிடந்து எழும்புவதும் தெரிந்தது. சொக்கலிங்கம் நடத்துனரைத் தாக்கி விட்டார் என்பதும் புரிந்தது. இந்தச் சந்தடியில் மேற் தட்டில் இருந்த நடத்துனர் பாய்ந்து வந்து சொக்கலிங்கத்தைத் தாக்க முந்தினார். நான் அவர்களுக்கு இடையில் புகுந்து அதனைத் தடுத்தேன். சொக்கலிங்கம் அந்த நடத்துனரைப் பலமாகத் தாக்கியுள்ளார் என்பதாக அங்கு பயணம் செய்த பலரும் பேசிக் கொண்டார்கள். சொக்கலிங்கத்திலேதான் தவறு என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவரோ தனது வாய் வார்த்தைகளால் நடத்துனரை ஏசுவதும் அடிக்க முன்னேறுவதுமாக இருந்தார். பஸ்ஸைச் செலுத்திக் கொண்டிருந்த சாரதிக்கு, நடந்த சம்பவம் பற்றித் தெரிவிக்கப் பட்டதோடு பஸ்ஸைப் பொலிஸ் நிலையத்திற்குத் திருப்புமாறும் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பஸ் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின் அருகில் சென்றதும் சாரதி அதனை நிறுத்த ஆயத்தமாகும் போதே பஸ்ஸிலிருந்து பாய்ந்து இறங்கிய சொக்கலிங்கம் விரைவாகவே நிலையத்திற்குள்ளே சென்றார். பயணிகள் அனைவருமே பொலிஸ் நிலையத்திற்குள்ளே செல்லாமல் ஒவ்வொருவராக அகன்று சென்றார்கள். நிலையத்தின் உள்ளே சென்ற சொக்கலிங்கம் தனது ஆங்கிலப் பேச்சு அனுபவத் திறமையால் அங்கே கடமையில் இருந்த பொறுப்பதிகாரியுடன் உரையாடினார். அந்த பஸ் நடத்துனர்கள் தன்னைப் பலமாகத் தாக்கி விட்டதாக முறைப்பாடு செய்தார். நடத்துனர்கள் இருவருமே இளைஞர்கள். அவர்களுக்கு ஆங்கிலமோ சிங்களமோ தெரிந்திருக்கவில்லை. தமக்குத் தெரிந்த தமிழிலே தமது விளக்கத்தைச் சொல்ல முயன்றார்கள் அவர்களின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள இயலாமல் பொறுப்பதிகாரி தடுமாறினார். ஆனால் அவர்களுக்கு முன்னதாக ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசிய சொக்கலிங்கத்தின் கருத்தையே பொலிஸ் அதிகாரி ஏற்றுக் கொண்டு இரண்டு நடத்துனர்களையும் தடுப்பில் போட்டார். எஞ்சி நின்ற என்னை சாட்சியாக விசாரித்தார். சொக்கலிங்கத்தின் தவறான பக்கத்தில் நிற்பதற்கும் எனது மனம் ஒப்பவில்லை. நான் தூக்கத்தில் இருந்தேன் என்று கூறி உண்மையைச் சொல்ல முன் வரவில்லை. அவர்களும் நியாயத்தை எடுத்து விளக்கும் திராணியற்ற நிலையில் தடுமாறினார்கள். சில



மணி நேரம் வாதப் பிரதிவாதங்களும் இடம் பெற்றன. இறுதியாக நடத்துனர்கள் எதனையும் விளக்கி வலியுறுத்த இயலாமற் தாமே குற்றவாளிகளென ஏற்றுக் கொண்டு சொக்கலிங்கத்திடம் மன்னிப்புக் கேட்டுத் தடுப்பிலிருந்து விடுபட்டு வெளியேறினார்கள். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

குற்றம், சட்டம் என்பவை ஒரு சந்தர்ப்பத்தில் எவ்வாறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லுகின்றன என்பதை எண்ணியபோது மயக்கமே ஏற்படுகிறது. நியாயம் எங்கே என்று தேடிப் பார்க்க முயலும்போது யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியல்லே! அண்டங்காக்கைக்கும் குயில்களுக்கும் பேதம் புரியல்லே! என்ற சினிமாப் பாடல் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

இந்தத் தேசத்தின் பெருமையே நமது அரசியல் சாசனந்தான். மிகப்பெரிய சிறந்த மனித உரிமை ஆவணமாக அதை நம் முன்னோர்கள் வடித்திருக்கிறார்கள் என்கிறார் ஒரு சட்ட நிபுணர். இருந்தாலும் நீதிக்கும் நடைமுறைக்கும் இருக்கின்ற இடைவெளிதான் சட்டத்தைக் காவு கொள்ளுகிறது. ஏட்டில் இருப்பவை அப்படியே நடைமுறைப் படுத்தப் பட்டால் உலகின் தலை சிறந்த நாடாகப் போற்றப்பட வேண்டிய நாடு நமது நாடாகத்தான் இருக்க முடியும். குடிமக்களின் உரிமைகளுக்கு நம் அரசியல் சாசனம் போல கேடயம் வேறு எதுவும் இல்லை. ஆனால் துரதிஷ்டவசமாக இங்கே எழுதப்பட்ட சட்டங்களைவிட எழுதப்படாத சட்டங்களே ஆட்சி செய்கின்றன. தனிமனித சுயநலங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடையில் மாட்டிக் கொண்டு முழிபிதுங்கி நிற்கிறது சட்டம்.

வழிகாட்டும் விளக்காக இருக்க வேண்டிய சட்டங்கள் நமக்கு இருட்டறைகளாகவே இருக்கின்றன. சட்டம் இயற்றும் ஆட்சியாளர்கள், அதை நடைமுறைப்படுத்தும் காவல் துறையினர், அதைக் கண்காணித்து நீதிவழங்கும் நீதிமன்றங்கள், நமக்கு நீதி நிச்சயம் கிடைத்துவிடும் என்கின்ற நம்பிக்கையோடு வாழ்கின்ற மக்கள் எனச் சட்டம் என்பது ஒரு சதுரம்.

தங்களுக்கு ஒருபாதிப்பு வந்தால் அலறி அடித்து மனித உரிமைக்கு எதிராக சட்டம் செயற்படுகிறது என்று அரசியல் வாதிகள் கூப்பாடு போடுவார்கள்.

ஒரு நாட்டு நாகரிகத்தின் அளவுகோல் அதன் சிறைச் சாலைகளின் தன்மையை வைத்தே அறியப்படுகிறது என்று சொல்வார்கள். அந்த அளவு கோலின்படி பார்த்தால் நாம் கற்காலத்திலேயே இருக்கிறோம். நம்நாட்டில் சிறைச் சாலைகள் மனித உரிமைக்கு எதிரான அமைப்பாக இருக்கின்றன. மனிதத் தன்மை இன்றி நடந்து கொள்ளும் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு தந்து கௌரவப் படுத்துகிறார்கள். ஆள்பவர்களை மகிழ்ச்சியடையச் செய்து அவர்தம் பலனை அடைய அதிகாரிகள். அப்பாவிகளின் உயிரையே பணயம் வைக்கிறார்கள். இன்னொரு பக்கம் சாதாரண வரப்புப் பிரச்சனைக்குச் சட்டத்திடம் தீர்வு தேடிப்போனால் வயலையே இழக்கவேண்டி இருக்கிறது. ஆடு திருட்டுப் போய் விட்டது என்று வழக்கறிஞரிடம் போனால் பசு மாட்டை விற்றுத் தீர்ப்புப் பெற வேண்டி இருக்கிறது. வாதிடுவதற்கு அங்கியை உடுத்தும் போதே மனச்சாட்சியைக் கழற்றித் தூர எறிந்து விட்டுத்தான் 'கனம் கோட்டார் அவர்களே' என்று ஆரம்பிக்கிறார்கள் ஒரு சிலவழக்கறிஞர்கள் என்கிறார் ஒரு சட்டவாதி

"நான் சொல்வதெல்லாம் உண்மையே தவிரப் பொய் ஒன்றுமில்லை" எனக் கூண்டில் ஏறிய ஒருவனைச் சத்தியம் செய்யுமாறு கேட்டபோது அவன் "என்னையா சாட்சிக்கூண்டுக்குள்ளே வந்த உடனேயே பொய்யைச் சொல்லும்படி சத்தியம் பெறுகிறீர்களே!" என்றானாம் ஒரு சாட்சி. சட்டத்தின் பெயரிலான எல்லா அத்துமீறல்களுக்கும் பின்னே மக்களின் அறியாமை இருக்கிறது. காவல் நிலையத்தையும் நீதிமன்றத்தையும் அநேக மக்கள் அச்சத்துடனே வணங்குகிறார்கள். அடிப்படையான சட்ட அறிவு மக்களுக்கு அவசியமாகும். எரிவது நின்றால் புகைவதும் நிற்கும். ஏமாறுவது குறைந்தால் ஏமாற்றுவதும் குறையும். அப்போது சட்டம் ஒரு இருட்டறையாக இருக்காது. தவறுகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் வல்ல வெளிச்சம் வீசும் விளக்காகச் சட்டம் மாறும் வகையில் எமது அறிவீனங்களிலிருந்து நாம் வெளியேறுவோம். துணிச்சலோடு நீதிக்காகவும் நேர்மைக்காகவும் போராடுவோம்.

நெடுந்தீவு மகேஷ்

# அறிவற்றோர் சாதனைகள் பதரே என்கிறார்



கவிஞர் ஏ.இக்பால்

*உழைக்காமல்*
*வருமதி பத்தால்*
*உயர்நின்று பள்ளத்தை பார்ப்பர்*
*தெளிவான பார்வை யற்றோரே*
*திணறியே குருடரா யலைவர்*
*தலைக்கேறும் தடு மாற்றத்தாலே*
*தன்னிலை யுணராது புரள்வர்*
*நிலைக்காத ஆக்கங்கள் செய்து*
*நிறைவேறா ஆசையால் துடிப்பர்.*

தெளிவான பார்வையின்றி நிலைக்காத இலக்கியங்களை எழுதி நிறைவேறாத ஆசையோடு அலைபவர்கள் இந்த முதலாளி வர்க்க இலக்கியவாதிகள் என்கிறார் கவிஞர்

*ஆளில்லாப் பாழ்வீடு போல*
*அவராக்கம் வாசிப்போ ரில்லை*
*தாழ்வினால் தன்மானம் வீழாத்*
*தறுதலைக் கூட்டத்துள் வாழ்வார்*
*பேரில்லா திருப்பதால் ஆடும்*
*பேய்க்கூத்து யாரிதைப் பார்ப்பார்*
*நீரில்லாப் பஞ்சத்தால் வாடும்*
*நீர்க்கோழி நிலையிவர் கோலம்.*

அவர் எழுதும் ஆக்கங்கள் ஆளில்லா வீடு போல எவரும் விரும்பிப் புகுவதற்கு ஏற்றதாக இல்லை. அது போல அவரது இலக்கியங்களையும் எவரும் வாசிப்பதில்லை. எல்லமே அவர்களின் பேய்க் கூத்துக்களே என்கிறார் இவர்.

*அவரைப்போல் இவர் எழுதுவாரா?*
*அவரிடம் சிஷ்யர்கள் இல்லை*
*தவறுகள் திருத்திட முனையும்*
*தவகுரு அவருக்கே இல்லை*
*நவயுல கின்றிங்கே நாடும்*
*நல்லவை செய்திட முனையார்*
*இவற்றையே சேர்த்திங்கே நின்று*
*எதையுமே சாதிக்க மாட்டார்*

தவறுகளைத் திருத்தும் வகையில் அவருக்கு நல்லவை கூறும் தலைவரும் இல்லைச் சீடர்களும் இல்லை. நல்லவற்றைச் செய்யவும் இவரால் இயலாது சாதனைகள் எவற்றையுமே இவரால் இயற்றவும் இயலாது என்பது அவரது கருத்து

*இயல்பான கவித்துவ மற்றோர்*
*எழுத்தென்னும் கணக்கிலே முயல்வர்*
*அயலாரைப் பார்க்காத அற்பர்*
*அளப்பதற் கில்லாத தலைவர்*
*சுயமாக இவற்றையே அடக்கிச்*
*சுவர்க்கத்துள் ளிருப்பதாய் நினைப்பர்*
*அயராது இவர்செய்த உழைப்போ*
*அறிவற்ற சாதனைப் பதர்கள்*

இயல்பான கவித்துவம் இல்லாத கவிஞர்கள் எழுத்தெண்ணி எழுதும் எழுத்தாளர்கள் இவர்களின் எழுத்துகள் அறிவற்றோர் எழுதும் நிபதர்களே! என்கிறார் கவிஞர் ஏ.இக்பால் முற்போக்குச் சிந்தனை மிக்கவர் தமிழுல கெங்கும் நன்றே அறியப்பட்ட இலக்கியப் பேரறிஞன் அவரது ஆக்கங்கள் அழியா வரம் பெற்றவைகளாகும் அவர் தமது தொடரும் இலக்கியப் பயணத்தால் தமிழுலகை மேலும் அலங்கரிக்க வேண்டுகிறோம்.

மைதிலி தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மைச் சர்வாதிகாரம் செய்யக்கூடிய தீங்கு!

■ தமிழில் ஜஸ்ரின்

அரசியலமைப்பு குறித்த நெருக்கடி நிலை எந்தவிதத்திலும் இன்னமும் ஓய்ந்துவிடவில்லை. சட்டத்தின் நடைமுறைகளில் கடைப்பிடிக்கப்படும் ஒரு சில நிர்ப்பந்தங்கள், மற்றும் வலுக்கட்டாயங்கள் குறித்தோ அல்லது எமது காலத்தின் பெருமையான அரசியல் தொலைநோக்குகள் குறித்தோ நாங்கள் அளவு கடந்த விதத்தில் சிந்தித்தல் கூடாது.

சட்டம் என்பது பல வருடங்களாகவே இங்கு கழுதை போன்றே இருக்கின்றது. அதனால் தான் சில சமயங்களில் பலர் 'சட்டம் ஒரு கழுதை' எனக் கூறுகின்றனர் போலும்.

அக்காலத்திலிருந்து தற்காலம் வரையில் பல்வகைப்பட்ட நம்பமுடியாத, கற்பனை செய்யவே இயலாத மனதைத் தடுமாற வைக்கும் தொலைநோக்காளர்களின் அரசியல் ரீதியானநோக்குகள் அமைந்திருந்தன. நாங்கள் லெனின், ஸ்டாலின், மாவோ சேதுங், கடாபி, காஸ்ரோ மற்றும் ஆயத்துல்லா கொமெய்னி போன்ற தலைவர்களின் சிந்தைனைகள் பற்றி மட்டுமே இங்கு குறிப்பிடுகின்றோம்.

லெனின் மற்றும் மாவோ சேதுங் ஆகியோரின் சிந்தனைகளின் நூற்தொகுதிகள் வாசிப்பாரின்றி நூலகங்களின் நூற்குவியல்களுக்குள் கிடக்கின்றன. கடாபி போன்ற ஏனையோரின் சிவப்பு, பச்சை எனப் பல்வேறு நிறங்களைக் கொண்டதான சிறிய நூல்கள் யாவும் கழிவுக் கூடைகளில் பல வருடங்களுக்கு முன்பதாகவே வீசியெறியப்பட்டுவிட்டன.

தற்போதையதலைவர்கள், அவர்களது வாய்களில் இருந்து வெளிவிடும் சொற்கள் அவர்களின் மதிநுட்பமான ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்தும் முத்துக்கள் போன்றவை எனும் ஓர் போலியான நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அவை யாவும் செயல்முனைப் பற்றவையானதான ஓர் முடிவினையே எய்துகின்றன என்பதையே இங்கு சுட்டிக் காட்டுகின்றோம்.

ஓர் நல்ல ஜனநாயக மக்களாட்சி என்பது அரசியலமைப்புச் சட்டங்கள் மற்றும் அரசியல் தொலைநோக்குகள் என்பவற்றிற்கு அப்பால், மேலும் அவைகளுடன் ஒன்றுபட்டு வளர்ச்சியுறும் ஓர் கலைத்துறையாகும். அதுமட்டுமன்றி நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு அவரவர் மனங்களின் நம்பிக்கைகளைத் தியாகம் செய்தும், கருத்தொற்றுமையுடன் விட்டுக்கொடுத்தும் சமரச உடன்பாடுடைய தீர்மானங்களைச் சில வேளைகளில் எடுக்கவேண்டிய ஓர் கலைத்துறையுமாகும்.

இன்றைய சிறீலங்காவின் அவலநிலையும் அதுவேயாகும். சட்டக் கழுகுகள், அரசியல் பண்டிதர்கள் மற்றும் அவர்களின் சகாக்கள் என்போர் மன்னராட்சி காலத்தில் இருந்து இற்றை நாள் வரையிலும் நாட்டினை ஆள முயற்சிக்கும் எவரும் ஓர் நல்லாட்சிக்கான அத்தியாவசிய மூலக்கூறான இதனை உணரவேயில்லை. திடீரென உயர்பதவிகளுக்கு வந்த அற்பர்களும், புத்திக் கூர்மையுள்ள தலைவர்களாயினும் சரி இன்று வரைக்கும் நாட்டின் நலனுக்கான ஓர் உடன்பாட்டினைப் புரிந்து கொள்ளவேயில்லை.

இத்தகைய இணக்கமற்றதும், சமாதானத்திற்கு இடங்கொடாததுமான மனப்பான்மை மென்மேலும் தொடருமேயாயின் நீர் கொதித்து நீராவியாவது போன்று, சிறீலங்கா ஓர் அரசியல் ரீதியான சங்கடமான நிலையை நோக்கிச் செல்வதை உறுதி செய்வதாகவே இருக்கும். தற்போதைய அரசியலமைப்பு நெருக்கடி நிலைமைகள் எம்மை நேரடியாகவே ஜனநாயகத்தின் மூலாதாரங்களின் அடிவாரத்திற்கே இட்டுச் செல்கின்றன.

ஜனநாயகம் என்பது நாட்டு மக்களின் அரசாங்கம் ஆகும். அத்துடன் அவர்களே அதன் நிறைவேற்று நிர்வாகம், சட்ட மன்றம் மற்றும் நீதித்துறை போன்ற சகலத்திலும் உச்ச உயர் நிலையைக் கொண்டிருக்கின்றனர். ஜனநாயகத்தில் எதுவித சந்தேகங்களுக்கும் இடமின்றி மக்களே அதன் உயர் உச்ச நிலையில் இருக்க வேண்டும். ஆனால் அதே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அதனைக் கவனமாக சரிவரச் செய்கின்றனரா?

நவீன ஜனநாயகத்தில் பெரும்பாலும் நாடாளுமன்றம் என்பது உயர் அளவான செல்வாக்குடைய ஓர் அடிப்படையான மூலாதாரமாகக் கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாக விளங்குகின்றது.

ஆனால் கடும் போக்காளர்களும் சட்டத்தின் முன்குற்றவாளிகளாகக் கருதப்படும் குற்றவாளிகளும் அத்துடன் உண்மையான போக்கிரிகளும் கூட்டாக இணைந்து மக்களின் அடிப்படையான உயர் நிலைக்கருத்திற்கெதிராகச் செயற்படுவது உலகின் வேறெங்காவது இடம் பெறுகின்றதா? இன்றோ நாடாளுமன்றம் பெருமளவில் குற்றவாளிகள் வந்து ஓய்வெடுப்பதற்காகக் குந்தியிருக்கும் இடமாக வந்துவிட்டது.

பிறரால் பெரிதும் மதிக்கப்படும் மேன்மை வாய்ந்த கருத்துரையாளரான இந்தியரான குல்தீப் நாயர் போன்றோர் உலகின் ஜனநாயக மக்களாட்சிகளில் பெரிதளவில் குற்றவாளிகள் நுழைந்துவிட்டனர் எனக் குறிப்பிட்டது போன்று இது ஓர் கவலைக்குரிய உண்மையாகும்.

இந்திய நாடாளுமன்றம் போன்று முதிர்ச்சியடைந்த வேறு பல ஜனநாயக நாடுகளிலும், இத்தகைய நிலமைகள் எதிர் காலத்தில் வேறொன்றின் மீது தாக்கங்களை ஏற்படுத்தியமைக்கான ஆதாரங்கள் இருக்கவே செய்கின்றன.

அப்பட்டமான குற்றவாளிகளையும் அத்துடன் மற்றவர்களுக்கு அதிர்ச்சியூட்டும் விதத்தில் நாணமற்ற, கேலிக்குரிய செயல்களையும், அவர்களின் ஆதாயத்திற்காக நேர்மையற்ற வழிகளில் பதவிகளையும் பயன்படுத்தும் போக்கிரிகளையும் ஆட்சியில் உயர் நிலையில் உள்ளவர்களென ஓர் நாடாளுமன்றத்தினால் பிரகடனப்படுத்த முடியுமா? அங்கு கூடப் பெரியளவிலான தாக்கங்கள் உள்ளன.

அரசியலமைப்புச் சட்டத்தின் கர்த்தாக்கள் என்போர் மக்களின் உயர் நிலைச் செல்வாக்கை உறுதிசெய்யும் பொருட்டு, அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஒவ்வொன்றின் மீதும் முழுமையான அதிகாரத்தை வழங்குவதனூடாக, அவர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொள்வதன் மூலமாக நாடாளுமன்றில் ஆணைப் பெண்ணாக மாற்றுவதைத் தவிர்த்து ஏனைய யாவற்றையும் செய்துவிடலாமெனக் கருதுகின்றனர். அந்தப் பெரும்பான்மை அதிகாரமே அபிவிருத்தியடைந்து வரும் ஜனநாயகத்திற்கு அழிவுகளை உண்டாக்குகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சிறீமாவோ பண்டாரநாயக்கா கூட்டாட்சி செய்த 1972 காலப்பகுதியிலிருந்து அரசியலமைப்பின் கீழ் சிறீலங்கா இதற்கான அனுபவத்தை முதலில் பெற்றுக்கொண்டது. மக்களுக்கு அதிகாரம் மற்றும் சமதர்மக் கோட்பாடு என்ற கோஷங்களின் கீழ் அந்நேரத்தில் பெரிதும் வெற்றிகரமாக இயங்கி வந்த நிறுவனங்களைப் பிறருக்கு வழங்கியதன் மூலமாக நிலைப்படுத்தப்பட்டன.

நாட்டிற்கு வியக்கத்தகு விதத்தில் பொன்முட்டைகளை இட்டுக் கொண்டிருந்த பெருந்தோட்டங்களை, சொத்துக்களை குறைந்தளவிலான நஸ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கியதன் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டதானது. அனைத்தையும் பாழடித்ததுடன் அத்துறைகள் சார்ந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை நாட்டை விட்டு வெளியேறவும் செய்யும் அளவிற்குப் பின்விளைவை உண்டு பண்ணியது.

சிறீமாவோ பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்ட துரதிர்ஸ்டத் தேரின் மீது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் சவாரி செய்தார். அவரும் பெருமளவிலான பெரும்பான்மையைப் பெற்றார். அத்துடன் அவர் சிறீமாவோ செய்ததைச் செய்யாது அதனைவிடவும் மோசமானதைச் செய்தார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைச் சர்வாதிகாரம் நாட்டிற்குப் பேரழிவைக் கொண்டுவந்துவிட்டது. அத்துடன் அது இன்னமும் தொடர்கின்றது.

சுதந்திரங்கள் யாவும் அடக்கப்பட்டு விடுகின்றன. மக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் காணாமற்போகின்றனர்.

இவையாவும் மக்களுக்கான உயர் நிலையான ஜனநாயகம் என்ற பெயரிலேயே நடக்கின்றதென்பதே உண்மை. ஜனநாயகத்தில் முதன்மை நிலையில் இருக்கவேண்டிய மக்களை மூடர்களாக்கும் எடுத்துக்காட்டான நிகழ்வுகளே இடம்பெறுகின்றன. மக்களை நல்வழியில் நடத்திச் செல்வதும், அதற்கான வழிகாட்டலும் அரசியல் தலைவர்களின் தலையாய கடமையாகும். ஆனால் ஜனநாயகம் போக்கிரித் தனத்தை செய்யும் தலைவர்களின் கையில் இருக்கையில் சிறீலங்காவின் ஜனநாயகம் மற்றும் சிறீலங்காவின் எதிர்காலம் குறித்துச் சொல்வதற்கே கவலையாக இருக்கின்றது.

**சண்டேலீடர் 25/11**



**“ஓர் நல்ல ஜனநாயக மக்களாட்சி என்பது அரசியலமைப்புச் சட்டங்கள் மற்றும் அரசியல் தொலைநோக்குகள் என்பவற்றிற்கு அப்பால், மேலும் அவைகளுடன் ஒன்றுபட்டு வளர்ச்சியுறும் ஓர் கலைத்துறையாகும். அதுமட்டுமன்றி நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு அவரவர் மனங்களின் நம்பிக்கைகளைத் தியாகம் செய்தும், கருத்தொற்றுமையுடன் விட்டுக்கொடுத்தும் சமரச உடன்பாடுடைய தீர்மானங்களைச் சில வேளைகளில் எடுக்கவேண்டிய ஓர் கலைத்துறையுமாகும்.”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

05, டிசெம்பர் - 11 டிசெம்பர், 2012

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 -5

E-mail: editorial@sudaroli.com

# எது பயங்கரவாதம்?

பல்கலைக்கழக விடுதிகளுக்குள் படையினர் அத்துமீறி புகுந்ததும், அங்கு அவர்கள் நடந்து கொண்ட விரும்பத்தகாத நடவடிக்கைகளும் சரியானதா? அவர்கள் இவ்வாறு அத்துமீறி நடந்துகொள்ள அனுமதித்தது யார்? என்கின்ற கேள்விகள் அரசாங்கத்தை நோக்கி கேட்கப் படுகின்ற வேளையில் அதற்கான முறையான பதில்கள் இல்லை. கேள்விகளுக்குப் பதில் தேடும் நடவடிக்கைகளும் இல்லை. இது எதிர்பார்க்கப்பட்டதே.

ஆனால், தவறுகளைத் தட்டிக்கேட்கும் ஜனநாயகப் போராட்டங்கள் வன்முறை மூலமாக ஒடுக்கப்பட்டு அதனை மேற்கொண்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கைது செய்யப்படுவதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் வழிசமைத்துக் கொடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர், கலைபீடத்தின் மாணவர் சங்கத் தலைவர், விஞ்ஞான பீடத்தின் மாணவர் சங்கத் தலைவர், உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். படையினர் பல்கலைக்கழக விடுதிக்குள் அத்துமீறிப் புகுந்தமைக்கெதிராகப் போராட்டம் நடத்தியமைதான் இவர்களின் கைதுகளுக்கு உண்மையான காரணமாகவிருந்தாலும்,

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இருந்த அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகம் மீது பெற்றோல் குண்டு வீசியமை, விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறான அச்ச சூழ்நிலையில் இன்று மாணவ மாணவிகள் தங்கள் விடுதிகளை விட்டு வெளியேறிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களின் பெற்றோர் மட்டுமல்லாது யாழ்ப்பாண மக்கள் அனைவருமே கலவரமடைந்த மனநிலையில் உள்ளனர். இன்று பல்கலைக்கழக வளாகச் சுழலில் படையினர் சூழ்ந்துள்ளனர். போர்க்காலங்களில் இருந்தது போன்றதொரு சூழல் மீண்டும் நிலவப் போகின்றதா என்கிற பதற்றநிலை எழுந்துள்ளது.

நாட்டில் அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்களும், ஆர்ப்பாட்டங்களும் தென்பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன. தென்பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் நடைபெறுகின்றன. ஆனால் தமிழர் பிரதேசங்களில் அவை நடைபெறுகின்ற போது பயங்கரவாத முத்திரை குத்தப்படுகின்றது. அதனை முன்னின்று நடத்துகின்றவர்கள் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர். அதற்கான காரணங்களையும் படைத்தரப்பே உருவாக்கியும் விடுகின்றது. படைதரப்பினர் இதற்காக நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளவர்கள் போலவே நடந்து கொள்கின்றனர்.

அண்மைக்காலங்களில் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பலவேறு அத்துமீறல்களுக்கு எதிராக பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக வழிமுறையிலான போராட்டங்களின் போது, அவற்றை புலிகளின் ஆதரவாளர்கள் நடத்துவதாக காண்பிக்க அத்தருணங்களில் புலிகொடிகளை அசைத்துக்காட்டிச்சென்ற சம்பவங்கள் பலதடைவைகள் நடைபெற்றுள்ளன. ஆனால் அவ்வாறு செய்தவர்கள் யார் என்பது வெளிப்படையாக தெரிய வர அந்த நடவடிக்கைகள் பிசுபிசுத்துப் போய்விட்டன.

பல்கலைக்கழக மாணவர்களை குற்றவாளிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்க ஏன் படைதரப்பே சில காரியங்களை செய்திருக்க முடியாது என்கிற சந்தேகம் இச்சம்பவங்கள் மூலமாக எழுகின்றன.

எவ்வளவு பெரிய குற்றவாளிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் இருந்தாலும் சரி அவர்கள் அரசாங்கத்தை கண்மூடித்தனமாக ஆதரிக்க முன்வந்தால் அவர்கள் தங்கள் குற்றங்களிலிருந்து தப்பிக் கொள்வது மட்டுமல்லாமல், அவர்களுக்கு பதவிகளும் சுகபோக வாழ்வும் பரிசாக அளிக்கப் படுகின்றன. விமர்ச்சிப்பவர்கள், தவறுகளைத் தட்டிக் கேட்பவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். இதுதான் இன்று இலங்கைத் திருநாட்டின் ஜனநாயக நடை முறையாகவுள்ளது.



# அன்று சொன்னது!

நீண்ட காலத்திற்குப் பிறகு சந்தித்த தமிழ் புத்திஜீவி ஒருவர் பல விடயங்களை என்னோடு பகிர்ந்து கொண்டார். முக்கியமாக இலங்கை அரசியல் பற்றி அவர் மிகவும் கவலையுடன் சில விடயங்களைக் கூறினார். தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்து நம்பிக்கை இழந்த நிலையில் அவர் காணப்படுகிறார் என்பதை அவரின் கருத்துக்களின் மூலம் புரிந்து கொள்ள முடிந்தது. போரின் பின் தமிழ் மக்களுக்கு நியாயமானதொரு தீர்வு வரும் எனத் தான் நம்பியதாகவும் ஆனால், அதற்கான நிலைமைகள் இல்லை எனவும், நிலைமைகள் நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை முன்னர் கடுமையாக விமர்சனம் செய்தவந்தவர் அவர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அவர் இப்போது கூறிய வார்த்தையொன்று என்னை சற்று வியப்பிற்குள்ளாக்கியது.

அவர் சொன்னார் "அந்தமனிதர் அப்போது சொன்னது சரிதான்" என்று. முதலில் எனக்கு விளங்கவில்லை. அவர் என் முகத்தைப்பார்த்து விட்டு அந்த மனிதரின் பெயரை உச்சரித்த போதுதான் வியப்பேற்பட்டது.

ஆயுதப்போராட்டத்தை தமிழ் மக்கள் மத்தியிலுள்ள இளைஞர்கள் கையிலெடுத்ததற்கான காரணிகளை யாரும் மறுக்கமுடியாது. ஆனாலும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்களின் வழிமுறைகள் பலராலும் விமர்சிக்கப்பட்டே வந்துள்ளன. தமிழ் புத்திஜீவிகள் பலர் ஆயுதமேந்திய இயக்கங்கள் குறித்து பகிரங்கமாகவே விமர்சனங்களை வெளியிட்டு வந்தனர். அவ்வாறு விமர்சித்த சிலர் கொல்லப்பட்டமையும் மறக்க முடியாது. சிலர் உயிர்த்தப்புவதற்காக வெளிநாடுகளுக்கும் ஓடினர்.

எல்லா இயக்கங்களும் செயலிழந்து போக, கடைசியாக விடுதலைப் புலிகளே ஆயுதப்போராட்டத்தை தனித்து நின்று நடத்தி வந்தமையும், அதன் இறுதி முடிவையும் இங்கு விபரிக்கத் தேவையில்லை.

தனித்து நின்று கடுமையான முறையில் போராட்டத்தை நடத்திவந்த விடுதலைப்புலிகளும் தமிழ் புத்திஜீவிகள் சிலரால் கடுமையான விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்டனர். சமாதானத்திற்கான வாய்ப்புக்களை எல்லாம் புலிகள் தவறவிட்டனர் என்கிற விமர்சனம் சிலரால் கடுமையாக முன்வைக்கப்பட்டது. இறுதியாக சர்வதேசத்தின் மத்தியஸ்த்தத்துடன் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை புலிகள் சரியான வகையில் பயன்படுத்தியிருந்தால் இன்று இவ்வாறான இழப்புக்கள் ஏற்பட்டிருக்காது. மாறாக தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஏனெனில் அது தமிழ் மக்கள் ஏதோவொரு விதத்தில் பலமாக இருந்த காலம். ஆனால் புலிகள் அரசியல், இராஜதந்திரம் என்பனவற்றை விடவும் ஆயுதத்தில் மட்டுமே அதீத நமபிக்கை வைத்தனர். மாறிவரும் உலகஒழுங்கு பற்றியெல்லாம் புலிகளின் தலைமை சிந்திக்கவில்லை.

இவ்வாறெல்லாம் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் கூட விமர்சனங்கள் தொடர்கின்றன. இவற்றில் பலவற்றை மறுப்பதற்கில்லை. நோர்வேயின் மத்தியஸ்த்தத்துடன் சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சர்வதேச ஊடகவியலாளர் மாநாடொன்றை கிளிநொச்சியில் நடத்தினார். அதில் அவரிடம் ஊடகவியலாளர்கள் பலதரப்பட்ட கேள்விகளை கேட்டனர். எல்லாவற்றிற்கும் அவர் பதிலளித்து கொண்டிருந்தார். அப்போது ஒரு தமிழ் ஊடகவியலாளர் கேட்டார் "நீங்கள் உங்கள் தமிழீழம் என்கிற தனிநாட்டுக்கான போராட்டத்தை கைவிட்டால் உங்கள் உறுப்பினர்களே உங்களைச் சுடலாம் என்று கட்டளையிடுள்ளீர்களாமே" என்று.

அதற்கு பிரபாகரன் சொன்ன பதில் "ஆம் அது இப்போதும் நடைமுறையிலுள்ளது" என்பதுதான் அந்த பதிலை எத்தனை பேர் முக்கியமானதாக கவனித்தார்கள் என்பது தெரியாது. ஆனால் சில தமிழ் ஊடகவியலாளர்கள் மாநாடு முடிந்ததும் அதைப்பற்றி கதைத்துக்கொண்டார்கள். அதாவது சமாதான ஒப்பந்தமும் அதன் வழியாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபடுவதும் தனிநாட்டுக்கானதல்ல. அதற்கு மாற்றாக ஒரு தீர்வினைக் காண்பதற்காகத்தான். ஆனால் புலிகளின் தலைவரின் பதில் அவர் அவரது இலக்கிலிருந்து மாறவில்லை என்பதையே வெளிப்படுத்தியது. அவர் இலங்கை அரசாங்கம் எந்தவொரு தீர்வினையும் வழங்காது என்பதில் உறுதியாகவே இருந்திருக் கின்றார் எனடபதையும் உணர முடிந்தது.

ஆனாலும். அவரது தீர்மானங்கள், நடவடிக்கைகள் எல்லாம் அவரின் எதிர்பார்ப்பிற்கு மாறாகவே விபரீதமான முறையில் நடந்து முடிந்து விட்டன. புலிகள் மட்டுமல்ல முழுத் தமிழர்களுமே தோற்கடிக்கப்பட்ட இனமாக பெரும்மான்மையினரால் இன்று பார்க்கப்படுகின்றனர். இதன் காரணமாகவே புலிகளின் நடவடிக்கைகள் இன்றும் தமிழர்களின் ஒரு சாராரினால் விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன.

இன்று போர் முடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்களுக்கு சிறிதளவிலான அதிகாரத்தைக்கூட வழங்க அரசாங்கம் தயாராக இல்லாத நிலையில், புலிகளையும் ஆயுதம் தாங்கிய வன்முறைப் போராட்டத்தையும் கடுமையாக விமர்சித்து வந்தவர்கள் கூட புலிகளின் தலைவர் அடிக்கடி கூறும் வாசகம் ஒன்றை இப்போது நினைவுபடுத்திக் கொள்கின்றனர். அவர் தனது போராளிக்ளிடமும் தளபதிகளுடனும் அடிக்கடி கூறும் வாசகம் 'தான் தமிழீழப் போராட்டத்தைக் கைவிட்டால் கூட இலங்கை அரசாங்கம் ஒரு போதும், எதனையும் தமிழருக்குத் தரப்போவதில்லை' என்பதுதான்.

தனது ஆயுதப்போராட்டத்தை நியாப்படுத்துவதற்காக அவ்வாறு கூறினார் என்று அப்போது பலரும் எண்ணினர். இப்போது புலிகளைப் பிடிக்காத, புலிகளின் போராட்டத்தை விமர்சனம் செய்தவர்கள் கூட அந்த வாசகத்தை நினைவுபடுத்திப் பார்க்கும் காலம் ஒன்று ஏற்பட்டுள்ளது. புலிகளின் அடையாளத்தையும். அவர்களின் நினைவுகளையும் தமிழ்மக்களின் மனங்களிலிருந்து வேரோடு களைய வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தும் இலங்கை அரசாங்கம் அதற்கான மாற்றுத்திட்டம் ஒன்றையும் வழங்காத வரை புலிகளை கடுமையாக விமர்சனம் செய்தவர்களின் மனங்களிலிருந்து கூட மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பது தான் யதார்த்த உண்மையாகும்.

தயாபரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்றுபட்ட இலங்கைக்குள் நல்லதொரு தீர்வு அமையும்போது அந்தத் தீர்வானது முஸ்லிம் மக்களுக்கும்தான் என்பதை முஸ்லிம் அரசியல்வாதிகள் ஏன் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. அது ஏன் இன்னும் முஸ்லிம் மக்களுக்குத் தெரியவில்லை. முஸ்லிம்களுக்கும் சேர்த்துத்தான் தமிழர்கள் அதிகாரப் பரவலாக்கல் கோருவதை முஸ்லிம்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.**

எம்.எம்.நிலாம்டீன்
அட்டாளைச்சேனை.

# தமிழர் கோரும் அதிகாரம் முஸ்லிம்களுக்கும்தான்!

சாத்வீகமாகவும் ஆயுத ரீதியாகவும் தமிழர் நடாத்திய போராட்டங்களின் மூலமாக கேட்கப்பட்ட, கோரப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் என்பது வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களுக்கும்தான் என்பதை முஸ்லிம்களும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஏற்றுக் கொள்வதாக இல்லை. மீள்குடியேற்றம், ராணுவ வெளியேற்றம், அதிகாரப்பரவலாக்கம், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் சர்வதேசம் வலியுறுத்தும் கோரிக்கைகள் அத்தனையும் முஸ்லிம்களுக்கும்தான் என்பதை முஸ்லிம் சமூகம் உணரவேண்டும். அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளையும் முஸ்லிம்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் என்பது வடகிழக்கு வாழ் மூன்று இனங்களுக்கும் சொந்தமானது. யாரும் யாரையும் அடிமையாக்கக் கோரும் கோரிக்கையல்ல. தலை நிமிர்ந்து வாழ்வதற்காக, அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறுவதற்காகவே தமிழ்த் தேசியம் உரிமை கேட்டு நிற்கின்றது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் எந்தத் தீர்வு அமைந்தாலும் அந்தத் தீர்வு முஸ்லிம்களுக்கும் உரித்தானதுதான். இந்த விடயத்தில் முஸ்லிம்களும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஏன் எதிர்க்கின்றார்கள் என்பதை முஸ்லிம்கள் உணர வேண்டும்.

தமிழர்களின் தியாகப் போராட்டம்தான் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் உருவாக்கியது அதன் மூலமாக மாகாணசபை அமைந்ததும் கிழக்கு மாகாணசபை அமைந்த பின்பு மாகாண அமைச்சர்கள், முஸ்லிம் முதலமைச்சர் அவர்களின் படைபட்டாளம் என்று தமிழர்களை விட முஸ்லிம்களே அதிகளவு நன்மைகள் பெற்று வருகின்றார்கள். ஆக தமிழர்கள் கேட்கும் அத்தனை உரிமைகளிலும்



சுகம் அனுபவிப்பது முஸ்லிம் அரசியல்வாதிகள்தான் இது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் அந்த மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பிடுங்கும் தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்குவது முஸ்லிம் அரசியல்வாதிகள் தான்.

சிறுபான்மை மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் செய்ய வேண்டும் என்று சர்வதேசம் இலங்கையை கேட்கும்போது அதனை எதிர்த்து நிற்பவர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள் தான். சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் மூலம் நன்மையடையப்போவது முஸ்லிம்களும்தான் என்பதை முஸ்லிம்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். மாகாண சபை உருவாக்கம் என்பது தமிழ் மக்களின் குருதியின் மூலம் பெறப்பட்டதாகும் என்பதை முஸ்லிம்களால் மறுக்க முடியுமா? அப்படிப் பெறப்பட்ட கிழக்கு மாகாண சபையில் ஒரு தமிழர் கூட அமைச்சராக கிடைக்கவில்லையே. இதற்கான முழுப் பொறுப்பும் முஸ்லிம் காங்கிரசையே சாரும்.

அதிகாரப் பரவலாக்கல் என்கின்றபோது முஸ்லிம் அரசியல் வாதிகளும், முஸ்லிம் நாடுகளும் எதிர்ப்பதன் நோக்கம்தான் என்னவென்று தெரியாமல் உள்ளது. முஸ்லிம்களின் பிரச்சினைகள் என்னவென்று முஸ்லிம் நாடுகளுக்கு இன்னும் தெரியாமல் உள்ளது. முஸ்லிம் நாடுகள் முஸ்லிம் அரசியல்வாதிகளால் பிழையாக நடாத்தப்படுகின்றன. தமிழ் முஸ்லிம் உறவுகளை மேம்படுத்தக்கூடிய முஸ்லிம் அரசியல் புதிய அணியொன்று அமைகின்றபோது முஸ்லிம் நாடுகளிடம் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை நன்கு புரிய வைக்கலாம். தெளிவுபடுத்தலாம்.



ஒன்றுபட்ட இலங்கைக்குள் நல்லதொரு தீர்வு அமையும்போது அந்தத் தீர்வானது முஸ்லிம் மக்களுக்கும்தான் என்பதை முஸ்லிம் அரசியல் வாதிகள் ஏன் இன்னும் புரிந்துகொள்ளவில்லை அது ஏன் இன்னும் முஸ்லிம் மக்களுக்குத் தெரியவில்லை. முஸ்லிம்களுக்கும் சேர்த்துத்தான் தமிழர்கள் அதிகாரப் பரவலாக்கல் கோருவதை முஸ்லிம்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மீள்குடியேற்றம் செய்யவேண்டும் என்று சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.ஆனால் இதை எதிர்பார்ப்பதற்காக முஸ்லிம் அரசியல் வாதிகள் வரிந்துகட்டிக்கொண்டு முஸ்லிம் நாடுகளையும் இணைத்துக்கொண்டு கோதாவில் இறங்குவதன் நோக்கம் என்ன. எல்லாமே சுயநலம்தான்.

சர்வதேச அழுத்தங்களால் கிடைக்கப்போகும் நன்மைகள் முஸ்லிம்களுக்கும்தான் என்று தெரிந்து கொண்டும் இலங்கையிலுள்ள முஸ்லிம் அரசியல் வாதிகள் எதிர்த்து நிற்பது என்பது அரசின் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு தீர்வு வரும் போது அதன் பலன்களையும் நன்மைகளையும் தாம் அனுபவிக்கலாம் என்ற சுயநலம்தான். தற்போது கிழக்கு மாகாண சபையை முஸ்லிம்கள் பங்குபோட்டது போன்று அனுபவிக்கலாம் என்ற நோக்கம்தான்.

சர்வதேச நாடுகள் இன்று அழுத்தம் கொடுப்பது என்பது தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளையும், வாழ்வியல் உரிமைகளையும் மீட்பதற்காகத்தான் என்பதை இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கும், சிறுபான்மை இனங்களுக்கு எதிரான ஜனநாயக மீறல்களுக்கும் துணைபோகும் முஸ்லிம் அரசியல்வாதிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ் பேசும் மக்களின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கும், அரசியல் முன்னெடுப்புக்களுக்கும் முஸ்லிம் அரசியல் வாதிகள் உதவி செய்யாவிட்டாலும், உபத்திரமாவது செய்யாமல் இருப்பது முஸ்லிம் மக்களுக்கு அதிக நன்மைகளைத் தரும். ஆனால் தமிழ் மக்களின் இராஜந்திர நடவடிக்கைகளையும், அரசியல் உரிமைக்கான முன்னெடுப்புக்களையும் முறியடிக்கும் நடவடிக்கைகளிலும் அந்த முறியடிப்புக்கு ஆதரவாக முஸ்லிம் நாடுகளையும் இணைத்துக் கொண்டு இலங்கைக்கு ஆதரவு தேடி முஸ்லிம் நாடுகளிடம் முஸ்லிம் அரசியல்வாதிகள் வரிந்து கட்டுவதும் முஸ்லிம் மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகமாகும்.

முஸ்லிம்களை வழிநடாத்தக்கூடிய முஸ்லிம் அரசியல்வாதிகள் தற்போது யாருமேயில்லை. விலைபோகக்கூடிய முஸ்லிம் அரசியல்வாதிகளே உள்ளார்கள். முஸ்லிம் சமூகம் என்பது வியாபாரச் சமுதாயம் என்ற யதார்த்தங்களை இன்றைய முஸ்லிம் அரசியல்வாதிகள் மெய்யாக்கி வருகின்றார்கள். அரசியலை நிலையான வியாபாரமாக்கி விட்டார்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள். ஆனால் அந்த வியாபாரத்தின் மூலம் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் தமிழர்களும் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதுதான் யதார்த்தம்.

தமிழர்களும், முஸ்லிம்களும் இணைய வேண்டும். இரு இனங்களும் இணைந்து இணக்க அரசியல் நடாத்த வேண்டும். ஆனால் அவ்வாறு இணைவதை முஸ்லிம் அரசியல் வாதிகள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். இந்த உண்மையை முஸ்லிம்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள் என்பதையும் முஸ்லிம்கள் உணரவேண்டும்.

முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து இணக்க அரசியல் செய்யாது போனால் முஸ்லிம்கள் எடுப்பார்க்கைப்பிள்ளையாக மாறி விடுவார்கள். முஸ்லிம்கள் தனிமைப்பட்டுப் போவார்கள். முஸ்லிம்களும் தமிழர்கள் போன்று ஒரு நேர்கோட்டில் அரசியல் செய்வதற்கு ஒரு புதிய அணியொன்று உருவாக்கப்பட வேண்டும். இல்லாது போனால் முஸ்லிம்கள் எதிர்வரும் காலங்களில் நஷ்டமடைந்து விடுவார்கள். சர்வதேசத்தின் அணுகுமுறைகள், தமிழ் மக்களின் முன்னெடுப்புக்கள், பிரித்தானியாவில் தமிழர்களின் முன்னேற்றங்கள் ஆகியவைகளை முஸ்லிம்கள் நன்கு அவதானிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் இருப்பிடம். அது தமிழ் மக்களின் உரிமைகளுடன் சங்கமித்து புதைந்து கிடக்கின்றது. நல்ல காலங்களும் வாய்ப்புக்களும் புறச் சூழலும் பிரகாசமாகவுள்ளன. இந்த வாய்ப்புக்களை முஸ்லிம்கள் நன்கு பயன்படுத்த வேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வொன்று அமையும்போது முஸ்லிம்களுக்கும்தான் என்பதை ஒவ்வொரு வடகிழக்கு முஸ்லிம்களும் உணர்ந்து கொள்ளாத வரை முஸ்லிம்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை. முஸ்லிம்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வாக்களித்து கிடைக்காத உரிமைகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் மூலம்தான் கிடைக்கும் என்பதையும் உணரவேண்டும். தமிழ் மக்கள் கேட்கும் அதிகாரப் பரவலாக்கல் கிடைப்பதற்கு முஸ்லிம்களும் இணைந்து கொள்வதன் மூலம் முஸ்லிம்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படுவதோடு இன உறவும் மேலோங்கி நிற்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. முஸ்லிம் அரசியல்வாதிகள் இவைகள் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்.

முஸ்லிம் மக்கள்தான் சிந்திக்கவேண்டும். எதிர்வரும் காலங்கள் முஸ்லிம்களுக்கு சவாலாகவே இருக்கும். முஸ்லிம்களை அடகு வைத்து பிழைப்பு நடாத்தும் முஸ்லிம் அரசியல்வாதிகளால் முஸ்லிம்களுக்கு எந்தவொரு பலனும், பயனும் கிடைக்கப்போவதில்லை. நம்பி மோசம் போவது மட்டும்தான் மிஞ்சப் போகின்றது. முஸ்லிம்கள் தெளிவடைய வேண்டும். முஸ்லிம்கள் தமிழ்த்தேசியத்தை புறந்தள்ளுவதன் மூலம் முஸ்லிம்கள்தான் பின்தள்ளப் படுவார்கள். தீண்டத்தக்க அரசியலாக தமிழ் அரசியலை ஓரங்கட்டுவதன் மூலம் முஸ்லிம்களின் இருப்பிடம் கேள்விக்குறியாகிவிடும். தமிழர்களும் சிங்களவர்களும் என்றும் இணையமாட்டார்கள் என்ற நிலையில் தான் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியல் பிழைப்பு நடாத்தி வருகின்றார்கள். காலம் மாறும் அப்போது தமிழர்களிடம் முஸ்லிம்கள் உரிமை கேட்கும் நிலையொன்று ஏற்படலாம். அந்த நிலை ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமானால் தமிழர்களுடன் முஸ்லிம்கள் இப்போதிருந்தே இணக்க அரசியல் நடாத்த முன்வரவேண்டும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விசாலியின் சபதம்

அ. அஜந்தன்.

விசாலி கரங்களில் சிறகு முளைத்தவளாய் அங்கும் இங்கும் பறந்து திரிந்து வேலை செய்தாள். இடம் பெயர்ந்து வந்தபின் இதுதான் அவள் கலந்து கொள்ளவுள்ள முதல் நல்ல காரியம். "விடுங்க மாமி இந்தப் புகை உங்களுக்கு ஒத்துவராது, நான் பலகாரம் சுட்டு முடிக்கிறவரைக்கும் நீங்கள் அந்தக் கதிரையில கொஞ்சம் ஓய்வெடுங்கோ" என்று சொன்னபடி அடுப்படியில் அறுசுவைப் பலகாரங்களுடன் சில மணித்தியாலங்களை செலவு செய்தாள். காலையில் அவளது மாமியின் மகனுக்கு திருமணம் லண்டனிலிருந்து திருமணத்திற்காக வந்திருக்கிறார். அனைத்து வேலைகளையும் செய்து முடிக்கையில் நடுநிசி ஆகிவிட்டது. தனது இரு குழந்தைகளும் ஆளுக்கொரு மூலையில் தூங்கிவிட்டார்கள். அவர்களை எழுப்பிக்கொண்டு தனது சிறு குடிசைக்குள் சென்று மாமியின் மகன் லண்டனில் இருந்து கொண்டுவந்து கொடுத்த அந்த மேசைக்கடிகாரத்தில் காலை 3 மணிக்கு அலாரம் வைத்துவிட்டு தூங்கிவிட்டாள். நீங்... நீங்... நீ.. ங் அலாரத்தின் ஒலி காலை புலர்ந்து விட்டதை உணர்த்தியது. தனது குழந்தைகளின் உறக்கத்தை கலைக்காமல் மெல்ல எழுந்து தனது மிகுதிக் கடமைகளுக்குள் தன்னை அர்ப்பணித்துவிட்டாள்.

நேரம் கடந்தது எல்லோரும் தங்களை அலங்கரிப்பதற்காக தத்தமது வீடுகளுக்குச் சென்றனர். ஆனால் எல்லோருடைய வாயும் விசாலி நாங்கள் வரும்வரை நின்று எல்லாத்தையும் கவனி என்று உரைத்து விட்டுப் போனது. சிறிது நேரத்தின் பின் ஒவ்வொருவராக வரத்தொடங்கினர். "இந்த சாறி எப்படி இருக்கு?" "இந்த நகை எப்படி இருக்கு?" "எனது பொட்டு சரியான இடத்தில் வைக்கப்பட்டுள்ளதா?" என்று அவளது மனதை அதன் கனத்தை உணராதவர்களாய் விசாரித்தனர். மனதின் வடுக்களை மறைத்து புன்னகைத்தபடியே அவர்கள் எதிர்பார்த்த பதில்களை மட்டுமே அவள் வாய் உதிர்த்தது.

நானும் எனது உடைகளை மாற்றிவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு தன் வீடுநோக்கிச் சென்றாள். மீதம் இருந்த ஒரு புதிய சாறியை தனது பென்சன் கேட்கும் றங்குப்பெட்டியிலிருந்து எடுத்தவள் ஏதோ நினைவுகள் நெஞ்சை முட்ட சுவரில் மாலையிட்டுத் தொங்கிய கணவனின் படத்தின்முன் நின்றாள். அவளின் மனம் கணவனிடம் எதையோ கேட்பதுபோலும் பதிலுக்காக காத்திருப்பதாகவும் மௌனித்து நின்றிருந்தாள் "அம்மா எல்லாரும் வெளிக்கிட்டுப் போகினம் நீங்களும் வெளிக்கிடுங்கோ" என்றது அவளின் மூத்த மகளின் குரல் கண்களில் முட்டிய நீரை நிலத்தில் விழவிடாது மெல்லத்துடைத்தபடி அறைக்குள் சென்றாள்.

அறையில் இருந்து பட்டுப்புடைவையுடன் வெளியே வந்த தாயைக் கீழிருந்து மேலாக உற்றுப்பார்த்து முகம்மலர்ந்து நின்றனர் குழந்தைகள். அம்மாவை இந்தக்கோலத்தில் பார்த்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டது. ஆசையாய் தாயின் கரம் பிடித்து தறதறவென்று திருமணவீடு நோக்கி இழுத்துச் சென்றன அந்தப் பிஞ்சு உள்ளங்கள். வீதியில் பார்ப்பவர்களின் பார்வை அவள் உடுத்தியிருந்த பட்டுப் புடவையில் ஆச்சரியக் குறியாய்ப் படர்ந்தது. பாதங்கள் அவளை அறியாமலே தடுமாறியது. "அம்மா எல்லாரும் உங்களைத்தான் பாக்கினம் நீங்கள் இண்டைக்கு எவ்வளவு வடிவா இருக்கிறியள்" என்றாள் சமூகத்தின் முகம் தெரியாத இளம் மகள்.


வாயிலில் வாழைக்குலை வரவேற்க சோடனைகளும் நாதஸ்வர இசையும் மங்களகரமாக இசைக்க திருமணவீடே களைகட்டியது. அந்த ஆரவாரத்திலும் எல்லோரது ஆழமான பார்வையும் என்னவோ விசாலியின் மீதுதான். ஓசையே இல்லாமல் வாசலை வந்தடைந்தது மணமகனை அழைத்துச்செல்லும் மணமகள் வீட்டாரின் கார். வாசலில் குத்துவிளக்கு தயாராக இருந்தது அதற்கு எண்ணெய் ஊற்றி தீப்பெட்டியை எடுத்து இன்னொரு பெண்ணிடம் நீட்டி, திரியை கொளுத்தச் சொன்னாள். எண்ணெயில் நன்கு நனைந்த திரி தீப்பற்ற சற்று நேரம் எடுத்தது தீக்குச்சியும் அணைந்தது. ஓடிச்சென்று திரியினை இரு விரல்களாலும் அழுத்திப்பிழிந்தாள். "என்ன இது இங்கு ஒரு பெரியமனுசரும் இல்லையோ ஒரு சுமங்கலி எல்லோ முன்னுக்கு நிக்கவேணும் ஆனால் இங்க எல்லாம் பொட்டிழந்த இந்தப்பிள்ளை செய்யிது" என்று பேசியபடி காரிலிருந்து வெளிப்பட்டாள் நகைக்கடை விளம்பரம்போல் வந்த மணப்பெண்ணின் அக்கா. விசாலியின் விரலை தீச்சுவாலை சுட்டதுகூட அவளுக்கு வலிக்கவில்லை ஆனால், அந்தப் பெண்ணின் நாவினால் உதிர்த்த வார்த்தை இதயத்தில் ரணமாய் வலித்தது. அதனை ஆமோதிப்பவர்களாய் சமூகத்தின் சாக்கடை விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்ட சராசரிக்கூட்டமும் மௌனமாய் விசாலியை நிராகரித்தது.

பின்புறத்தில் நின்ற இன்னொரு பெண் "விசாலி நீ இனி கொஞ்சம் ஒதுங்கி நின்றால் நல்லது" என்றாள் எரிகாயத்தில் வெந்நீர் கொட்டியதாய். அவள் முகம் வாடிக்கிடந்தது. வீட்டின் கொல்லைப்புறம் நோக்கி நகர்ந்தாள்.

கொல்லைப்புறத்தில் பழைய பொருட்கள் கொட்டிக்கிடக்கும் பாழடைந்த ஒரு பாதி இடிக்கப்பட்ட அரைகுறை மண்வீட்டின் சுவரில் தலை சாய்த்தாள். அந்த மண்சுவர் தன் தலை வருடுவதாய் இதமாய் இருந்தது. ஏனென்றால் பதினைந்து வருடங்களிற்கு முன் விசாலி தாய் தந்தையுடன் வாழ்ந்த வீடு அது. அன்பால் பிணைக்கப்பட்ட வீடு, செல்லப்பிள்ளையாய் வலம் வந்த வீடு, நடு வளையில் ஊஞ்சல் கட்டி உல்லாசமாய் ஆடிய காலமது. அத்தை மாமாவோடு மனமொத்து வாழ்ந்த காலமது. அன்று அவள் இந்த வீட்டின் மகாராணி இன்று அவள் இங்கு வீசப்பட்டுக்கிடக்கும் பழைய பொருட்களில் ஒன்று.

விசாலியின் மனம் தன் வாழ்வின் கடந்த காலங்களை ஒருமுறை எண்ணிப்பார்த்தது. அவள் பாடசாலையில் ஒரு சிறந்த மாணவி கல்விப் படிப்பில் மட்டுமல்ல கலை, விளையாட்டு போன்ற அனைத்திலும் அவள் முதல் மாணவி. சாதாரண தரப்பரீட்சையில் பாடசாலையின் முதல் நிலை மாணவியானாள். ஆனால் இடப்பெயர்வு அவளது கல்விக்கு ஒரு தடையாகவே அமைந்தது. வன்னியில் குடியேறியபோது அவள் உயர்தரம் ஆரம்பித்திருந்தாள். அவளால் ஒரு பாடசாலையில் நிரந்தரமாக கல்விகற்க முடியாமல் வீடு மாறும்பொழுதெல்லாம் பாடசாலையை மாற்றினார்கள். அவளது வைத்தியராகும் கனவோடு தனது கல்வியைத் தொடர்ந்தாள். உயர்தரப் பரீட்சைக்கு அண்மித்த காலப்பகுதியில் போர்ச்சுவாலை அவளது தந்தையை அவளிடம் இருந்து நிரந்தரமாகப் பிரித்துவிட்டது. இந்த இழப்பு அவளை வெகுவாகப் பாதித்ததுடன் அவளது வைத்தியராக வேண்டும் என்ற கனவு சிதைந்தவளாய் உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளில் அவளால் சிறந்த புள்ளிகளை எடுக்க முடியவில்லை.

தனது அத்தை மாமா உறவினர்கள் ஒவ்வொருவரும் தம்மை விட்டுப் பிரிந்து வேறு வேறு இடங்களுக்கு சென்றதால் தாயோடு தனித்து விடப்பட்டவளாய் விசாலி வாழ நேர்ந்தது. வயது 20 ஐ எட்டியது தனது கல்வித்தகமைக்கு ஏற்ப ஒரு விடுதிச் சாலையில் வரவேற்பாளராக சிறிய வேலையும் கிடைத்தது நிரந்தரவேலையோ கை நிறைய சம்பளமோ இல்லாவிட்டாலும் தனது குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இருந்தது. அயலவர்கள் "எத்தனை நாளுக்குத்தான் ஆண் துணை இல்லாமல் நீங்கள் வாழமுடியும் நேரகாலத்திற்கு விசாலிக்கு ஒரு திருமணத்தை செய்து வைத்தால் உங்கட கடமையும் முடியும். பாதுகாப்பும் கிடைக்கும்" என்று சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல் விசாலியின் தாயின் மனதில் திருமண விடயத்தை விதைத்து விட்டனர். சராசரி தாயாக விசாலிக்குப் பொருத்த மானவனை தேடும் பணியில் இறங்கினாள். விசாலியின் தாய் அழகு அறிவு நற்குணம் மனப்பொருத்தம் இவற்றிற்கு அப்பாற்பட்ட ஜாதகப் பொருத்தம் பெரும் சவாலாக அமைந்தது. இறுதியில் ஜாதகம் மட்டுமே 85 வீதம் பொருந்தியதால் தாயின் கட்டாயத்திற்கு அவள் திருமணம் நடந்தேறியது.



காலங்களும் அவள் கனவுகள் போல் கரைந்தோடியது. இரண்டு அழகான குழந்தைகளுக்குத் தாயானாள். வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி ஒரு துண்டு நிலப்பரப்பை வாங்கி அதில் சின்னதாய் ஒரு வீட்டைக் கட்டி வாழ்ந்து வந்தாள்.

யுத்தத்தில் தனது வீட்டை இழந்து தாயைப் பறிகொடுத்து தமது உயிரை பாதுகாக்க ஊரோடு ஊராக இடம்பெயர்ந்தாள். நாளுக்கு நாள் பட்டினிச் சாவை நோக்கி நகர்ந்தது அவளது வாழ்வு. தனது தாலிக்கொடியை கணவனிடம் கொடுத்து "இனியும் என் பிள்ளைகளின் பசி தோய்ந்த முகத்தை என்னால் பார்க்க முடியாது நீங்கள் உயிருடன் உள்ளபோதும் நான் தாலியைக் கழற்றுவது எமது பண்பல்ல ஆனாலும் இந்த நிலையில் பிள் ளைகளின் உயிர் முக்கியம்" என்றாள் ஒரு சராசரி தாயாக. அதனை மறுத்து "நான் உயிருடன் உள்ளபோதே ஏன் இந்த விபரீத முடிவு நான் உணவுக்கு வேறு வழிசெய்கிறேன்" என்று கூறி அடுத்த சந்தியில் ஒரு கடையைக் கடந்த ஞாபகம் வரவே, தங்களிடம் இருந்த சில பொருட்களை விற்றாவது உணவுப் பொருள் வாங்கச் சென்றான். சென்றவன் வீடு திரும்பவில்லை. அயலில் உள்ளவர்கள் சொன்னார்கள் கடையில் வரிசையில் நின்றவர்கள் நிறையப்பேர் 'செல்'விழுந்து இறந்துவிட்டனர் என்று. தனிமரமான விசாலி பிள்ளைகளோடு உயிர்தப்பி வருவதற்குள் அவளது பாதி ஆயுள் தேய்ந்துவிட்டது. கடந்தகால சிந்தனை கலைந்தவளாய் தனது சுய நினைவுக்கு வந்தாள்.

விசாலியின் ஆழ்மனம் அவளது ஆறாவது அறிவை கேள்விக் கணைகளால் போர் தொடுத்தது. "நான் பிறந்த நேரத்தை வைத்து சாஸ்திர முறைப்படி 'வி' என்ற எழுத்தில் எனக்கு பெயர் ஆரம்பிக்க வேண்டுமென்றும் 3 எழுத்துக்களில் அமைய வேண்டுமென்றும் 'விசாலி' என்று எண்கணித முறைப்படி அப்பா எனக்கு பெயர் வைத்தாரே ஏன்? இன்று இந்தச் சமூகமும் எனக்கு 'வி'என்று தொடங்கும் 'விதவை' என்ற ஒரு பொதுப்பெயரை வைப்பதற்கா? ஜாதகப் பொருதத்தில் 85 வீதம் பொருந்தியதே அது எப்படி? மீதி 15 வீதம் வாழ்வில் மட்டும் நான் சுமங்கலியாய் வாழ்வதற்கா? நாள் நட்சத்திரம் பார்த்து தாலிப் பாக்கியம் உள்ளதா எனப்பார்த்து என் கழுத்தில் தாலி கட்டினார்களே ஏன்? என்னால் என் தாலியை மட்டும்தானே காக்க முடிந்தது என் கணவனை...? ஆனால் அவரை ஞாபகப்படுத்த இந்த தாலியைவிட வேறு எதுவும் என்னிடம் இன்று இல்லையே?. என் கணவரின் உடலைக்கூட என்னால் பார்க்க முடியவில்லையே இந்தக் கொடுமையை ஏன் என் ஜாதகம் முன்கூட்டியே சொல்லாம்ல் போனது? ஜாதிக்கொடுமையைவிட கொடியதா இந்த ஜாதகக் கொடுமை?"

"என் திருமணத்திற்கும் ஓர் சுமங்கலிதானே குத்துவிளக்கை ஏற்றினாள். ஆனாலும் ஏன் இன்று என் வாழ்வு இருண்டுபோனது? அங்கு நம் உடைகள் எல்லாம் குருதி தோய்ந்து இரத்த வாடையில் வாழ்ந்தோமே அதைவிட கொடியது இன்று இந்த சமூகத்தால் தரப்பட்ட மூட நம்பிக்கையால் நெய்த வெள்ளைச்சேலை சமாதானத்துக்கு அடையாளமாய் நாம் வெள்ளைக்கொடி ஏந்தி வந்தோமே அந்த தூய வெள்ளைக்கா இப்படியொரு மறுமுகம்? அங்கே கொத்துக் கொத்தாக மனிதகுலம் மடிந்ததே அவர்களின் மரணத்தையும் 'விதி' என்ற சொல்லால் அடக்கம் செய்து விட்டதே இந்த மனிதகுலம்? ஆயுளைக் கணிக்கும் ஜாதகத்தையே வென்றுவிட்டதே இந்த ஆயுதம்? ஒருவேளை விதியை தீர்மானிக்கும் காரணிகளில் போர் அடக்கப்படவில்லையா? விறுவிறு என்று வீடு நோக்கி வந்தவள் தன்னைப்போல் நாள்தோறும் கிழிந்து போகும் நாட்காட்டியைப் பார்த்தாள் ஆம்! அன்று வெள்ளிக் கிழமை. எனது அப்பா எனக்கு ஊர்க்கண் பட்டுவிடும் என் பதற்காக வெள்ளி தோறும் 'கண்ணூறு' பார்த்த ஞாபகம் வந்தது உள்ளே சென்றவள் தன்மீது போர்த்தப்பட்ட அந்த வெள்ளைச் சாறிகள் அனைத்தையும் ஒரு பெட்டியில் இட்டு நடு முற்றத்தில் போட்டுக் கொளுத்தினாள். அங்கே எரிந்துபோனது வெறும் வெள்ளைப் புடவை அல்ல வெளுத்துப்போன மூடநம்பிக்கைகளும்தான்.

எரிந்துகொண்டிருந்த தீயையே பார்த்துக்கொண்டிருந்தாள். அதற்கிடையில் இரண்டு பிள்ளைகளும் பலகாரப் பைகளோடு அம்மா என்று அழைத்தபடி ஓடி வந்தனர். தீயின் வெளிச்சத்தில் தாயின் முகம் தெளிந்த நீரோடையில் அந்த நிலாவைப்போல் தெளிவாய்த் தெரிந்தது. இரு பிள்ளைகளையும் கட்டி அணைத்தவள். "இனி நான் ஒரு சராசரிப் பெண், இரு குழந்தைகளின் பொறுப்பான தாய், இந்த இருள்தான் நம் வாழ்வின் இறுதி இருள். இனி ஒருவேளைகூட உங்களை பட்டினி போடமாட்டேன். உங்களை இந்த சமூகமே மெச்சும் அளவிற்கு வளர்ப்பேன். இதோ இந்தத் தீயின் மீது ஆணை" என்று சபதம் எடுத்தவள் வீட்டிற்குள் சென்றாள். காலை விடிந்ததும் சுறுசுறுப்பாக தனது கடமைகளை முடித்தவள் இரு பிள்ளைகளையும் பாடசாலைக்கு தயார்ப்படுத்தித் தானும் நிறப்புடவையுடன் பாடசாலைநோக்கி நடந்தாள். அவர்களை பாடசாலைக்குள் விட்டவள் புன்னகையுடன் விடைபெற்றாள். அயலில் உள்ள வயலில் அறுவடை தொடங்கிவிட்டது தனது கைப்பையில் இருந்து ஒரு அரிவாளை எடுத்தவள் கணவனின் பசுமையான நினைவுகளை சுமந்தவளாய் தன் பிள்ளைகளின் பசிபோக்கி அவர்களை வளர்த்தெடுக்க சபதம் எடுத்தவளாய் வேகமாய் வயல்நோக்கி புறப்பட்டாள். சமூகத்தின் சாபம் விசாலியின் சபதத்தை இனி வெல்ல முடியாது. இனி அவளின் அரிவாள் நெற்கதிரை மட்டுமல்ல சமூகத்தின் களைகளையும் வேரறுக்கும்.

■ ■ ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'வாடி' 'போடா' என்றழைப்பது நாகரிகமானதா?

**து.குணநாயகம், கொழும்பு 11.**
கே: ஈழத்தமிழ் மக்களுக்காக எதையும் செய்வேன் என்று 'புலுடா' விடும் கலைஞர் கருணாநிதியின் இன்றைய நிலையென்ன பித்தரே!
ப: கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்றொரு முதுமொழி வழக்கில் உண்டு. கலைஞரின் அரசியல் பருப்பு எப்போதும், எந்த நீரிலும் அவியாது என்பது இப்போது நிதர்சனமாகி வருகிறது.



**தே. ரவிதா, வவுனியா.**
கே: பித்தரே சம்சாரம் அது மின்சாரம் என்கிறார்களே தெளிவுபடுத்துவீர்களா?
ப : இரண்டையும் தொட்டால் 'ஷொக்' அடிக்கும் என்பதால் ஒன்றை ஒன்றுடன் ஒப்பிட்டிருப்பார்களோ?

**பூ. பூலோகசிங்கம், மூதூர்.**
கே: திறமை மிக்க கலைஞர்கள் பெரும்பாலும் தலைக்கனம் படைத்தவர்கள் என்றொரு பொதுவான கருத்துண்டு. அது சரிதானா பித்தரே!
ப: திறமை மிக்க கலைஞர்கள் தலைக்கனத்துடன் நடந்துகொண்டால் அவர்கள் மீதான மதிப்பு குறைவடைய வாய்ப்புண்டு. பொதுவாக திறமை மிக்க கலைஞர்களிடம் காணப்படும் வித்தியாசமான போக்கு 'வித்துவச் செருக்கு' என்ற விதத்தில் நோக்கப்படுவதுண்டு.



**து. தமயந்தி, கிளிநொச்சி.**
கே: திரைப்படப் பாடலாசிரியர்கள் பெரும் சிரமப்பட்டு எழுதும் பாடல்கள் சிறப்பாக அமைந்து விட்டால் அதனைப் பாடும் பாடகர்களே அத்தனை பாராட்டுக்களையும் அள்ளிக்கொண்டு விடுகிறார்களே? இது எப்படி பித்தரே!



ப: திரைப்படத்துறையில் திரைக்குப் பின்னால் செயற்படுபவர்களின் திறமை வெளிச்சத்துக்கு வருவதில்லை. பாராட்டுக்கள் கிட்டாவிட்டாலும் அவர்களது பணி அளப்பரியதே. பொதுவாகவே செடியில் பூக்கும் மலர்களுக்குத் தான் மரியாதை கிட்டுகிறதே தவிர வேருக்கு அல்லவே?



**எஸ்.தவராசா, மன்னார்.**
கே : நாட்டில் லஞ்ச ஊழலை ஒழிக்கவே முடியாதா பித்தரே!
ப: லஞ்சம் கொடுத்து குறுக்கு வழியில் தமது தேவையை நிறைவேற்றிக்கொள்பவர்கள் இருக்கும் வரை லஞ்சம் பெற்றுக்கொண்டு அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பவனும் இருக்கவே செய்வான். தவறு ஒரு புறத்தில் இருக்க மறுபுறத்தைக் குற்றம் கூறிப் பயனென்ன?



**ம. அற்புதன், கொக்குவில்.**
கே: எவ்வளவுதான் முயன்றாலும் எமது நாட்டில் அழிக்கமுடியாதவை எவை பித்தரே.
ப: ஒன்றிரண்டல்ல பல உள்ளன. அவற்றில் முக்கியமானவை லஞ்சம், நுளம்பு.



**த. தீபிகா, திருகோணமலை.**
கே : உம்மை மடக்குவதென்றால் பொது அறிவுக் கேள்வி தான் ஒரே வழி. எங்கே சொல்லும் பார்க்கலாம். முதலாவது கண்மாற்றுச் சத்திர சிகிச்சை எங்கே நடந்தது?
ப: வந்து... வந்து... கண்ணப்ப நாயனார் கண்மாற்றுச் சத்திர சிகிச்சை செய்ததாக பெரிய புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அதுதான் முதலாவது கண்மாற்றுச் சத்திர சிகிச்சையாக இருக்கும். எப்புடி?

**ம. திருநாவுக்கரவு, பூநகரி.**
கே: மாணவர்களும், மாணவிகளும் பரஸ்பரம் வாடி, போடா என்று ஒருவரையொருவர் விளிப்பது நாகரிக மானதுதானா பித்தரே!
ப: மாணவ மாணவிகளென்ன, கணவன் மனைவிகூட இப்போதெல்லாம் அப்படி அழைப்பதைத்தான் 'லேட்டஸ்ட்' பாஷனாகக் கருதுகிறார்களே?



**து. அகிலா, பருத்தித்துறை.**
கே: பித்தரே! பொது நலம், சுயநலம் என்பவற்றுக்குப் பொருத்தமான உதாரணம் கூறுங்களேன்.
ப: இப்படி வைத்துக் கொள்ளுமேன். மழை பெய்வதென்பது பொது நலம். அந்த மழையில் நனைந்து விடாமலிருக்கக் குடை பிடித்துக் கொள்ளுவது சுயநலம்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 550

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 | |
| 12 | | 13 | | ■ | 14 | | ■ |
| | ■ | 15 | | 16 | | ■ | 17 |
| ■ | 18 | | ■ | 19 | | 20 | |
| 21 | | | 22 | | ■ | 23 | |
| 24 | | ■ | | ■ | 25 | | |

அனுப்புபவர் பெயர் :.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### மேலிருந்து கீழ்
1. உண்ணா நோன்பு
2. (சாத்திரம்) கணித்துக் கூறுபவன்
3. வாழ்
4. பேசு
5. செய்தி
6. மாத்திரை
8. அணி
10. கூடாதது அல்ல
13. எரியும் செயற்பாடு
14. நிகழ்கால நாள்
16. அழித்தல் (தொழில்)
17. சிரசில் எழுதப்பட்டது
18. தீவிரமான நிலைமை
20. உலோகத்தை மெல்லிய படையாக உருவாக்கினால் வருவது
21. ஆதி மனிதன் வாழ்ந்தது இங்கே
22. புரவி

### இடமிருந்து வலம்
1. ஆலோசனை கேட்கும் பேச்சு
4. ஒத்தாசை
7. பத்திரிகையின் பகுதியொன்றை இப்படித் தமிழில் கூறுவர்
8. பொன், வெள்ளி போன்றவற்றை உரைத்துப் பார்ப்பது இதில்
9. வழக்கில் மனுதாரர்
10. மத்தி
11. ஒன்றை மாட்ட வைக்கப் பின்னுவது
12. சாய்தல்
14. வீடு
15. பலதும் சேர்ந்திருப்பதை இப்படிக்கூறுவர்
18. பாரமான
19. கட்டுப்பாடில்லாமல் அலைபவன்
21. தாய் தகப்பன் ஒன்று சேர்ந்த அலகு
23. குரங்கு
24. கணவனை இழந்த நிலைமை
25. தங்குமிடம்

## சொற்சிலம்பம் போட்டி இல. 550

சொற்சிலம்பம் 550 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 26 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 548 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**
1. முதுகு, 2. கரும்பு, 3. துகில், 4. வாழ, 5. ரம்பம், 8. களை, 10. பண்பாடு, 12. சமைதல், 14. நம்புதல், 15. அவமதி, 18. காவியம், 20. கிண்ணி, 22. தலை, 24. மத

**இடமிருந்து வலம்**
1. முகத்துவாரம், 6. துரு, 7. கிழம், 9. கும்பல், 11. பசளை, 13. புண், 14. நம்மை, 16. பாசம், 17. தகா, 19. வகிடு, 21. புதல்வி, 23. மண், 24. மதலை, 25. திணித்தல், 26. ரோம்

## போட்டி இல. 548 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** ஜெ.லதனி, இல.300, மாயவனூர், வட்டக்கச்சி, கிளிநொச்சி.

**2ஆம் பரிசு** வி.குயின்சி, அணிஞ்சிலடி ஒழுங்கை, துன்னாலை மேற்கு, கரவெட்டி.

**3ஆம் பரிசு** க.கீதா, இல:40, பெக் வீதி, ஹம்பாந்தோட்டை.

## பாராட்டுப் பெறுவோர்

(1) சுசீலன் கோமளா, பூவத்தோட்டம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
(2) செ.ஜெயச்சந்திரராசா, இராசேந்திரன் குளம், வவுனியா.
(3) நமசிவாயம் அஞ்சுணன், சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
(4) மூ.முத்துராசா, திகிரிலேன், தும்பளை, பருத்தித்துறை.
(5) கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோவிலடி வட்டுக்கோட்டை.
(6) வை. தனபாலசிங்கம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
(7) அ.இ.பாக்கியராஜா, இல 88 /1பசள்ஸ் ஒழுங்கை, கொழும்பு -06.
(8) சு. பிரதீப், சுன்னாகம்.
(9) செல்வி. கௌ.கந்தஞானி, பிரதேச செயலகம், சங்கானை.
(10) சி.சாந்தகுமாரி, அளம்பில், முல்லைத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**05.12.2012 - 11.12.2012**




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

தன் பலம் பலவீனம் அறிந்து, தன்னை தயார்படுத்திக் கொள்பவர்களே! தள்ளிப் போன கல்யாணம் கூடி வரும். மன இறுக்கம், தலைச்சுற்றல், செரிமானக் கோளாறு வந்து செல்லும். கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகம் வந்து செல்லும். பக்குவமான பேச்சால் சாதிக்கும் வாரமிது.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

உழைப்பால் உயரும் நீங்கள், அடுத்தவர் நிழலில் அமர யோசிப்பீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிள்ளைகள் நல்ல வழிக்குத் திரும்புவார்கள். வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். மனைவிக்கு மாதவிடாய்க் கோளாறு, கர்ப்பப்பை வலி வந்து போகும். உறவினர், நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். தடுமாற்றம் நீங்கும் வாரமிது.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சமாதானத்தை விரும்பும் நீங்கள், சச்சரவுகளைத் தவிர்ப்பீர்கள். நினைத்தது நிறைவேறும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள். நட்புவழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். புது பதவி, பொறுப்பு தேடி வரும். தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த வாரமிது.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

மனிதநேயம் உள்ள நீங்கள், மரம், செடி, கொடிகளையும் நேசிப்பீர்கள். இங்கிதமாகப் பேசி வெற்றி பெறுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் அலைச்சல், பிரச்சினைகள் வந்து போகும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். வேலைச்சுமை, தாயாருக்கு மருத்துவச் செலவுகள், மறைமுக விமர்சனங்கள் வந்து செல்லும். வளைந்து கொடுக்க வேண்டிய வாரமிது.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

சொன்ன சொல்லை நிறைவேற்றும் நீங்கள், தன்னை நம்பி வந்தவர்களை ஆதரிப்பீர்கள். சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சேமிப்புகள் கரையும். தந்தைக்கு கை, கால் வலி, வேலைச்சுமை வந்துப் போகும். மையப் பகுதி முதல் மகிழ்ச்சி தரும் வாரமிது.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

காதலை மதிக்கும் நீங்கள், கனிந்த மனசுக்கு சொந்தகாரர்கள். திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பார்வைக்கோளாறு, வாகன விபத்து, செலவுகள் வந்து போகும். புதிய முயற்சிகளில் வெற்றி காணும் வாரமிது.




**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

தீமை செய்தவர்க்கும் நல்லதே செய்யும் நீங்கள், நாலும் தெரிந்தவர்கள். உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். தோற்றப் பொலிவு கூடும். சகோதரிக்கு இருந்த பிரச்சினை தீரும். முன்கோபம், ஏமாற்றம், தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். பயணங்களின் போது கவனம் தேவை. காத்திருந்து காய் நகர்த்த வேண்டிய வாரமிது.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்காத நீங்கள், கொள்கை பிடிப்புடன் வாழ்பவர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். குழந்தைப் பாக்கியம் கிட்டும். பிள்ளைகள் படிப்பில் முன்னேறுவார்கள். உறவினர்களால் அன்புத் தொல்லை வந்து போகும். திடீர் பயணங்கள் உண்டு. துணிச்சலான முடிவுகள் எடுக்கும் வாரமிது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

தாராள மனசு கொண்ட நீங்கள், பேச்சால் சாதிப்பதில் வல்லவர்கள். எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். நட்பு வட்டம் விரியும். நீண்ட நாட்களாகப் பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். பொது நிகழ்ச்சிகளில் தலைமைதாங்கும் அளவிற்கு பிரபலமாவீர்கள். விடாமுயற்சியால் விட்டதைப் பிடிக்கும் வாரமிது.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

மந்திரியானாலும் மனதில் பட்டதை பேசுபவர்களே! உங்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். புது வேலை கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வேற்றுமதத்தவர்களால் திருப்பம் உண்டாகும். உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பிறக்கும். வெற்றிப் பாதை தெரியும் வாரமிது.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

குனியக் குனியக் குட்டினாலும் கோபப்படாதவர்களே! புது வாய்ப்புகளும், பொறுப்புகளும் தேடி வரும். சகோதரிக்கு திருமணம் நிச்சயமாகும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். கசந்த காதல் இனிக்கும். தந்தைக்கு நெஞ்சு வலி, வீண் டென்ஷன் வந்து போகும். தன்னம்பிக்கையால் தலைநிமிரும் வாரமிது.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

ஏமாற்றங்களைக் கண்டு அஞ்சாத நீங்கள், நேர்மறைச் சிந்தனை அதிகம் உள்ளவர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். ஒரு சொத்தை விற்று மறு சொத்து வாங்குவீர்கள். எதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். நிதானத்தால் வெற்றி பெறும் வாரமிது.

## திருமண விஷயத்தில் தீர விசாரியுங்கள்!



ஒரு தரகர் மாப்பிள்ளை வீட்டுக்குப் போனார்.

"அம்மா! உங்கள் பையன் கோயிலுக்குப் போயிருக்கிறான். அங்கே, சீனிவாசன் மகள் சுமதி அவனை பார்த்திருக்கிறாள்! அவனைத் தான் கட்டுவேன் என அடம்பிடித்து ஒத்தைக்காலில் நிக்கிறாள். அவளையே நம்ம பையனுக்கு பேசி முடிச்சிடலாமா?" என்றார்.

அம்மாவுக்கு வாயெல்லாம் பல்.

"சரி! அந்தப்பொண்ணே விரும்புறாள், இந்தா புடியுங்கோ! இரண்டாயிரம்! பேசி முடியுங்கோ" என பணத்தை நீட்டினாள்.

தரகர் நேராக பெண் வீட்டுக்குப் போய், அவளது தகப்பனாரைப் பார்த்தார்.

"ஐயா! உங்க மகள் கோயிலுக்குப் போயிருக்கிறாள்! அங்கே பத்மாவதி அம்மா மகன், சுந்தரேசனைப் பார்த்திருக்கிறாள்! அவனைத்தான் கல்யாணம் முடிப்பேன், எங்க அப்பாவிடம் பேசி முடிச்சு வையுங்கள் சொன்னாள். பையன் ஒத்தைக்கையாலே உலகத்தையே வளைக்கிற ஆள். முடிச்சுடட்டுமா!" என்றார்.

அவருக்கும் சம்மதம். தன் பங்குக்கு இரண்டாயிரத்தை தூக்கிக் கொடுத்தார். கல்யாணம் முடிந்தது. முதல் ராத்திரியில், தம்பதிகள் பேசிக்கொண்டார்கள்.

"நீங்க ஒத்தைக்கையாலே உலகத்தையே வளைப்பீர்களாமே! தரகர் சொன்னார். அப்படி என்ன சாதனை படைச்சிருக்கீங்க!" என்றதும், ஓ! இதைச் சொல்றியா! என்று ஒரு கையைத் தூக்கிக் காட்டினான். அதிலே மரக்கட்டை இருந்தது.

அவள் அதிர்ச்சியுடன் நிற்க, அவன் நீ என்னைத்தான் கல்யாணம் முடிப்பதாக ஒத்தைக்காலில் நின்றாயாமே! அப்படி என்ன விசேஷத்தை என்னிடம் கண்டாய்?" என்று திருப்பிக் கேட்டான்.

அவள் சற்று தெளிந்தவளாய், "ஓ! அதைச் சொல்றீங்களா!" என்று ஒரு காலைக் காட்டினாள். அவளுக்கு ஒரு கால் தான் இருந்தது. இன்னொன்று செயற்கைக்கால். புயல் கிளம்பியது. இருவீட்டாரும் தரகரை அழைத்தனர்.

"'பையனுக்கு ஒற்றக்கை', 'பெண்ணுக்கு ஒற்றைக்கால்' என்று சரியாத்தானே சொன்னேன். நீங்க கவனிக்காட்டி நானா பொறுப்பு?" என்றார்.

எல்லாரும் வாய்மூடி விட்டனர்.

## நல்ல எண்ணங்களை பெறுவோம்



- பக்தி ஒளி இருக்கும் மனதில் அறியாமை என்னும் இருள் இருப்பதில்லை. பதவியால் சாதிக்க முடியாததைக் கூட பக்தியால் சாதிக்க முடியும்.
- பிறருடைய குற்றங்குறைகளை மன்னிப்பவன் மனிதன். அதே சமயத்தில் பிறர் குறைகளை மறந்துவிடுபவன் தன்னை தெய்வநிலைக்கு உயர்த்திக் கொள்கிறான்.
- பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பதே உண்மையான விரதம். பிறருக்குத் தீமை செய்யாத எந்தத் தொழிலும் உயர்வானதாகும்.
- பேராசைக் குணம் மக்களின் வாழ்க்கையை திசை திருப்பத் தொடங்கினால், அதன் பிடியில் சிக்கி தங்கள் வாழ்க்கையை அழித்துக் கொள்வர்.
- கடவுளுக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்ப கட்டம். ஞானம் முதிரும் போது பயம் அன்பாக மாறுகிறது. பூரண அன்பு நம் மனதில் பரிணமிக்கும் போது, பயம் முற்றிலுமாக நம்மைவிட்டு நீங்கிவிடுகிறது.
- புலன்களின் ஆதிக்கத்தில் அடங்கி நடக்கும் வாழ்க்கை உலக சம்பந்தமானது. புலன்களை நம் ஆதிக்கத்தில் கொண்டுவந்து அடக்கி வாழும் வாழ்க்கை ஆன்மீகம் சம்பந்தமானது.
- நல்ல எண்ணங்கள் நல்ல மனிதனை உருவாக்குகின்றன. கெட்ட எண்ணங்கள் மனிதனையே அழித்து விடுகின்றன.

**-வியாசர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

# வேட்டை

(கடந்த வார தொடர்ச்சி)

தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் அவரின் உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்தவராக எதிரே தன்னை நோக்கிப் பாய்ந்துவரும் குழுவனை இலக்கு வைத்துத் துவக்கினால் சுட்டார். வைத்தவெடி தப்பவில்லை. ஆனால் அவர் இலக்குவைத்த தோட்டா குழுவனின் நெற்றிப் பொட்டினைத் தாக்காது சற்றுக் கீழே தாழ்ந்து அதன் முன்னங்கால் தொடையினில் பட்டுக் காலில் காயத்தையும் முறிவையும் ஏற்படுத்திவிட்டது. ஆயினும் கால்முறிவடைந்த நிலையில் குழுவன் ஆவேசத்துடன் தம்பிராசாவைக் கொம்புகளால் தாக்குவதற்கு அவரை நோக்கி வந்துகொண்டிருந்தது.

வெடிவைத்த துவக்கினுள் மறுதோட்டாவைப் போட்டு மாற்றுவதற்கு அவகாசமில்லை என்பதைப் புரிந்து கொண்டுவிட்ட தம்பிராசா கையிலிருந்த துவக்கினை அப்பால் வீசியெறிந்துவிட்டுத் துணிவை வரவழைத்துக்கொண்டு அவரின் வயிற்றைக் குத்திக் குதறவந்த குழுவனின் கொம்புகளிரண்டினையும் தனது இருகைகளாலும் முழுப்பலத்துடன் இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டார் தம்பிராசா.

யானைப் பலம் கொண்ட குழுவனுடன் கைகளால் மோதுவதென்பது அரிதிலும் அரிது. ஆயினும் கொம்புகளை இறுகப் பற்றிய நிலையில் தனது வயிற்றில் அதன் கொம்புகளைக் குத்தவிடாது போராடிக் கொண்டிருந்தார்.

வெடிவைத்த காயத்தினால் குழுவனின் உடலில் இருந்து இரத்தம் கொப்பளித்துப் பாய்ந்துகொண்டிருந்தது. தம்பிராசாவும் தனது கைகளின் பிடியை நழுவவிடவேயில்லை. குழுவன் தம்பிராசாவை முன்னுக்கும் பின்னுக்குமாக இழுப்பதும் தள்ளுவதுமாக, அங்கிருந்த கரம்பைப் பற்றையுடன் மோதுவதுமாகப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

திடீரென நிகழ்பவற்றை நேரில் கண்ணுற்ற விக்கிரமனுக்கு உடலெங்கும் குளிரோடியது. உடல்பதறியது. அவரால் தம்பிராசாவுக்கு உதவி செய்யவும் முடியவில்லை. அவர் அவ்விடத்திலிருந்து 40 அடி தூரத்தில் இருந்த பாலை மரமொன்றில் தட்டுத்தடுமாறி ஏறி அதன் கிளையின் மீது இருந்தவாறு கத்திக்குளறி உதவி கோரிக் குரலெழுப்பினார். அதனைத்தான் அவரால் செய்ய முடிந்தது. அவர்கள் காட்டினில் அப்பொழுது இருந்த இடம் ஊர் மனையில் இருந்து 3 மைல்களுக்கும் அப்பால் இருந்தமையால் விக்கிரமனின் கூக்குரல் ஊரிலுள்ளவர்களுக்குக் கேட்கவே இல்லை.

பகல் ஒரு மணியளவில் ஆரம்பமான குழுவனுக்கும் தம்பிராசாவுக்குமான நேரடி மோதற் சமர் மாலை 5 மணியாகியபோதும் முடிவடைந்தபாடாயில்லை. குழுவன் தம்பிராசாவைத் தள்ளிச் சென்று கரம்பைப் பற்றையுடன் அடிக்கடி மோதித்தாக்கியதில் கரம்பைப் பற்றையின் முட்கள் அவரின் முதுகுப் புறத் தசைகளில் ஏறிப் புகுந்து முறிந்து போயின. அக்காயங்களினாலும் அவரது முதுகில் இரத்தம் கசிந்தவண்ணமிருந்தது. தாங்கமுடியாத வலியையும், வேதனையையும் அளித்துக்கொண்டிருந்தது. அவரது துவக்கு அநாதரவாகத் தரையில் கிடந்தது. மாலை 6 மணியாகியதும் காட்டில் எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது.

மரத்தின் மீது இருந்த விக்கிரமனும் குரலெடுத்துக் கத்தியதால் களைப்புற்றும், உதவிகிடைக்காத நிலையில் விரக்தியுற்றும் காணப்பட்டார். இருந்தும் தன்வசமிருந்த டோச்லைற்றின் உதவியுடன் இடையிடையே தம்பிராசாவும் குழுவனும் கிடந்த இடத்தை டோர்ச் லைற் வெளிச்சத்தில் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இரவாகியதும் வேட்டைக்குச் சென்ற தம்பிராசா இன்னமும் வீடு திரும்பவில்லையென்ற செய்தி ஊர்மனையெங்கும் பரவியது. சில சமயம் இரவு தங்குவேட்டைக்காக வராது நின்றிருக்கக்கூடும் எனக் கருதிய அவரது வீட்டாரும் மனதைச் சமாதானம் செய்துகொண்டு விடியும் வரையும் காத்திருந்தனர்.

ஆனால் மறுநாள் விடிந்து காலை 10 மணியாகியும் தம்பிராசாவும் அவருடன் கூடச் சென்றவரும் வராமற் போகவே சந்தேகத்தையும் பயத்தையும் அளித்தது. தம்பிராசாவின் கிட்டிய உறவினர்கள் இருவர் தமது துவக்குகளுடன் அவர்களைத் தேடிக் காட்டில் இறங்கினார்கள். அவர்கள் தம்முடன் வேட்டை நாய்களையும் கூட்டிச்சென்றனர்.

நடுப்பகலாகிய வேளையில் அவர்கள் கூட்டிச்சென்ற வேட்டை நாய்கள் காட்டின் ஒரு மூலையில் பலமாகக் குரைப்பது தேடிச் சென்றவர்களின் செவிகளில் விழுந்தது. நாய்களின் குரைப்பொலி கேட்டதிசையை நாடி ஓடிச்சென்றனர்.

அங்கே கரம்பைப் பற்றைகளின் நடுவே குழுமன் இறந்துவிட்ட நிலையில் கிடப்பதையும் தம்பிராசா கதைக்கவே இயலாத நிலையில் வேதனையில் முனகிய வண்ணம் மயக்கமடையும் நிலையில் முதுகில் காயங்களுடன் கிடப்பதையும் கண்டனர். விக்கிரமனும் மரத்தில் இருந்து கீழிறங்கிவந்து இவர்களுடன் இணைந்துகொண்டு நடந்தவற்றைத் தெரிவித்தான்.

தாமதிக்காது வீசியெறியப்பட்டுக் கிடந்த தம்பிராசாவின் துவக்கினையும் எடுத்துக்கொண்டு காட்டுத்தடிகளை வெட்டி ஆத்திநாரினால் பிணைத்து ஓர் காவுபடுக்கையைத் தயாரித்து அதில் தம்பிராசாவைக் குப்புறப் படுக்கவைத்துக் காவிச் சென்றனர். ஊர்மனையை அடைந்ததும் தம்பிராசா அறவே மயக்க நிலையை அடைந்துவிட்டார். உழவு இயந்திரத்தின் மூலம் வவுனியா கொண்டு செல்லப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



அவரது முதுகில் இருந்து மருத்துவர்கள் 26 கரம்பை முட்களைக் கீறி எடுத்தனர். முள் ஒவ்வொன்றும் ஒன்றரை அங்குலத்திற்குக் குறையாமல் நீளமுடையதாக இருந்தன. காயங்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டு மூன்று நாட்களின் பின்னர் தம்பிராசா வீடு திரும்பினார். அதுவரையிலும் நண்பரான விக்கிரமன் மருத்துவமனையில் தங்கியிருந்து தம்பிராசாவுக்கு ஒத்தாசை புரிந்தார். தம்பிராசா வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பிய அன்றுதான் விக்கிரமனும் வவுனியாவில் இருந்து பேரூந்து மூலம் தனது ஊரான மாவிட்டபுரத்திற்குப் பயணமானார்.

குழுவனின் வெடிபட்ட காயத்திலிருந்து அதிகளவில் இரத்தம் வெளியேறியமையினால் குழுவன் சோர்வடைந்து போனதும். மனத்துணிவுடன் அத்தனை மணித்தியாலங்களும் கொம்புகளைப் பற்றிப்பிடித்த கைகளை நழுவவிடாது இறுதிவரை இருந்ததுமே தம்பிராசாவின் உயிரைக்காப்பாற்றியது. இல்லையெனில் குழுவன் அவரைக் குத்திக் குதறியிருக்கும்.

அன்று தொட்டு விக்கிரமன் வேட்டை என்பதையே கனவிலும் நினைப்பதில்லை. தம்பிராசாவின் முதுகில் கரம்பை முட்களைக் கீறி எடுத்த வடுக்கள் அவர் 70 வயதில் இடப்பெயர்வின் போது 2007 இல் கிளிநொச்சி, வட்டக்கச்சியில் வைத்து எறிகணை வீச்சிலகப்பட்டு இறக்கும் வரையில் பதிந்தே இருந்தன. அவர் இறந்துவிட்டபோதிலும் அவரது மனைவியும் நான்கு பிள்ளைகளும் இன்னும் குஞ்சுக்குளத்தில் மீளக்குடியேறி வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரத்தைக் காட்டுங்கள்! முயற்சி செய்யுங்கள்!!

தத்துவதரிசியும் மனோதத்துவ நிபுணரு மான நவீன காலத்தின் மகத்தான சிந்தனை யாளரான வில்லியம் ஜேம்ஸ் எழுதுகிறார்.

'முடிவு பற்றிப் போதுமான அளவு சிரத்தை கொண்டாலே நீங்கள் அந்த முடிவை அடை வீர்கள். நீங்கள் பணக்காரராக விரும்பினால், பணக்காரர் ஆவீர்கள். படிப்பாளியாக விரும் பினால் படிப்பாளி ஆவீர்கள். நல்லவராக விரும்பினால் நல்லவராக ஆவீர்கள். **ஆனால் நீங்கள் உண்மையில் இந்த விஷயங்களுக்கு ஆசைப்பட வேண்டும்.'**

ஆம், வில்லியம் ஜேம்ஸ் சொன்னது போல முடிவு பற்றி போதுமான அளவு சிரத்தை கொண்டாலே, நீங்கள் அந்த முடிவை அடைவீர்கள்.

நீங்கள் வாழ்க்கையில் என்ன ஆக விரும் புகிறீர்களோ அதை அடையும் வழி இதுதான். நீங்கள் போதுமான அளவு சிரத்தை கொள்ள வேண்டும்.

உங்கள் வாழ்க்கை இலட்சியத்தை அடையும் விதம் அதுதான். நீங்கள் போதுமான அளவு சிரத்தை கொள்ள வேண்டும். வெற்றி பெற அதுவே ஆற்றல். போதுமான அளவு சிரத்தை கொள்ளுதல்.

வெற்றி பெறத் தேவையான ஆற்றல், ஒரு பொருளை அடையத் தேவையான ஆற்றல், சாதிக்கத் தேவையான ஆற்றல் விருப்பத்தினால் தூண்டி விடப்படுகிறது.

விருப்பம் உங்கள் அடிமனதில் தீயாய் எரிய வேண்டும்.

உங்கள் ஒவ்வொரு சிந்தனையிலும் செயலிலும் அது தன் முத்திரையைச் சூடு போட வேண்டும். அது ஒன்றே உங்கள் நிலையான மீற முடியாத சிந்தனையாக இருக்க வேண்டும்.

நீங்கள் போதுமான அளவு சிரத்தை கொள்ள வேண்டும்.

**'வாழ்க்கையை வளப்படுத்தும் சிந்தனைகள்'** என்ற என் நூலில் ஒரு பழைய கதை இருக் கிறது. ஒரு நாய் தன் ஓடும் திறமை பற்றிப் பெருமையடித்துக் கொள்கிறது. ஒருநாள் இந்த நாய் முயல் ஒன்றைத் துரத்தியது. ஆனால் அதனால் முயலைப் பிடிக்க முடியவில்லை.

மற்ற நாய்கள் அதைப் பரிகாசம் செய்தன. அப்பொழுது அது விளக்கம் தந்தது. "முயல் தன் உயிருக்குப் பயந்து ஓடியது. நானோ அதைத் துரத்தும் வேடிக்கைக்காக மட்டுமே ஓடினேன்!"

இந்தக் கதையில் வாழ்க்கையில் வெற்றி பெறத் தேவையான மிகுந்த விலை மதிப்புள்ள பாடம் ஒன்று இருக்கிறது. அதுதான் உங்கள் சிரத்தையின் அளவுகோல்.

சொல்லப்பட்ட கதையில் நாய்க்குப் போது மான சிரத்தை இல்லாததால் நாய் முயலைப் பிடிக்க முடியவில்லை. நீங்கள் சிரத்தை (ஆர்வம்) காட்டாததால் எவ்வளவு வாய்ப்புகளை நழுவ விட்டீர்களோ? வீணடித்தீர்களோ?

கதையில் முயல் போதுமான அளவு சிரத்தை காட்டியது. ஏனென்றால் அதைப் பொறுத்தமட்டில் வாழ்வா, சாவா என்ற பிரச்சினை. முயல் கஷ்டப்பட்டு முயன்றது.

நீங்களும் கஷ்டப்பட்டு **முயலச் சிரத்தைச்** காட்ட வேண்டும்.

அந்த இரண்டு வார்த்தைகளில் வெற்றிக்கான மந்திரம் இருக்கிறது: **'கஷ்டப்பட்டு முயற்சி செய்.'**

உலகிலேயே பெரும்பணக்காரரான கோடீஸ்வரர் ஜே.பால்கெட்டி என்பவருடனான ஒரு பேட்டியை காண நேர்ந்தது. அவருடைய வெற்றியின் ரகசியம் கேட்கப்பட்டது. அவருடைய கோடிக்கணக்கான டொலர்களின் வெற்றி ரகசியம் இரண்டே வார்த்தைகளில் அடக்கம்.

**'கஷ்டப்பட்டு முயற்சி செய்.'**

நீங்கள் நிஜமாகவே சிரத்தை காட்டினால், நீங்கள் இன்னும் கஷ்டப்பட்டு முயற்சி செய்வீர்கள். முன்பை விட இன்னும் கடினமான முயற்சி மேற்கொள்வீர்கள். தொடர்ந்து கடினமான முயற்சி செய்வீர்கள். உங்கள் முயற்சிகள் கோபுர வடிவம் பெறும். உங்கள் ஆதாயங்களும் கோபுர வடிவம் பெறும்.

'நிச்சயமாக வெற்றி என்பது இன்னும் சிக்கலானதாக இருக்க வேண்டும்' என்று நீங்கள் சொல்லக் கூடும்.

ஆனால் உண்மையில் அப்படி இல்லை.

1. பெரிய நிறுவனங்களில் சிரத்தை காட்டுபவர் மிகச் சிலரே. எனவே அவர்கள் கஷ்டப்பட்டு முயற்சி மேற்கொள்வதில்லை.

2. நிர்வாக அதிகாரிகளில் சிரத்தை காட்டுபவர் மிகச் சிலரே. எனவே அவர்கள் கஷ்டப்பட்டு முயற்சி மேற்கொள்வதில்லை.

3. மற்ற ஊழியர்களில் மிகக் குறைந்தவர்களே சிரத்தை காட்டுகிறார்கள்.



எனவே அவர்களும் கஷ்டப்பட்டு முயற்சி மேற் கொள்வதில்லை.

4. பெரிய நிறுவனங்கள், உயர் நிர்வாக அதிகாரிகள், சராசரி ஊழியர்கள் தொடர்ந்து காட்டும் முயற்சி சாதாரணமான பழக்கமான, நடைமுறைக்கு உகந்த விஷயங்கள். அவர்களின் போட்டி நிறுவனங்கள் பிழைக்கின்றன; செழிப் படையவும் செய்கின்றன.

எனவே நீங்கள் சிரத்தை எடுத்துக் கடினமான முயற்சி மேற்கொண்டால், தொடர்ந்து மேலும் கடினமான முயற்சி மேற்கொண்டால், இன்னும் கடினமான முயற்சி மேற்கொண்டால் உங்கள் அணுகுமுறை வித்தியாசமாய், குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாய் அமைய உங்கள் வெற்றி நிச்சயம் உறுதி. நிறுவனங்கள் உங்கள் திறன் தெரிந்து உங்களை நாடி வருவார்கள். நீங்கள் கேட்கும் சம்பளம் உங்களுக்கு வழங்கப்படும்.

உங்கள் விரல் நுனிகளில் இப்பொழுதே பயன்படுத்தக் கூடிய **எல்லையற்ற வாய்ப்பு** இதோ.

பிறர் அலட்சியம் காட்டக் கூடிய இடத்தில் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவே.

சிரத்தை காட்டுங்கள், கடினமாய் முயற்சி செய்யுங்கள் மேலும் கடினமாய், இன்னும் இன்னும் கடினமாய்த் தொடர்ந்து. உங்கள் முயற்சிகள் கோபுர வடிவை எட்டட்டும். உங்கள் ஆதாயங்களும் கோபுர வடிவம் பெறும்.

உங்களால் முடியுமா? நீங்கள் செய்வீர்களா? சிரத்தை காட்டுவீர்களா?

**தகுதியான தவிர்க்க முடியாத காரணத்தின் அதிக சக்தி!**

நீங்கள் அடைய விரும்பும் பொருளைத் துரிதமாக அடைய இதோ உபரி சக்தி.

**தகுதியான தவிர்க்க முடியாத காரணத்தின் அதிக சக்தி என்பது இதுதான்.**

**வெற்றிபெற ஒரு நிச்சயமான வழி: நிரூபிக் கப்பட்ட வெற்றி முறைகளில் பலவற்றையும் கையாள்வதுதான்.** வெற்றிபெற அது ஒன்றே தேவை.

யாரும் அவற்றைப் பயன்படுத்தி வெற்றி பெறலாம்.

இப்படி ஒரு நிலைமை குறித்து நான் வருந்துகிறேன்.

உயர்ந்த, தகுதியான இலட்சியங்களைக் கொண்ட நல்ல, திறமைசாலிகளுக்கு மட்டும் நிச்சயமாய் வெற்றி பெறும் வழி உதவும். ஆனால் அதைப் பயன்படுத்தும் யாருக்கும் அது உதவும்.


**உதாரணமாக:**

நீங்கள் சோம்பேறியாய் இருக்க லட்சாதிப தியாக ஆக விரும்புகிறீர்கள்; பெரிய அளவு நிலம், பொருள் வைத்திருக்க விரும்புகிறீர்கள்; பணத்தால் அடையக் கூடிய ஆடம்பரமான சுகபோகங்களை அனுபவிக்க விரும்புகிறீர்கள்; வேலைக்காரர்கள் உங்களுக்கு மதுபானங்கள் வழங்க நீங்கள் சும்மாயிருந்து ஊர் சுற்ற விரும்புகிறீர்கள்.

நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளைப் பயன் படுத்தி நீங்கள் பத்து லட்சம் டொலர் சம்பாதிக் கலாம் - உங்கள் லட்சியம் தகுதி வாய்ந்தது என்பதனால் அல்ல, உங்கள் வழிமுறைகள் வெற்றிக்கு உத்தரவாதம் என்பதனால்.


ஆனால் நீங்கள் அவ்வாறு சம்பாதித்த லட்சக்கணக்கான டொலர்களை வெறும் சுயநல ரீதியாகச் செலவழித்தால் அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்காது. மாறாக அதிகமான உபத்திரவங்கள் உருவாகும்.

நீங்கள் பல லட்சம் டொலர் வைத்திருப்பதால் உங்கள் உபத்திரவங்கள் கூடுதலாகாது. மாறாக அவற்றை நீங்கள் முற்றிலும் சுயநல நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதால் உபத்திரவங்கள் மிகுதியாகும். பெரிய அளவிலான பணம் உபத்திரவங்களின் வாய்ப்பை அதிகமாக்கும். சுயநலம் தான் உபத்திரவம் தோன்றக் காரணமாக அமையும். சுயநல ரீதியாய் மட்டும் பணம் உபயோகப்படுத்தப்படும் போது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொதுவாக சிறு பிள்ளைகளே பலூன் மீது தீராத ஆசை கொண்டு காணப்படுவது வழமை. ஆனால் முற்றிலும் வினோதமாக முறையில் 27 வயதான ஒரு மனிதன் பலூன் மீது அளவு கடந்த மோகம் கொண்டுள்ளார் என்றால் நம்ப முடிகிறதா உங்களால்.

நம்பித்தான் ஆகவேண்டும் என்ன செய்வது உலகில் வழமைக்கு மாறான சில மனிதர்கள் வாழத்தான் செய்கிறார்கள். அவர்களை அறிமுகப்படுத்துவதுதானே புதியஉலகத்தின் வேலை...

சரி விடயத்துக்கு வருவோம். டேவ் என்று அழைக்கப்படும் 27 வயதான ஒரு இளைஞனே இவ்வாறு வினோதமாக முறையில் பலூன் மீது மோகம் கொண்டுள்ளார். தினமும் பலூன்கள் மத்தியில் தூங்குகிறார். அவற்றை இறுக்கி அணைத்து உம்மா கொடுக்கிறார். பலூன்கள் மீது பாசம் கொண்டு கொஞ்சிக் குலாவுகிறார். இப்படியும் முட்டாள்கள் வினோத மனிதர்கள் இன்னும் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். பலூனுடன் குடும்பம் நடத்தும் இந்த ஆசாமியை நீங்களே பாருங்கள்.

## 220 அடுக்கு மாடிகளை கொண்ட கட்டடம்..



உலகிலே மிக உயரமான கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு சீனா திட்டமிட்டுள்ளது. 'ஸ்கை சிட்டி' என்ற பெயரில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடம் 220 அடுக்குமாடிகளைக் கொண்ட கட்டடமாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துபாயில் காணப்படும் 'புர்ஜ் கலீபா' என்ற கட்டமே தற்போது உலகில் மிக உயரமான கட்டடமாக காணப்படுகின்றது. இதனது சாதனையை முறியடிக்கும் வகையில் 2,749 அடி உயரம் கொண்டதாக சீனாவில் மேற்படி கட்டடம் அமைக்கப் படவுள்ளது. 90 நாட்களில் கட்டி முடிக்கப்பட்வுள்ள இக்கட்டடமானது ஜனவரி மாதம் ஆரம்பித்து மார்ச் மாதம் முடிக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு நாளில் ஐந்து மாடிகளை நிர்மாணிப்பதற்கு கட்டடவியலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

புர்ஜ் கலீபா கட்டிடத்தின் நிர்மாணப் பணியில் ஈடுபட்ட கட்டடவியளாலர்களே 'ஸ்கை சிட்டி' யின் நிர்மாணப் பணியிலும் ஈடுபடவுள்ளனர். 'புர்ஜ் கலீபா' கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு 5 வருடங்கள் எடுக்கப்பட்டுள்ளது. 79,617 மில்லியன் இலங்கை ரூபாய் செலவில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகில் 20 கட்டடங்கள் உயரமான கட்டடங்களாக காணப்படுகின்றன. இவற்றில் 9 கட்டடங்கள் சீனாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



## உலகின் மிகப்பெரிய உள்ளக கடற்கரை

இந்த கடற்கரை ஜேர்மனிய கிராமமொன்றின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடற்கரையில், சுமார் 6 ஆயிரம் மக்கள் ஒரே தடவையில் சூரிய ஒளியை அனுபவிக்க முடியும்.

கிறவுன்ஸ்னிக் பகுதியில் அமைந்துள்ள வெப்ப வலயத் தீவின் சுற்றுலா மையம் அமைந்துள்ளது. இதில் சுமார் 50 ஆயிரம் மரங்களைக் கொண்ட காடும் உள்ளது.

பெரிய பலூனொன்றில் பறக்கக்கூடிய வகையிலான பரந்தளவு நிலப்பரப்பில் இந்த கடற்கரைச் சுற்றுலா மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தீவில் மிகப்பெரிய நீச்சல் தடாகமும் அமைக்கப்பட்டுள்ளது. பழைய விமானக் கூடாரம் ஒன்றே பின்நாட்களில் கடற்கரை சுற்றுலா மையமாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## இரண்டாம் உலகப்போரின்போது அனுப்பப்பட்ட போஸ்ட் கார்ட்டுகள்

அமெரிக்காவில் சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் இரண்டாம் உலகப்போரின் போது அனுப்பப்பட்ட போஸ்ட் கார்ட் தற்போதுதான் உரியவரிடம் சென்று சேர்ந்துள்ளது.

கடந்த 1943ம் வருடம் ஜூலை 4ம் தேதி இலினாய்சின் ராக்போர்ட் எல்மிரா பகுதியில் உள்ள பாவுலின் மற்றும் தெரசா என்ற சகோதரிகளுக்கு அனுப்பப்பட்டது.

இவர்களின் சகோதரன் ஜோர்ஜ், இரண்டாம் உலகப்போரின்போது, ராக்போர்ட் ராணுவ மருத்துவ முகாமில் பணியாற்றி வந்தார். அப்போது இந்த போஸ்ட் கார்ட் அனுப்பப்பட்டுள்ளது. கடந்த வாரம் வந்த இந்த போஸ்ட் கார்டில், குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தற்போது, வேறு குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.




ஜப்பானின் டவ்ன்டவுன் பகுதியில் தனாகா கிகின்ஜோகு ஜுவல்லரி என்ற நகைக்கடை உள்ளது. இங்கு சுத்தத் தங்கத்தாலான 40 கிலோ எடை கொண்ட கிறிஸ்துமஸ் மரம் செய்யப்பட்டு விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

2.4 மீற்றர் உயரமும், 1.2 மீற்றர் விட்டமும் கொண்ட இந்த மரத்தில் மிக்கி மவுஸ், சின்ட்ரல்லா, டிங்கர் பெல் போன்ற 50 டிஸ்னி கதாபாத்திரங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் சுற்றிலும் தங்கத்தால் செய்யப்பட்ட இலைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

இதன் மதிப்பு ரூ.23 கோடி(இந்திய ரூபாய்) என்று நகைக்கடையின் விற்பனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


இவ்வளவு பணம் கொடுத்து வாங்க முடியாத நபர்களுக்காக, குறைந்த விலையில் 25 செ.மீ உயரத்தில் 20 டிஸ்னி உருவங்கள் பொறிக்கப்பட்ட ரூ. 1.34 கோடி மதிப்பிலான மினி கிறிஸ்துமஸ் மரங்களையும் இந்த கடையில் வைத்துள்ளனர்.

பெரிய மரத்தை வாங்க இதுவரை யாரும் வரவில்லையாம். ஆனால் சிறிய மரத்தை வாங்க சிலர் முன்வந்துள்ளனர் என்று கடை அதிகாரி தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சினிமா




**நா**வலைத் தழுவி எடுக்கப் பட்ட சினிமாக்கள் அவ்வளவு நன்றாக இருக்காது என்ற பொதுவான கருத்தை பொய்யாக்கி இருக்கிறது 'லைஃப் ஒஃப் பை' ஹொலிவுட் படம். கனடாவைச் சேர்ந்த யான் மார்டல் என்பவர் எழுதி கடந்த 2001ம் ஆண்டில் வெளிவந்த நாவல்தான் லைஃப் ஆஃப் பை. நாவல் எந்த அளவுக்கு பரபரப்பு ஏற்படுத்தியதோ அந்த அளவுக்கு படமும் தன் பங்குக்கு விறுவிறுப்பைக் கூட்டியுள்ளது.

மிகவும் பிரபலமடைந்த இந்த நாவல் 'புக்கர் பரிசு' உட்பட ஏராளமான விருதுகளை வாங்கிக் குவித்தது. இத்தனைக்கும் இந்த கதை யான் மார்டலின் சொந்தக் கதை அல்ல. இவர் பிரேசில் எழுத்தாளர் சிக்லியர் என்பவர் எழுதிய 'மேக்ஸ் அண்ட் தி கேட்ஸ்' என்ற கதையை படித்துள்ளார். அதன் கதையை கொப்பியடித்து தனது இந்திய அனுபவத்துடன் 'லைஃப் ஒஃப் பை' நாவலை வெளியிட்டார்.

அது சக்கை போடு போட்டதால், இயக்குநர் ஆங் லீ இயக்கத்தில், டேவிட் மேகி என்பவரின் திரைக்கதையில் தற்போது ஹொலிவுட் படமாக வெளிவந்துள்ளது 'லைஃப் ஒஃப் பை'. பை என்ற இந்திய சிறுவனின் அப்பா புதுச்சேரியில் மிருகக் காட்சி சாலை நடத்தி வருகிறார். இவனது குடும்பம் கனடாவுக்கு இடம் பெயர்கிறது. சில விலங்குகளை வெளிநாட்டு மிருக காட்சி சாலைகளில் விற்பதற் காக, அவற்றை சரக்குக் கப்பலில் எடுத்துச் செல்கின்றனர். கனடாவை நெருங்கும் போது பசிபிக் கடலில் ஏற்படும் புயலில் சிக்கி கப்பல் கவிழ்கிறது.

புலி உட்பட சில விலங்குகளுடன் லைஃப் போட்டில் பை தப்பிக்கிறான். உணவு கிடைக்காததால் படகில் இருக்கும் விலங்குகள் ஒன்றை ஒன்று அடித்து சாப்பிடுகின்றன. இறுதியில் பையும், ஒரு புலியும் மட்டுமே படகில் உள்ளனர். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் என 3 மதங்களில் ஈடுபாடு கொண்ட பை, தனது ஆன்மீக பலத்தால் புலியை வசீகரித்து எப்படியும் தப்பி விடலாம் என்று நம்புகிறான்.

கடலில் உள்ள மீன்களைப் பிடித்து புலிக்கு கொடுத்துவிட்டு தானும் உண்கிறான். இதனால் இருவருக்கும் இடையே ஒரு பாசப் பிணைப்பு ஏற்படுகிறது. இப்படி 227 நாள்கள் புலியுடன் தனியாக வாழ்ந்து மெக்சிகோவை அடைகிறான் பை. இந்த நிகழ்வை பை சீனியர், ஜப்பான் கடல்சார் அதிகாரிகளிடம் பிளாஸ் பேக் கதையாக சொல்வது தான் லைஃப் ஒஃப் பை திரைப்படம்.

புதுச்சேரி முத்தியால் பேட்டையில் பிரபலமான 'தி ஹோலி ரோசரி சர்ச்' முதல் தைவான், கனடா என்று பல இடங்களில் காட்சிகள் நகர்கின்றன. படம் முழுவதும் நீடிக்கும் கிராபிக்ஸ் தொழில்நுட்பம் அவதார் படத்தை மிஞ்சிவிட்டது. இளம் பையாக சூரஜ் சர்மாவும், சீனியர் பையாக இர்பான் கானும் நடித்துள்ளனர். நடிகை தபு, அடில் ஹுசைன் ஆகியோர் இந்தப் படத்தில் கதாபாத்திரங்களாகவே வாழ்ந்துள்ளனர்.

## வரலட்சுமியின் துணிச்சல்



**சி**ம்புவின், 'போடாபோடி' படத்தின் மூலம் அறிமுகமாகியிருப் பவர் வரலட்சுமி. இதில், இன்னொரு ஆச்சரியப்படும் செய்தியும் உள்ளது. அது என்னவென்றால், தனக்குத்தானே சொந்தக்குரலில் டப்பிங்கும் பேசியுள்ளார் வரலட்சுமி.

## ரஜினி பற்றி அல்பம் தயாரிக்கிறார் லோரன்ஸ்



ரஜினிகாந்தின் பிறந்த நாள் டிசெம்பர் மாதம் 12,ம் திகதி வருகிறது. அதையொட்டி ராகவா லோரன்ஸ், ரஜினியின் பிறந்த நாள் அல்பம் ஒன்றை தயாரித்து வருகிறார். இதுபற்றி அவர் கூறியதாவது. ரஜினிக்கு இந்த பிறந்த நாள் சிறப்பானது. காரணம் அவர் மறுபிறவி எடுத்த பிறகு வரும் பிறந்த நாள். 12.12.12 என அமைந்த நாள். இதனால் அவருக்கு பிறந்த நாள் பரிசாக அல்பம் தயாரித்து வருகிறேன்.

## பூர்வகுடி ஜல்லிகட்டு குடு



**தி**ருத்தணி மு
சார்பில் எம்.கும
ட , 'பூர்வ
என்ற புதுமுகங்
"கிராமத்தில் ஜ
குடும்பத்தின் த
தொடர்புடையத
பாதிக்கப்பட்ட
கதை இது. பா
கட்டால் எத்த
பலியாகிறது.
என்னவாகிறது
படம் சொல்லு
இயக்குநர் இ

## சந்தானத்துக்கு கிடைத்த பட்டம்



**ஹீ**ரோக்களை போல கொமெடி நடிகர்களுக்கும் ரசிகர்களால் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. வடிவேலுக்கு வைகை புயல் என்று பட்டம் இருக்கிறது. வடிவேலுவை தொடர்ந்து தற்போது கொமெடியில் கோடிகளை குவித்து வரும் சந்தானத்திற்கு இதுவரை பட்டம் எதுவும் வழங்கப்படவில்லை. அந்தக் குறை இனி நீங்கப்போகிறது. தற்போது சந்தானம் ஆர்யாவுடன் நடித்து வரும் படம் 'சேட்டை'. இந்தி 'டெல்லி பெல்லி'யின் ரீமேக். கண்ணன் இயக்கி வருகிறார். இந்தப் படத்தின் டைட்டில் கார்டிலும், விளம்பரங்களிலும் சந்தானத்தை கொமெடி சூப்பர் ஸ்டார் என்ற பட்டத்துடன் குறிப்பிடப் போகிறார்கள். இதற்கு சந்தானமும் ஒப்புதல் கொடுத்து விட்டாராம்.





## இப்பவும் அழகாக இருக்கிறேன்

'**நா**ன் எதிர்பார்த்ததை விட எனது மார்க்கெட் தற்போதைய நிலவரப்படி சூப்பராக உள்ளது. மார்க்கெட்டில் பிசியாக இருக்கும் முன்னணி நடிகர்களே என்னுடன் டூயட் பாட துடிக்கிறார்கள். இது எனக்கு ரொம்ப பெருமையாக உள்ளது. அதனால் தொடர்ந்து மார்க்கெட்டை சீராக வைத்துக்கொள் வதற்காக இளவட்ட நடிகர்களுடன் மட்டுமே நடிப்பது என்று இப்போது முடிவெடுத்திருக் கிறேன்' என்கிறார் நயன்தாரா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஆண்ட்ரியா கோபம்

'என்றென்றும் புன்னகை' படத்தில் மொடலிங் துறையைச் சேர்ந்த பெண் வேடம் எனக்கு. ஒரு காட்சியில் உடல் தோல் நிறத்திலான ஆடை அணிந்திருப்பேன். அதை பார்த்த யாரோ நிர்வாண காட்சியில் நடித்துவிட்டதாக வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். கேரக்டருக்கு தேவையென்றால் கவர்ச்சியாக நடிக்கலாம். அதற்காக நிர்வாண காட்சியில் எல்லாம் நான் நடிக்க மாட்டேன் என்கிறார் ஆண்ட்ரியா.



'தல' நடிகர் பெயரிடப்படாத புதிய படத்தில் நடித்து வருகிறார். இதன் இயக்குநர் உடல் எடையை குறைத்தால் நன்றாக இருக்கும் எனக் கூறினாராம். இதனால் உடல் எடையை குறைத்து சிக்ஸ் பேக் போல் ஆவேன் என 'தல' நடிகர் பெரும்பா லான நேரத்தை உடற்பயிற்சி கூடத்திலேயே செலவிட்டாராம். இதை அறிந்த அவரது நலம் விரும்பிகள் உடம்பை குறைத்தால் ஏழுமலையான் கோவில் இருக்கும் பெயர் கொண்ட படத்தில் வந்ததுபோல் உங்களது முகம் அசிங்கமாக இருக்கும் எனக் கூறினார்களாம். இதனால் உடல் எடையை குறைக்கும் முடிவை கைவிட்டாராம் 'தல' நடிகர்.



## சீண்டினால் பொறுக்கமாட்டேன்

'என்னைப்பற்றி ஆராய்வதே சிலருக்கு வேலையாக இருக்கிறது. எதிலும் உண்மையாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். எதிர்மறையாக சீண்டிப் பார்க்கும் போது அதை தாங்கிக்கொள்ள முடியவில்லை. எதிர்ப்பைக் காட்டுகிறேன் என்று சமீபத்தில் வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார் திவ்யா.

## ட்டு குடும்பத்தின் கதை

ிருத்தணி முருகன் பிலிம்ஸ் ார்பில் எம்.குமார் தயாரிக்கும் , 'பூர்வ . ஈஸ்வர், மதுஸ்ரீ ன்ற புதுமுகங்கள் நடிக்கிறார்கள். கிராமத்தில் ஜல்லிகட்டு ஒவ்வொரு தடும்பத்தின் தன்மானத்தோடு தொடர்புடையது. ஜல்லிக்கட்டால் ாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் கதை இது. பாதுகாப்பற்ற ஜல்லிக் கட்டால் எத்தனை உயிர்கள் பலியாகிறது. அவர்கள் குடும்பம் என்னவாகிறது என்பதை இந்தப் படம் சொல்லுகிறது" என கூறினார் இயக்குநர் இப்ராஹிம்..




சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை வரலாறு 'கிளைமாக்ஸ்' என்ற பெயரில் மலையாளத்தில் தயாராகி உள்ளது. இதில் சில்க் ஸ்மிதாவாக சனாகான் நடித்துள்ளார். அனில் இயக்கியுள்ள இந்தப் படம் நவம்பர் மாதம் ரிலீஸ் ஆவதாக இருந்தது. ஆனால், 'பிக்ஸ் பாஸ் 6' நிகழ்ச்சியில் சனாகான் பங்கேற்றுள்ளதால், பட ரிலீஸ் அடுத்த மாதத்துக்கு தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

## விருதுகளை புறக்கணிக்கும் இளையராஜா!!



இளையராஜா, முதன் முதலில் 'தேசிய விருது' வழங்கப்பட்டபோது அதையும் வாங்க மறுத்ததும், கடந்த ஆண்டு 'லிம்கா' சாதனையாளர் விருதை மறுத்ததும் குறிப்பிடத்தக்கது. விருதுகளின் மேல் இளையராஜாவுக்கு எப்போதுமே நம்பிக்கை இல்லை. "ஒரு படத்தில் சிறந்த இசை அமைப்பாளர் என்று ஒருவருக்கும், சிறந்த பின்னணி இசை அமைப்பாளர் என்று ஒருவருக்கும் விருது வழங்கமுடியுமா?சிறந்த பின்னணி இசை கொடுப்பவருக்கு சிறந்த பாடலை கொடுக்க முடியாதா, சிறந்த பாடலை கொடுப்பவருக்கு சிறந்த பின்னணி இசையை கொடுக்க முடியாதா? இதனால் தேசிய விருதுகள் மீது எனக்கு பெரிய மதிப்பில்லை" என்கிறார் இளையராஜா.

## சாதனை செய்த 'டுவிலைட் சாகா'




'டுவிலைட் சாகா - பிரேக்கிங் டவுன் 2' இந்த வேம்பயர் சீரிஸின் கடைசிப்படமான இது வார இறுதியில் 141 மில்லியன் டாலர்களை வசூலித்து சாதனை படைத்திருக்கிறது. இந்தப் படத்தின் வரவால் அதிகம் பாதிக்கப்பட்டவர் ஜேம்ஸ்பாண்ட். படம் பரவாயில்லை ரகம் என்றாலும் யுஎஸ் இளசுகளுக்கு இந்த வேம்பயர்தான் இப்போது இஷ்ட தெய்வம். வசூலில் இப்படம் ஒரு கலக்கு கலக்கும் என்கிறார்கள்.

## மணல் கொள்ளைக்கு எதிரான கதை

நடிகர் மகேந்திரன், புதுமுகம் நீலாம்பரி நடிக்கும் படம் 'போரிடப் பழகு'. "வருங்கால சந்ததிக்கு முன்னோர்களாகிய நாம் விட்டுச் செல்லப்போவது வறண்ட பாலைவனமும், நீர் இல்லா பூமியையும்தான். அந்தளவுக்கு ஆற்று மணல் தோண்டி எடுக்கப்பட்டு கடத்தப்படுகிறது. மணல் கொள்ளையால் இயற்கை வளம் எவ்வாறு கொள்ளையடிக் கப்படுகிறது என்பதை புரிய வைத்து மணல் கொள்ளைக்கு எதிராக அவரை மாற்றி போராட வைக்கும் கதை இது" என்கிறார் இயக்குநர் பாரதி.





## கிராமத்து பெண் வேடங்களில் கலக்கும் இனியா

'வாகை சூடவா' படத்தில் கிராமத்துப் பெண வேடத்தில் அறிமுகமானார் இனியா. அப்படத்தில் 'சர சர சாரக் காற்று வீசும் போது சாரப் பார்த்து பேசும் போது சாரப்பாம்பு போல நெஞ்சில் சத்தம் போடுது' என்று பாடி இவர் நடனம் ஆடியது ரசிகர்களை சுண்டி இழுத்தது. சமீபத்தில் ரிலீசான 'அம்மாவின் கைப்பேசி' படத்திலும் கிராமத்துப் பெண்ணாக வந்தார். இதில் அவரது நடிப்பு பேசப்பட்டது. ரசிகர்களிடம் இருந்து பாராட்டுகளும் குவிகிறது. இப்படத்தில் தனக்கு விருது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார். தொடர்ந்து பாரதிராஜா இயக்கும் அன்னக்கொடியும் கொடிவீரனும்' படத்திலும் அழுக்கு சேலையில் முள்காட்டில் வசிக்கும் கிராமியப் பெண்ணாகவே வருகிறார். இந்தப் படமும் தனக்கு பெயர் வாங்கிக் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார் அவர்.




கிருஷ்ணகிரியில் நடந்த உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு உருவாகிறது 'நீ என் உயிரே'. "குடும்பம் வாழ்வதும், வீழ்வதும் பெண்கள் கையில் தான் இருக்கிறது. இதுதான் படத்தின் கரு. நவரசன் ஹீரோ. பெங்களூரைச் சேர்ந்த மாணவி வைசாலி இந்தப் படத்தில் ஹீரோயினாக அறிமுகமாகிறார்' என்கிறார் இயக்குநர் விகாஷ் லலித்ராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்ச வியாபாரியும் முட்டாள் உதவியாளர்களும்



முன்னொரு காலத்தில் பணக்கார துணி வியாபாரி ஒருவன் இருந்தான், பணக்காரனாக இருந்தாலும் படு கஞ்சன். அவனிடம் வேலை செய்தவர்கள் அனைவரும் படு முட்டாள்கள். எங்கே புத்திசாலிகளை வேலைக்கு வைத்தால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும், தன்னிடமே படித்து எங்கே தனக்கு போட்டியாக வியாபாரம் தொடங்கிடுவார்கள் என்றும் நினைத்தான்.

ஒரு நாள் வழக்கம் போல் விற்பனைக்காக வெளியூர் செல்ல முடிவு செய்தான். விலை உயர்ந்த துணிகளை எல்லாம் நான்கைந்து பெட்டிகளுக்குள் வைத்து மூடினான். எல்லாப் பெட்டிகளையும் ஒரு ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிவிட்டு மிகக்குறைந்த கூலிக்கு அமர்த்திய முட்டாள் வேலைக்காரர்கள் இருவருடன் புறப்பட்டான்.

அளவுக்கு அதிகமாக பொருட்களை ஏற்றியதால் வழியில் பாரம் தாங்காமல் ஒட்டகம் கீழே விழுந்து விட்டது.

வேலைக்காரர்களைப் பார்த்து அவன், "நீங்கள் இங்கேயே ஒட்டகத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பக்கத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று இன்னொரு ஒட்டகம் கொண்டு வருகிறேன். பிறகு சுமையை இரண்டு ஒட்டகத்திலும் சமமாக வைத்துப் பயணத்தைத் தொடரலாம். நான் இல்லாத போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். நான் வருவதற்குள் மழை வந்துவிட்டால் பெட்டிகளை எப்படியாவது நனையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்," என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வேலைக்காரர்கள் இருவரும் சரியான முட்டாள்கள். இது தெரிந்தும் குறைந்த கூலி கொடுத்து அவர்களை விலை பேசியிருந்தான் வணிகன். எல்லாரும் எவ்வளவோ சொன்னார்கள். ஆனால், வியாபாரியோ வழித்துணைக்குதானே இவர்களை அழைத்துச் செல்கிறேன். எடுபிடி வேலை செய்ய வேண்டும். இதனால் தனக்கு ஒரு பாதிப்பும் வராது என்று நினைத்தான்.

சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது.

"நம் முதலாளி பெட்டிகளை நனையாமல் பார்த்துக் கொள்ளச் சொன்னார். இப்பொழுது என்ன செய்வது?" என்று கேட்டான் ஒருவன்.

"பெட்டிகளுக்கு உள்ளே இருக்கின்ற துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகள் மேலே போட்டு மூடுவோம். பெட்டிகள் நனையாமல் பார்த்துக் கொள்வோம்," என்றான் அடுத்தவன்.

இருவரும் பெட்டிகளுக்குள் இருந்த விலையுயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகளுக்கு மேல் போட்டனர்.

மழையில் நனைந்து துணிகள் எல்லாம் ஈரமாகிவிட்டன.

ஒட்டகத்துடன் திரும்பிய வணிகன், ஐயோ! என்னடா செய்தீர்கள்? துணிகள் எல்லாம் நனைந்து வீணாகிவிட்டதே," என்று கோபத்துடன் கத்தினான்.

"முதலாளி நீங்க சொன்னபடி பெட்டிகள் நனையாமல் இருப்பதற்காகத் துணிகளை எல்லாம் அதன் மேலே போட்டோம். அந்தப் பெட்டிகள் சிறிது கூட நனையவில்லை. நீங்களே பாருங்கள்," என்றான் அவர்களில் ஒருவன்.

முட்டாள்களான உங்களுக்கு இனி என்னிடம் வேலை இல்லை," என்று அவர்களை விரட்டினான் வணிகன்.


கொஞ்சம் காசுக்கு சிக்கனம் பார்க்கப் போய் முதலுக்கே நஷ்டம் வந்ததை எண்ணி வேதனையுடன் ஊர் திரும்பினான் வணிகன்.

சிறுவர் சுடர்

## வண்ணம் தீட்டுங்கள்



நூலை ஊசியினுள் கோர்க்க வேண்டும். ஆனால் இரண்டும் தனித்தனியாக உள்ளன. ஊசியை நூல் இருக்கும் இடத்துக்கு கொண்டுசெல்ல வழி கண்டுபிடியுங்கள்.



# புருஷோத்தமனும் அலெக்சாண்டரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'அதென்ன சிரிப்பு'

அதிபர்மாரின்ர கெட்டித்தனங்கள் எண்டால் பாருங்க சொல்லி வேலை இல்லை.

எல்லாத்தையும் சமாளிக்கவேணும். சாதனை படைக்க வேண்டும். ஒரு பிரச்சினை முளைவிடும். சிலவேளை முளையிலேயே அந்தப் பிரச்சினையைக் கிள்ளி எறிந்து விடலாம். சிலவேளை அதுவே பூதாகாரமாகிவிடும். இல்லாவிட்டாலும் சிலபேர் ஊதிப் பெருப்பித்து விடுவார்கள்.

எங்களுக்கு ஒரு அதிபர் இருந்தார். சிரிச்சால் தெய்வீகச் சிரிப்புத்தான்.

ஒருநாள் எஸ்.டி.எஸ் கூட்டம் அப்படி ஏதாவது கூட்டம் நடந்தால் தான், தாங்கள் ஒரு பிரமுகர் என்பதைக் காட்ட ஒரு சிலருக்கு வாய்ப்பு வரும் என்பதால், அதனைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்வர்.

ஒரு கிழமைக்கு முன்னரே கூட்டம் களைகட்டத் தொடங்கிவிட்டது. சந்தாப் பணம் கட்டினால் தான் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்பதால் சந்தா கட்டி 'றிசீற்' வாங்கு வதில் கரிசனையாக இருந்தனர்.

அல்லாமலும் அந்தப் பாடசாலையில் அவரது பிள்ளை படித்தால் அல்லது பாதுகாவலராக இருந்தால்தான் 'மெம்பர்சிப்' கிடைக்கும் அல்லது நலன் விரும்பி பழைய மாணவர் பிரதிநிதியாகவும் பங்குகொள்ளலாம். இவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கும்.

அதிபரைக் கிழிகிழியெனக் கிழிப்பதற்குத் திட்டம் போட்டு பலரும் அங்கத்தவராக இணைந்து கொண்டனர். பலத்த பரபரப்பிற்கு மத்தியில் பொதுக்கூட்டம் கூடியது.

அதிபர் மிக "நோமலாக" வழமையான புன்சிரிப்புடன் தலைமைக் கதிரையில் அமர்ந்துகொண்டார்.

தேவாரக்கூட்டம் ஆரம்பமானது. அங்கத்தவர் பட்டியல் சரிபார்க்கப் பட்டது வருடாந்த அறிக்கை, கணக்காளரால் ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்ட கணக்கறிக்கை சபையில் வாசிக்கப்பட்டது.

தனது பிள்ளை வேறொரு பிரபல பாடசாலையில் கல்வி கற்க வேறொரு பிள்ளைக்குப் பாதுகாவலர் என்ற முறையில் 'மெம்பர்சிப்' எடுத்த 'மெம்பர்' கதைக்கத் தொடங்கினார். அவர் இந்தப் பாடசாலை பழைய மாணவரும் கூட.

தாம் இப்பாடசாலை வி.ஐ.பி. தாம் வரும்போது, அதிபர் அனைத்துப் பணிகளையும் நிறுத்தி விட்டுத் தமக்குச் செங்கம்பள வரவேற்பு அளிக்கவேண்டும் என்பது தான் இப் பாடசாலை நலன் விரும்பிகள் சிலரது எதிர்பார்ப்பு. அவ் எதிர்பார்ப்பினை நிறைவேற்றக்கூடிய அதிபராயின் அவர் 'நல்' அதிபர். இல்லையேல் 'நொட்குட்' அந்தச் சிலர் பின்னணியிலிருந்து யாரையாவது தூண்டி அதிபரைக் கொச்சைப்படுத்த முயற்சிப்பதுதான் இத்தகைய கூட்டங்கள்.

இந்தச் சிலரால் 'சிறப்புப் பேச்சாளராக' இறக்குமதி செய்யப்பட்ட அந்த மெம்பர் நாலு கேளாக் கேள்வி கேட்டால்த்தான் தம்மையும் ஒரு பொருட்டாக மதித்து அழைத்துவந்த அந்த சிலருக்கு நன்றிக் கடனாக அமையும். அந்த அங்கத்தவர் ஆவேசமாகத் தனது உரையைத் தொடங்கினார்.

"இந்தப் பாடசாலை பல சிறப்பான அதிபர்களைக் கொண்டிருந்த ஒரு பாடசாலை, அவர்களின் கீழ் அவர்கள் வழிகாட்டல்களின் கீழ் நாம் படித்தோம். ஆனால் இப்போ ஒழுக்கம், கல்வி எல்லாம் கீழ்நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. அது ஒரு பொற்காலம்..." என்று முழங்கத் தொடங்கியதும் அதிபர், மேசையில் தட்டித் தட்டிச் சிரிக்கத் தொடங்கிவிட்டார். உண்மையில் அது ஒரு தெய்வீகச் சிரிப்புத்தான். சிரிப்பு அடக்க முடியாமலே, சபையின் கௌர வத்தைக் கருத்தில் கொண்டு சிரிப்பினை மட்டுப் படுத்தியதுபோல இருந்தது.

மேலும் அதிபரை வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டு சபை மண்டப பின் வாங்கில் போய் அமர்ந்து கொண்டார். சபையின் கைதட்டலிலும் அவரை அழைத்து வந்தவர்கள் ஊடாகவும் கம்பீர நடை நடந்து சென்றார். கூட்டம் தொடங்கிய போது முன் வரிசையில் இடம் பிடித்துக் கொண்டிருந்த அந்த அங்கத்தவ - பின்னர் வந்த ஒருவர் அந்த ஆசனத்தில் அமரவே பின் வரிசைக்குச் சென்றார்.

நம்ம அதிபர் நல்ல அதிபர். சிறந்த ஒரு வசீகரப் பேச்சாளர். சும்மா விடுவாரா? 'செம குடு' கொடுப்பார் என அதிபருக்கும் தலைவருக்கும் ஒரு புறமாக அமர்ந்திருந்த நான் - நிமிர்ந்து உட்கார்ந்தேன். என் முகத்தில் கொப்பளித்த ஆத்திரத்திற்கு, ஒரு ஆறுதல் கிடைக்கும் என்ற எதிர்பார்ப் புடன் இருந்தேன்.

அதிபர் எழுந்தார். அவர் முகத்தில் இவ்வளவு ஏளனத்தின் பின்னும் சலனமில்லை. மிகச் சாதாரணமாக, 'முன்னர் பேசியவர் பல நல்ல கருத்துக்களைச் சொன்னார். நீங்களும் பலர் இதேபோன்ற நல்ல கருத்து களைச் சொல்ல ஆவலாக இருப்பீர்கள். தயவு செய்து முன்னே வந்து உங்கள் கருத்துக்களை முன்வைக்குமாறு மிக விநயமாகக் கேட்டுக் கொள்கிறேன்' என்று விட்டு அமர்ந்துவிட்டார்.

அதிபர் தனது பதிலடியைக் கொடுப்பார் என்ற எதிர்பார்ப்பில் இருந்த எனக்கு ஏமாற்றமாக இருந்தது. சிறிதுநேரம் பார்த்து இருந்தேன். அதிபர் எதுவும் கூறுவதாக இல்லை. ஆத்திரம் மேலிட பேச எழ முயற்சித்தேன். எனது உணர்வைப் புரிந்து கொண்டது போல அதிபர் அருகிலிருந்த என்னைத் தட்டி எழவேண்டாம், பேசவேண்டாம் என்பதுபோல நாசூக்காக சைகை செய்தார்.

கடைசியில் நன்றாகக் குடுப்பார் என்ற நம்பிக்கையில் அமைதிகாத்தேன். கூட்டமும் குழப்பமின்றித் தேவாரத்துடன் முடிவுற்றது. கூட்டமும் கலைந்தது அனைவருக்கும் 'தாங்க்ஸ்' என்றவாறே கொண்டுவந்த 'பைலை' யும் எடுத்துக்கொண்டு தனது காரியாலய அறைக்குச் சென்றார்.

ஆத்திரத்துடன் அவரைத் தொடர்ந்து அவரது காரியாலயத்துள் சென்றேன்.

'யேஸ்' மிஸ்ரர் பரமசிவம்... ஏதும் அலுவலே?' என மிகச் சாதாரணமாகக் கேட்டார். "என்ன சேர்?" அவர் இவ்வளவு தாறுமாறாகப் பேச பேசாமல் கேட்டுக் கொண்டு வாறியள்?... உங்களை அவமானப் படுத்துறதுக் கொண்டெ அவரை SDS மெம்பராக - பாதுகாவலராக சேர்த்தவங்கள். அவற்றை பிள்ளையள் ஒன்றும் இங்க படிக்கிறேல்லை. தெரியும்தானே?" என்றேன்.

'தெரியும்' என்றார்.

"அப்ப நல்லாக் குடுத்திருக்கலாம் தானே?" என்றேன். அவர் அமைதியாக நின்றார்.

"அது சரி... அவன் உப்பிடிக் கேள்வி கேட்க அது என்ன சிரிப்பு?" என்றேன். பழைய படியே அதே அடக்கமுடியாத சிரிப்பு.. "இரும் பரம்..." என்று என்னை எதிரில் அமரவைத்தார்.

"இப்ப இந்தப் பாடசாலையில ஒழுக்கம் கல்வி எல்லாம் கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்று அவர் சொன்ன உடனை எனக்குச் சிரிப்பு வந்திட்டுது. சிறப்பான அதிபர்களுக்குக் கீழை பொற்காலத்தில் படிச்சவர், இப்படி சபையில அநாகரிகமாகப் பேசேக்கை அவையளை அவமதிச்ச மாதிரி இருந்தது. அதுதான் சிரிப்பு வந்திட்டுது. லொஜிக்கலாச் சிந்தித்தால் சிரிப்பு வருமோ வராதோ...? அவையளுக்குக் கீழே படிச்சவர் எட்டாம் வகுப்போடை போய் சாக்கு வியாபாரம் தொடங்கி விட்டார். அந்தப் பொற்காலத்தில கல்வி உயர் நிலையில நிண்டதெண்டால், இவரும் ஒரு கல்வி உயர் நிலையை அடைஞ்சிருப்பார். அவற்றை பேச்சைக் கேட்டனீரல்லே...? வலு கெட்டிக்காரன். அதை மெச்சவேணும். கெட்டிக்காரன் கல்வியில உயர் நிலை அடையவில்லையெண்டால் ஏதோ பிரச்சினை இருந்திருக்குது. இவர் பாதுகாவலராக ஒப்பமிட்டு எஸ்.டி.எஸ் மெம்பராகின பையன் 'ஓ எல்' லில நல்ல றிசல்ற் எடுத்து நல்லாப் படிக்கிறான். அதுவே கல்வியில் நாங்கள் கீழ் நிலைக்குப் பேகேல்லை எண்டுறதுக்கு நல்ல ஒரு சுட்டி. அதை யோசிச்சுப் பார்த்த உடனை சிரிப்பு வந்திட்டுது. அடக்க ஏலாமல் போய்ச்சுது..." என்றார். மீண்டும் அதே சிரிப்பு மேசையில் தட்டியவாறு.

"இதை மேடையில சொல்லியிருக்கலாம் தானே சேர்?" என்றேன்.

"இப்படி மேடையில சொல்லுறதே... ச்சா...... ! என்னைப் பற்றி என்ன நினைப்பாங்கள். அப்படிச்சொல்லி இருந்தால் அவர் சொன்னது சரியாய்ப் போயிருக்கும். ஒழுக்கம் கீழ் நிலைக்குப் போயிருக்கும்.. ச்சா அப்படிச் சுட்டிக்காட்டிச் சொல்லியிருந்தால் நான் MA படிச்ச ஆள் எண்டு கூட இல்லாமல் போயிருக்கும்... இதை உமக்கும் சொல்லியிருக்கக்கூடாது பரமசிவம். நீர் கொஞ்சம் ஆத்திரப்பட்டுக் கொண்டதால சொல்லவேண்டி வந்திட்டுது.... 'ரேக் இற் ஈசி" என்று சிரிப்பு மாறாமல் சொன்னார் அதிபர்.


அப்படி இருந்தும் எனது ஆத்திரம் மாறாமல் இருப்பதைப் புரிந்து கொண்ட அதிபர். "இப்ப மிஸ்டர் பரம், நீர் எனக்கு ஒரு காரியம் ஆவதற்காக ஒரு ஆயிரம் ரூபா காசு தாறீர்.... அதை நான் வாங்கிப் போட்டால் அந்தக் காசு ஆரிட்டை இருக்கும்?" கேட்டார் அதிபர்.

"உங்களிட்டை 'சேர்' என்றேன்.

"அதை நான் உம்மிடமிருந்து வாங்காவிட்டால் அந்தக் காசு ஆரிடம் இருக்கும்?" என்று மாணவனிடம் ஆசிரியர் கேட்பது போலக் கேட்டார்.

"என்னிடம் இருக்கும்" என்றேன்.

"அது மாதிரித்தான் வார்த்தைகளும் அவர் கூறிய வார்த்தைகளை நான் ஏற்றுக்கொள்ளவிட்டால், அது அவரிடமே இருக்கும். வைச்சிருக்கட்டுமன் எனக்கு அது சேராது" என்றார் தெய்வீகச் சிரிப்புடன்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடை அழகைக்கூட்டும்!

ஒரு பெண் எவ்வளவு அழகாக இருந்தாலும், அவளது நடை சரியாக இல்லாமலும், சரியாக உட்காராமலும் இருந்தால், அவள் அழகு முழுமைபெறாது என்பது மட்டுமல்ல, ஆரோக்கியமும் நன்றாக இருக்காது. குனிந்தபடியே நடப்பதும், வளைந்து நெளிந்தபடியே உட்காருவதும், யாருக்குத்தான் அழகைத் தரும்.

பரிணாம வளர்ச்சியில், மனிதன் இரு கால்களில் நிமிர்ந்து நிற்கத் துவங்கினான். அதற்குத் தக்கபடி, அவனது உறுப்புகளும் செயல்படத் துவங்கின. அதனால், மனிதன் தன் நடை, உட்காரும் முறை போன்றவற்றையும், உடல் அமைப்புக்கு தக்கபடி மேற்கொள்ள வேண்டியதாகி விட்டது. ஆனால், பலரும் சரியான முறையில் நடப்பதில்லை உட்காருவதும் இல்லை.

குனிந்த நிலையில் நடப்பவர்களுக்கு, நெஞ்சுப் பகுதியும், சுவாசப் பகுதி அமைப்புகளும், நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றன. குனிந்தபடியே நடக்கும் போது, ஆழ்ந்து சுவாசித்தாலும், அவர்களுக்கு தேவையான அளவு பிராணவாயு கிடைப்பதில்லை. உடலுக்குத் தேவையான அளவு காற்று கிடைக்காத போது, தளர்ச்சியும் உற்சாகக் குறைவும் ஏற்படும்.

குனிந்த நிலையில் நடப்பவர்களுக்கு, முதுகெலும்பு வளைந்த நிலையில் இருக்கும். அதனால், அவர்களின் சமிபாட்டிலும் பிரச்சினை ஏற்படும். சிலர், தலையை நேராக வைத்திருக்காமல், முன்புறமாக இழுத்து, இழுத்து நடப்பர். அதனால், அவ்ர்களின் கழுத்தின் இருபகுதி தசைகளிலும், முதுகெலும்பின் தசைப் பகுதியிலும், அழுத்தம் ஏற்படும். அப்போது, உடல்வலியும், முதுகெலும்பு வலியும் ஏற்படும்.

நடை, நான்கு கட்டங்களின் இணைப்பாக இருக்க வேண்டும். முதலில், குதிக்காலை நன்றாக தரையில் ஊன்ற வேண்டும். இரண்டாவதாக, கால் முழுவதையும், அழுத்தமாக ஊன்ற வேண்டும். மூன்றாவதாக, விரல்களை நிலத்தில் ஊன்றி, குதிக்காலை உயர்த்த வேண்டும். நான்காவதாக, காலைத்தூக்கி உயர்த்த வேண்டும். இது ஒரு காலின் நிலைதான். இதேபோல், அடுத்த காலின் இயக்கமும் இருக்க வேண்டும். இருகால்களும் இப்படி இயங்கும் நேரத்தில், கைகளும் அசைக்கப்பட வேண்டும். இதுதான் சரியான நடை.

நடக்கும்போது, கால் பாதங்கள் இரண்டும் நேராக இருக்க வேண்டும். சரிந்த நிலையிலோ, வளைந்த நிலையிலோ கால்களை தூக்கி வைக்கக் கூடாது. நடக்கும் போது, உடலின் எல்லா பகுதிகளும் ஒரே மாதிரி நேர் கோட்டில் இருக்க வேண்டும். பெண்கள், கால் பாதங்களை தூக்கி வைத்து நடக்க வேண்டும். செருப்பு தரையில் உரசும் சத்தமோ, நடக்கும் சத்தமோ கேட்கக் கூடாது.

சில பெண்கள், நடையை பேஷன் என்று கருதி, கால் விரல்களை மட்டும் ஊன்றிக் கொண்டு நடப்பர். அது, முறைப்படியான நடை இல்லை. அந்த மாதிரி நடப்பது, உடல் ஆரோக்கியத்திற்கும் கேடானது.

வீட்டிலோ, அலுவலகத்திலோ இருக்கும்போது, நன்றாக நிமிர்ந்து உட்கார வேண்டும். சிறிதுநேரம் நிமிர்ந்து இருந்தால், சிரமமாக இருப்பவர்கள், எழுந்து நடந்து, மீண்டும் உட்கார்ந்து கொள்ள வேண்டும். முதுகெலும்பு இருக்கையோடு சேர்ந்து இருக்க வேண்டும். பாதங்களையும், காலோடு சேர்த்து நிலத்தில் சமமாக வைக்க வேண்டும்.

மகளிர் சுடர்

# குளிர்காலங்களில் முகம் காய்ந்து போகின்றதா?



மழைக்காலம் ஆரம்பித்துவிட்டால். பொதுவாக பெண்களின் முகம் குளிர்காரணமாக 'ட்ரை' ஆகிவிடும். சிலருக்கு தோல் உரிதல் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இந்தப் பிரச்சினை உங்களுக்கும் இருக்கின்றதா? மழைக்காலங்களில் தோலை பாதுகாத்துக் கொள்ள மருத்துவர்கள் தரும் சில குறிப்புகள் இவை. மழை காலத்தில் அடிக்கடி முகத்தைக் கழுவ வேண்டாம். அவ்வாறு செய்தால் முகத்தின் வழவழப்பு குறைந்து விடும். முகம், கை, கால் இடுக்கு ஆகியவற்றை ஒரு தடவை சுத்தம் செய்தால் போதுமானது.

மழைக்காலத்தில் வெந்நீர் மற்றும் சோப்புகளை அதிகமாக பயன்படுத்த வேண்டாம். மிதமான சூட்டில் உள்ள நீரில் குளிக்கலாம்.

தூசுகள் படாதபடி முகத்தை பாதுகாக்க வேண்டும். சிலருக்கு உதடுகளில் வெடிப்பு ஏற்படும். அவ்வாறு ஏற்படாமல் இருக்க பிரத்தியேக கிறீம்களை பூசலாம்.

பப்பாளிப் பழத்தை சிறிதாக வெட்டி அரைத்து முகத்தில் பூசி 10 நிமிடங்களுக்குப் பின் கழுவ வேண்டும். அவ்வாறு செய்தால் முகத்தில் பசைத் தன்மை நீண்ட நேரம் இருக்கும். தோல் 'ட்ரை' ஆகாது.

அதிகமான குளிர்காற்று உடம்பில் படாமல் பார்த்துக் கொள்ளவும். குளிர்காற்றினால் தோல் பாதிக்கப்படலாம். தோலில் திடீரென வலி, எரிச்சல் ஏற்பட்டு நிற மாறுபாடு உண்டானால் உடனடியாக மருத்துவரை அணுகவும்.

தயிருடன் மஞ்சள் தூளைச் சேர்த்து முகத்தில் தடவி 10 நிமிடங்களுக்கு பின் கழுவினால் முகம் பொலிவு பெறும். விட்டமின் டி சத்துக்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்ளலாம்.



# வாழைக்காய் குணுக்கு!

**தேவையான பொருட்கள்:**

வேகவைத்து மசித்த வாழைக்காய் - 2 கப்
துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, அரிசி மாவு - தலா 2 தேக்கரண்டி.
காய்ந்த மிளகாய், பெருங்காயத்தூள் - கால் தேக்கரண்டி
தேங்காய் துருவல்- 2 தேக்கரண்டி
கொத்தமல்லி, கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

மூன்று வகைப் பருப்புடன், காய்ந்த மிளகாய் சேர்த்து அரை மணி நேரம் ஊற வைக்கவும். பின், தண்ணீரை வடித்து மிக்சியில் போட்டு, கெட்டியாக அரைக்கவும். அதனுடன், மசித்த வாழைக்காய், அரிசி மாவு, தேங்காய்த் துருவல், பெருங்காயத் தூள், நறுக்கிய கறிவேப்பிலை, கொத்தமல்லி, உப்பு சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். பாத்திரத்தில் எண்ணெய் விட்டு, மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டிப் போட்டு, பொன்னிறமாக வெந்ததும் எடுத்துப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கு நுளம்பு எப்படிப்பரவுகின்றது?

எஸ்.திருமலை, கோப்பாய்

**கேள்வி :** டெங்கு நோயினைப் பற்றிய அச்சம் நாடு பூராகவும் பரவி வரும் காலம் இது. சிலர் கூறுகிறார்கள் சுத்தமான நீரில் தான் டெங்கு நுளம்பு முட்டையிட்டு பரவுகிறது என்று. சிலர் சொல்வதுபடி அசுத்த நீரிலும் கூட முட்டையிட்டு பெருகலாம். இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**பதில் :** நாடு பூராகவும் மழைக்காலம் தொடங்கி, தொடர்ந்து வருவதால் இக்கேள்வி காலத்துக்கேற்ற ஒன்றாகும். சுத்தமான நீர் என்பதைவிட கலங்கடிக்கப்படாது ஒரே நிலையில் (UNDISTURBED WATER) நலுங்காமல் குலுங்காமல் இருக்கும் நீரில்தான் நுளம்பு முட்டையிட்டு இனத்தைப் பெருக்கும். அவ்வகையில் சுத்தநீர் என்றாலும் அசுத்த நீர் என்றாலும் அது தொடர்ந்து ஓடிக்கொண்டிராமல் ஒரே நிலையில் நிற்குமாயின் அந்த இடமே நுளம்பு முட்டையிட வாய்ப்பான இடமாகும். எனவே நீங்கள் கூறிய அசுத்தநீரும் நாட்கணக்கில் ஒரே நிலையில் அசைவின்றி இருக்குமாயின் அதில் முட்டையிட்டு பெருக இலகுவாக இருக்கும். அசுத்த நீராயினும் அதிலுள்ள அசுத்தமான திண்மப் படிவுகள் கீழே அடைந்து கிடக்க மேல் பரப்பில் தெளிவான நீர் இருக்கும். இந்த நீர் ஓடிக்கொண்டிராமல் ஒரே நிலையில் இருப்பின் (STAGNATED WATER) அது போதுமானது. உதாரணமாக உங்கள் வீட்டில் பிளாஸ்ரிக் தொட்டி அல்லது சீமெந்து நீர்த் தொட்டியில் நீர் நிறைத்து விட்டு நீங்கள் ஒருவாரம், இருவாரம் வீட்டில் வெளியூர் போய் வருகிறீர்களென வைத்துக்கொள்வோம். இப்போது அந்த நீர்த்தொட்டியிலுள்ள நீர் சற்றும் அசையாது இருக்கும். இங்கு அசுத்த நீரா, சுத்த நீரா என்பதை மருத்துவ விஞ்ஞானம் கருத்தில் எடுக்காது. அந்த நீர் இவ்வளவு காலமும் அசையாமல் கிடந்ததே பிரச்சினை. நீங்கள் வீடுவந்ததும் அந்தத் தொட்டி நீரை நன்கு அடித்துக் கலக்கி தொட்டியின் மேல் ஓரங்களை (இந்த ஓரங்களிலுள்ள ஓரிரு நீர்த்துளிகள் ஈரலிப்பு என்பன நுளம்பு முட்டையிடவும் பெருகவும் போதுமானது.) யும் தேய்த்துக் கழுவுவதன் மூலம் நுளம்பின் பெருக்கத்தை முறியடிக்கலாம்.

வீடுகளில் சிலசமயம் கண்ணாடி கிளாஸ் போன்றவற்றில் நீர் சேர்த்து அதனுள் இயற்கை மலர்களை அழகுக்காக மேசையில் வைக்கிறோம். இவ்வாறு வைத்தபின் கிட்டத்தட்ட இருவாரம் வரை அந்தப் பூச்சாடியை நாம் தொடுவதும் இல்லை. அதிலுள்ள நீரை மாற்றுவதும் இல்லை. இக்காலத்தினுள் நுளம்பு முட்டையிட்டு பெருக வாய்ப்புண்டு. வீட்டுத்தோட்டங்கள் மூலம் டெங்கு நுளம்பு பரவுகிறது என்பதை சமீபகாலமாக பார்த்திருப்பீர்கள். மழை காலத்தில் தோட்டத்திலுள்ள சில மரங்களின் இலைகளில், இலைகளின் இடுக்குகளில் நீர்த்துளிகள் தேங்கி நாட்கணக்கில் அசையாமல் இருக்கக்கூடும். மழை பல நாட்கள் தொடர்ந்து இருப்பின் அந்த ஈரலிப்பு தொடர்ந்து அந்த மர இலை இடுக்குகளில் இருப்பதால் நுளம்பு முட்டையிட வாய்ப்பாகும். வாழை, ரம்பை போன்று இலைகள் கிளைபோல கிளைத்து மேல்நோக்கி செல்லும் மரங்களில் நீர்தேங்கி நிற்க வசதியாக இடுக்குகள் உண்டு. இதிலும் நுளம்புகள் பெருகும்.

## ஆஸ்துமாவை குணப்படுத்தும் மூலிகைகள்!



மேல் மூச்சு வாங்குதல், தொடர் சளி, இருமல் ஆகியவை ஆஸ்த்துமாவின் அறிகுறிகள் ஆகும். தூசி, தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் வேதி-கழிவுப் பொருட்கள் சூழ்ந்துள்ள இடங்களில் வசிப்பது, பூச்சிக்கொல்லி மருந்துகள், வாகனப்புகை, சில மாத்திரைகள் ஆகியவை மூலம் ஒவ்வாமை ஏற்பட்டும் ஆஸ்துமா வரலாம்.

மூலிகை மருத்துவத்தின் மூலமாக இதனைக் குணப்படுத்தலாம்.

வேப்பிலை, வில்வம், துளசி, அத்தி மற்றும் தும்பை இலை, ஆடாதோடை, தூதுவளை, முருங்கையிலை ஆகியவற்றைப் பறித்துவந்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து.சமஅளவு ஒன்றாகக் கலந்து பின் காற்றுப்புகாத பாட்டிலில் நிரப்பி வைத்துக்கொள்ள வேண்டும்.

பின் இவற்றில் இருந்து ஒரு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினமும் காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளைகளும் உட்கொள்ள வேண்டும். இதனை சுமார் நான்கு முதல் ஆறு மாதங்கள் வரை உட்கொண்டால் பூரணகுணம் பெறலாம். முதல் மாதத்திலேயே ஓரளவு குணம் தெரிய ஆரம்பிக்கும்

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

## உடல் நலம்




டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

# பாரிசவாதம் சில விளக்கங்கள்....

**பாரிசவாதம்** என்பது ஆங்கிலத்திலே ஸ்ரோக் (Stroke) அல்லது cerebrovascular accident(CVA) எனப்படுகிறது.

நமது உடலின் ஒவ்வொரு அங்கமும் தொழிற்படுவதற்கான அடிப்படைச் சக்தியைக் கொடுப்பது ஒட்சிசன். இந்த ஒட்சிசன் இரத்தம் மூலமே உறுப்புகளுக்கு சென்றடைகிறது. இரத்தம் செல்லும் குருதிக் குழாய்கள் நாடிகள் (artery) எனப்படுகின்றன. இந்த நாடிகள் பாதிக்கப்படுவதால் ( அடைபடுவதால் அல்லது வெடிப்பதால் ) அந்த நாடி மூலம் குருதியைப் பெறும் உறுப்பு போதிய ஒட்சிசன் இல்லாமல் பாதிக்கப்படும் (இறக்கும்).

உதாரணத்திற்கு இதயத்திற்கு குருதியைக் கொண்டுசெல்லும் நாடிகள் அடைபடுவதால் மாரடைப்பு ஏற்படுவதைப் போல.

இவ்வாறு நமது மூளைக்கு குருதியைக் கொண்டு செல்லும் நாடிகள் பாதிக்கப்படுவதால் மூளைக்கு ஒட்சிசன் கிடைக்காமல் மூளையின் கலங்கள் பாதிக்கப்படுவதே பாரிசவாதம் எனப்படுகிறது.

இது இரண்டு விதமாக ஏற்படலாம்...

1. குருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால், இந்த அடைப்பானது குருதிக் குழாய்களில் உள்ளே படிகின்ற படிவுகள் (கொலஸ்ரோல்) படிவுகளாக (atherosclerosis) இருக்கலாம் அல்லது வேறு பகுதிகளில் உறைந்த குருதிக் கட்டிகள் வந்து குருதிக் குழாய்களை அடைப்பதாக இருக்கலாம்.

2. குருதிக் குழாய்கள் வெடிப்பதால் கூட பாரிசவாதம் ஏற்படலாம். குறிப்பாக அதிக இரத்த அழுத்தம் உடையவர்களிலே இது ஏற்படலாம். பாரிசவாதமானது சடுதியாக ஏற்படுகின்ற ஒரு நிகழ்வு. இந்த நோயின் தீவிரமானது பாதிக்கப்பட்ட குருதிக் குழாயை பொறுத்து வேறுபடும். உதாரணத்திற்கு சிறிய நாடி ஒன்று அடைபடுவதால் ஏற்படும் பாதிப்பு சிறிதளவானதாகவே இருக்கும்.

மேலும் மூளையின் குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு விதமான தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாக இருக்கும்.

பாதிக்கப்பட்ட பகுதியைப் பொறுத்து ஏற்படுகின்ற அறிகுறிகளும் வேறுபடலாம். உதாரணத்திற்கு பேச்சினைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி பாதிக்கப்பட்டால் அந்த நபர் பேச முடியாத நிலையை அடைவார்.

மூளையின் பல பகுதிகளுக்கு குருதியைக் கொண்டு செல்லும் குழாய்கள் பாதிக்கப்படும் போது பல பாதிப்புக்கள் ஏற்படும்.

குறிப்பாக பாரிசவாதம் ஏற்பட்டதற்கான அறிகுறிகளாவன தலையிடி போன்ற சிறிய அறிகுறிகளில் இருந்து முற்று முழுதான மயக்க நிலை (Coma) அல்லது ஊனமுற்ற நிலை அல்லது மரணம் ஏற்படுகின்ற நிலையாக இருக்கலாம்.

**பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகள்**

உயர் குருதி அமுக்கம், நீரழிவு நோய், அதிகரித்த கொலஸ்ரோல் அளவு, புகைப்பிடித்தல் போன்றவை முக்கிய காரணங்களாகும் . அது தவிர அதிகரித்த உடற்பருமன், வயதானவர்கள், ஆண்கள், பரம்பரையிலே மாரடைப்பு அல்லது பாரிசவாதம் ஏற்பட்டவர்களைக் கொண்டவர்கள், அளவுக்கதிகமாக மது அருந்துபவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகமாக கொண்டவர்கள். மாரடைப்பைத் தடுப்பதற்கு நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அத்தனையும் இந்த பாரிசவாத நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் உதவும்.

**நீரழிவு நோய்** - இந்த நோய் உள்ளவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகம் ஆனாலும் இவர்கள் ஒழுங்காக மருந்துகளை பாவிப்பதன் மூலமும் , உணவுக் கட்டுப்பாட்டின் மூலமும் இந்த நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை குறைக்கலாம்.

**புகைத்தல்**- புகைத்தல் மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் ஏற்படுவதற்கு காரணமான முக்கிய காரணிகளில் ஒன்றாகும். ஆனாலும் புகைக்காத நபர்களில் கூட மாரடைப்பு ஏற்படலாம்.

சரியான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி மூலம் நமது கொலஸ்ரோலை கட்டுப்பாடாக வைத்திருப்பதன் மூலம் நமக்கு மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை குறைத்துக் கொள்ள முடியும். அப்படியும் இது கட்டுப்படுத்தப்பட முடியாவிட்டால் கொலஸ்ரோலைக் குறைப்பதற்கான மருந்துகள் பாவிக்கப்படலாம்.

**உயர் குருதி அமுக்கம்**(Hyper Tension)- இந்த நோய் இருப்பவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகம். சரியான மருந்துகள் , உடற்பயிற்சி, உணவுக்கட்டுப் பாடு மூலம் இதையும் நாம் கட்டுப்பாடாக வைத்திருந்து இவை ஏற்படுவதற்கான சந்தர்ப் பத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

**மன அழுத்தம்**- அதிகரித்த மன அழுத்தம் உள்ளவர்களுக்கும் மாரடைப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். தியானம் போன்ற ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு மன அழுத்தத்தை குறைப்பதன் மூலம் இவை ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தைக் குறைக்கலாம்.

**அதிகரித்த உடற்பருமன்**- நமது உடல் நிறையை கட்டுப்பாடாக வைத்திருப்பது அவசியமாகும். நீரழிவைக் கட்டுப்பாடாக வைத்திருத்தல், பிரசரை கட்டுப்பாடாக வைத்திருத்தல், கொலஸ்ரோலைக் கட்டுப்பாடாக வைத்திருத்தல், புகைத்தலை தவிர்த்தல், உடற்பயிற்சி மூலம் உடல் நிறையைக் கட்டுப்பாடாக வைத்திருத்தல் போன்றவை அதிகளவு உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் முக்கியமான இவ்விரண்டு நோய்களில் இருந்து உங்களுக்கு பாதுகாப்பளிக்கும். .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

50

**நா.யோகேந்திரநாதன்**

தேர்தல் நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் முன்பதாக குடியரசார் பொன்.கந்தையாவின் தேர்தல் காரியாலயத்தில் ஒரு கலந்தாலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், உண்மையில் அது தேர்தல் போருக்கு வியூகங்கங்களை வகிக்கும் ஒரு தயாரிப்புக் கூட்டமாகவே அமைந்திருந்தது. பண்டிதர்கள், வித்துவான்கள், தமிழாசிரியர்கள், இளைஞர்கள், சனசமூக நிலைய விளையாட்டுக் கழக நிர்வாகிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டிருந்தனர்.

தேர்தல் தினத்தன்று அதிகாலை தொடக்கமே காங்கிரஸ் சண்டியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியைச் சுற்றிவளைத்துக் காவல்போட்டு அவர்களை வாக்களிக்கப்படாமல் தடுப்பது என காங்கிரஸ் பிரமுகர்கள் போட்ட திட்டம் குடியரசாரின் காதுகளுக்கு எட்டிவிட்டது. அது வெற்றி பெறுமானால் கம்யூனிஸ்டுகளுக்கு விழும் வாக்குகள் சரிபாதியாகக் குறைந்துவிடும். பின்பு வெற்றி என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத விஷயமாகிவிடும். அதை முறியடிப்பதற்கான திட்டத்தை குடியரசார் உடனடியாகவே வகுத்துவிட்டார்.



பொன். கந்தையாவுக்கு சாதகமாக இருந்த விஷயம் இளைஞர் சக்தி. அவர் கரவெட்டி கிழக்கு, பாலாவெட்டை, துன்னாலை, யாக்கரை, அல்வாய், வதிரி, சாணக்கமூலை, நவிண்டில், உடுப்பிட்டி, ஆலடிவெட்டை, மணியாறன்மூலை, மண்டான், லக்கணாவத்தை எனப் பல ஊர்களின் இளைஞர்களையும் ஒன்றுகூட்டி குழுக்களாக அமைத்துக்கொண்டார். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட பகுதிகள் வாழும் பகுதியைப் பொறுப்பெடுத்து அப்பகுதி மக்களைக்கூட்டிச் சென்று வாக்களிக்க வைப்பது என முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு குழுவுக்கும் அதே ஊரைச் சேர்ந்த ஒரு பண்டிதரோ, வித்துவானோ, தமிழாசிரியரோ பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். வயது சென்றவர்களை ஏற்றிச் செல்ல வாகனங்களும் ஒழுங்குசெய்யப்பட்டன. குழுக்களுக்கு ஊர்ப்பெரியவர்களைப் பொறுப்பாக நியமித்தால் சண்டியர்கள் கிட்டவரமாட்டார்கள் என்பது குடியரசு கந்தப்பருக்கு நன்கு தெரியும். அதைவிட சாண்டோக்களான நமசிவாயம், தியாகுமாமா ஆகியோரும் ஒவ்வொரு கார்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. விதானையாரும், குடியரசாரும், ஐயாமாமாவும் சேர்ந்து பேசி வகுத்த அந்தத்திட்டங்களைக் கண்டு பொன்.கந்தையா மட்டுமன்றி தேர்தல் பணிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கார்த்திகேயன் மாஸ்ரரும் கூட அதிசயித்துப் போய்விட்டனர். மாஸ்ரர் மெல்லச் சிரித்தவாறே கேட்டார். "இப்படியெல்லாம் அவை போடுற திட்டங்களை முறியடிக்க என்னண்டு யோசனை வந்தது?"

விதானையார் "போன முறை இராமலிங்கத்தை வெல்ல வைக்க நாங்களும் சேர்ந்து இதே வேலையைச் செய்தனாங்கள். இந்த முறை அவை செய்வினம் எண்டபடியால் அதுக்கு எதிர்த்திட்டம் போட்டம்" என்று விட்டுப் பெரிதாகச் சிரித்தார்.

கூட்டம் முடிந்த பின்பும் ஒவ்வொரு குழுக்களும் கூடி தங்கள் பணிகளில் எப்படி ஈடுபடுவது என்பதை விவாதித்து முடிவெடுத்துக் கொண்டனர்.

அடுத்த இரண்டு நாட்களிலும் எந்தக் கலகலப்பும் இடம்பெறவில்லை. ஆனால் ஒவ்வொரு வேட்பாளர்களின் ஆதரவாளர்களும் வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டுவதிலும் தங்கள் சின்னத்திற்கு வாக்களிப்பது எப்படி என விளக்குவதிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

உடுப்பிட்டியிலும், நவிண்டிலிலும் சமஜமாஜக் கட்சிக்கு ஒட்டுமொத்தமாக விழும் என எதிர்ப்பார்க்கப்பட்டதால் ஆர்.ஆர். தர்மரத்தினத்திற்கும், பொன்.கந்தையாவுக்குமிடையே கடும்போட்டி நிலவுவதாகக் கருதப்பட்டது. குடியரசாரும், ஐயாமாமாவும் தர்மரத்தினத்தின் வாக்குகளை உடைப்பதில் அக்கறை செலுத்தவில்லை. ஆனால் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பவை பலமாக இருந்த பகுதிகளை உடைக்கும் வகையில் திட்டமிட்டு வேலை செய்தனர்.

காசி அடிக்கடி ஓடிப்போய் காங்கிரஸ் பிரமுகர்களிடம் தகவல்கள் பரிமாறி விட்டு வருவதால் ஊருக்குள் எவ்வித தேர்தல் வேலைகளையும் செய்ய முடியவில்லை. வடிவேலன் கூடக் காசியைக் கண்டால் விலகிப் போய்விடுமளவுக்கு அவரின் செல்வாக்கு சரிந்துவிட்டது. ஆனால் புகையிலை நடுகைக் காலம் வரும்போது வட்டிக்கு காசு வாங்கத் தோட்டக்காரர் தன்னிடம் தானே வரவேண்டும் எனவும். அப்போது பழிவாங்கிக் கொள்ளலாம் எனவும் அவர் மனதுக்குள் கறுவிக் கொண்டார். நீதிமன்றத்தில் சிவஞானத்திற்கும் கனகரத்தினத்திற்கும் அவர் கட்டிய நஷ்ட ஈட்டுப் பணம் இரண்டாயிரம் ரூபாவில் வாசிகசாலைக்கு ஒரு சிறுகட்டிடம் கட்டி அதில் காசிப்பிள்ளை முதலாளியின் உபயம் என எழுதப் போகின்றனர் என்ற செய்தி அவருக்கு மேலும் ஆத்திரத்தை மூட்டியிருந்தது. தான் பட்ட அவமானத்தின் அடையாளச் சின்னமாக அது இருக்கப்போகிறது என நினைத்தபோது அவரால் அதைத்தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. எனினும் தேர்தல் முடியும் மட்டும் பொறுமை காப்பது எனத் தீர்மானித்துக்கொண்டார்.

அன்றைய தேர்தல் எதிர்பார்த்ததற்கு மாறாக மிக அமைதியாகவே நடந்தது. சிற்சில இடங்களில் முறுகல் நிலை தோன்றினாலும் அவை மோதல்களாகும் நிலை ஏற்படவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை வெளியேவிடாமல் தடுக்கும் முயற்சியும் வெற்றி பெற முடியவில்லை. அதற்கு ஒரு முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று கந்தையாவின் ஆதரவாளர்களை ஊர்ப்பெரியவர்கள் வழிநடத்தியமையால் மற்றவர்களாலும் அவர்களையும் தீண்ட முடியவில்லை. அவர்களாலும் கட்டுப்பாட்டை மீறமுடியவில்லை. அடுத்த காரணம் சிவசிதம்பரத்தின் சில ஆதரவாளர்கள் சண்டியன்களாகவும் சாதி வெறியராகவும் இருந்த போதிலும் அவர் மிகவும் அமைதியானவர். அவர் எந்த வன்முறைகளிலும் ஈடுபடக்கூடாது எனத் தனது ஆதரவாளர்களுக்குக் கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருந்தார். அதுமட்டுமன்றி எல்லா வாக்களிப்பு நிலையங்களுக்கும் தானே நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

அன்று இரவு ஏழுமணியளவில் வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகின. விதானையார், குடியரசார், மன்னவன், கந்தப்பு எனப் பல ஆதரவாளர்கள் மூன்று கார்களில் கச்சேரிக்கு வந்திருந்தனர். எல்லோருமே வெற்றி நிச்சயம் என்பதில் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தனர். இதன் காரணமாக கார் டிக்கிகள் வெடிப் பெட்டிகளால் நிறைக்கப்பட்டிருந்தன.

அதிகாலை ஐந்துமணிக்குப் பருத்தித்துறைத் தொகுதியின் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. பொன்.கந்தையா மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றிருந்தார். அந்த வெற்றிச் செய்தி உத்தியோகபூர்வமாக ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட முன்பே பொன்.கந்தையாவும், கார்த்திகேயனும் வெளியில் வந்து தமது ஆதரவாளர்களுக்கு அறிவித்தனர். இளைஞர்கள் இருவரையும் தோளில் தூக்கி ஆரவாரிக்க ஆரம்பித்தனர். எங்கும் மகிழ்ச்சி வெள்ளம்பொங்கி வழிய வெடிகள் சரமாரியாக வெடிக்கத் தொடங்கின.

வல்லிபுரம் ஓவசியரின் மகன் மனோகரனின் 'ட்றாம்ப்' மோட்டார் சைக்கிள் வெற்றிச் செய்தியை வடமராட்சிக்கு அறிவிக்க மின்னல் வேகத்தில் பறந்தது. அவன் ஒவ்வொரு ஊராகச் சென்று வெற்றிச் செய்தியைச் சொல்லத் தொடங்கினான்.

கடைகள் திறக்கும் மட்டும் பொறுமையற்ற நிலையில் மக்கள் கடைக்காரரைத் தட்டியெழுப்பி வெடிகளை வாங்கிக் கொழுத்தஆரம்பித்தனர். தமிழரசுக் கட்சியினர், சமஜமாஜக் கட்சியினர் கூடத் தாங்கள் வெற்றி பெறாவிட்டாலும் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டமைக்காக மகிழ்ச்சியடைந்தனர். அவர்களும் கூடத் தாங்களாகவே வந்து வெற்றிக் களிப்பில் கலந்துகொண்டனர்.

அன்று இரவு தேர்தலில் முன்னின்று பாடுபட்டவர்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேர்தல் வெற்றிக்குப் பாடுபட்ட பண்டிதர்கள், வித்துவான்கள், தமிழாசிரியர்கள், அரச பணியாளர்கள், சங்கங்களின் நிர்வாக மட்டத்தினர் என ஒரு பிரமுகர் வட்டமே அங்கு கூடியிருந்தது.

விருந்து தொடங்கும் நேரம் நெருங்க நெருங்க கார்த்திகேயனின் கண்கள் கூட்டத்தின் மத்தியில் யாரையோ தேடியலைந்தன. எவ்வளவு தேடியும் அவர்களால் தேடப்பட்டவர்கள் அவரின் கண்களில் படவேயில்லை சற்றுக் குழப்பமடைந்தவராக அவர் கைகாட்டி குடியரசாரை தன்னருகில் அழைத்தார்.

அருகில் வந்த கந்தப்பர் "என்ன மாஸ்ரர்?" எனக்கேட்டார்.

"எங்கே கனகரத்தினம், சிவஞானம் ஆக்கள் வரயில்லையே?" குடியரசார் ஒரு மெல்லிய தயக்கத்துடன் "இல்லை... அவையைக் கூப்பிடேல்லை?" என்றார்.

"ஏன்?"

"அவைக்கு நாளைக்கு விசேசமாய் ஒரு விருந்து வைக்கிறம்?"

"ஓ- அப்பிடியெண்டால் யாக்கரைத் தம்பிமுத்து, துன்னாலை செல்லத்தம்பி, வதிரி இராசரத்தினம் வல்வெட்டி சண்முகம் எல்லாரும் நாளைக்குத்தான் வருவினமோ?"

குடியரசார் தடுமாறிப் போனார், "அது... அது" என இழுத்தார்.

ஒரு நாளுமில்லாமல் மாஸ்ரரின் கண்கள் சற்று சிவப்பேறின!

"சரி... நாளைக்கு அவைக்கு விருந்தெண்டால் இந்த வெற்றியிலை பெரிய பங்கு வகிச்ச கமலிக்கு விருந்து நாளையிண்டைக்கே?"

"இல்லை... மாஸ்ரர்... இஞ்சை இருக்கிறவை தங்களோடை ஒரு பந்தியிலை தாழ்த்தப்பட்ட ஆக்கள் இருக்கிறதை விரும்ப மாட்டினை. அதாலை இளந்தாரிப் பொடியளுக்கு பிறம்பாய் ஒரு விருந்து வைக்கிறம் அவங்கள் சாதி சமயம் பார்க்க மாட்டாங்கள்"

குடியரசார் தட்டுத்தடுமாறி சமாளித்தபோதும் அவரின் வார்த்தைகளில் ஒரு குற்ற உணர்வு தொனித்தது. "அப்ப, இது சுண்டியெடுத்த வெள்ளாளருக்கு வைக்கிற விருந்து எண்டு சொல்லுங்கோ...?"

கந்தப்பர் அவசரமாக "இல்லை... இல்லை... அப்பிடி இல்லை... நாங்கள் எல்லாருக்கும் ஒண்டாய்விருந்து வைச்சமெண்டால் இவ்வளவு பேரும் அடுத்த தேர்தலிலை எங்களுக்கு எதிராகத் திரும்பியிடுவினம்".

"கந்தப்பர்... நாங்கள் ஒரு கொள்கைக்காகத்தான் லெக்சன் கேட்டனாங்கள். அதை நிறைவேற்றுவம் எண்டு சொல்லித்தான் வெண்டனாங்கள். வெற்றி பெற்ற பிறகு நாங்களே எங்கடை கொள்கைக்கு எதிராய் நடந்தால் என்ன அர்த்தம்" குடியரசாரால் எதுவுமே பேசமுடியவில்லை. அவர் தலையைக் குனிந்து கொண்டார்.

"இப்ப என்ன மாஸ்ரர் செய்யிறது?"

"ஏற்பாடு செய்த விருந்தை நிப்பாட்ட ஏலாது... உழைக்கிற மக்களுக்கு இல்லாத விருந்து எனக்கும் வேண்டாம்... நான் நாளைக்கு அவையளோடை சேர்ந்து விருந்து சாப்பிடுறன்... சரியே?" என்றார் கார்த்திகேயன் நிதானமாக.

குடியரசார் வெடவெடத்துப் போய்விட்டார். "மாஸ்ரர் ஏதோ தெரியாமல் நடந்திட்டுது இண்டைக்கு மட்டும்..."

"இல்லை... இது நான் நீங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இல்லை... எங்கடை கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை இதிலை என்னால இறங்கி வரமுடியாது" குடியரசார் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப்போய் நின்றார்.

எழுந்து நேராகப் பொன்.கந்தையாவிடம் சென்ற கார்த்திகேயன் "தோழர் நான் ஒருக்கால் வெளியிலை போட்டு வாறன்... என்ன விஷயமெண்டு குடியரசு சொல்லும்" என்று விட்டு வெளிவாசலை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

எதைச் சொல்வது எப்படிச் சொல்வது என்று தெரியாமல் பேயறைந்தவர் போல் அசையாது நின்றார். அந்தப் பெரியாரின் சீடர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனநாயகத்திற்கெதிரான போர்!

— ஹரன் —

வரலாற்றிலிருந்து பாடங்களை கற்க மறுத்து, மீண்டும் அடக்கமுறைக்கான ஆயுதத்தையும், அடாவடித்தனங் களையும் கையிலெடுப்பதன் ஊடாக தமிழ்மக்களை இராணுவ சூழலுக் குள்ளேயே வைத்திருக்கலாம் என அரசு கனவு கண்டு வருவதான சந்தேகம் இன்று அனைவரது மனதிலும் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் இதற்கு சிறந்த சான்றாதாரமாக உள்ளது. போரில் உயிரிழந்த மக்களினை நினைவு கூரும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் கடந்த 27 ம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் இந்து மக்களின் சமய சம்பிரதாயங்களின்படி கார்த்திகை விளக்கீடும் அமைந்திருந்தது. இந்நிலையில் தீபங்களை ஏற்றிக் கார்த்திகை விளக்கீட்டை அனுட்டிக் கவும் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் விடுதிகளில் இருந்த மாணவர்கள் தயாராக இருந்தபோது மாணவர்கள் மீது தமது அதியுச்ச அடக்குமுறையை பிரயோகித்தது இராணுவம். ஏற்கனவே கார்த்திகை விளக்கீட்டின்போது தீபங்களை ஏற்றலாம் என யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்திருந்த நிலையில் தமது விடுதிகளுக்குள்ளேயே தீபங்களை ஏற்ற மாணவர்கள் தயாரானபோதே காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது. போரில் உயிர் நீத்தவர் களுக்கான அஞ்சலி செலுத்தும் உரிமை இருப்பதாகவும், அவர்களின் படங்களையும் வீடுகளில் வைத்திருக் கலாம் எனவும் கிளிநொச்சி இராணுவ அதிகாரியொருவர் கடந்த சில மாதங்களுக்கு முன் தெரிவித்திருந்த நிலையில் போரில் உயிர்நீத்த மக்களுக்கான அஞ்சலியையும், கார்த்திகை தீபத்திருநாளையும் ஒன்று சேர்த்து அனுஸ்டிக்க மாணவர்கள் தயாரான போதே, யாருமே எதிர்பார்த் திராத சூழலில் இராணுவ அடக்கு முறைகளும், இராணுவ அடாவடித் தனங்களும் மாணவர்கள் மீது தமது கொடூர நகங்களை பதித்திருக்கின்றது.

திடீரென பல்கலைக்கழகத்தைச் சுற்றி வளைத்த இராணுவம் அப்பாவி மாணவர்கள் மீது தனது மனிதாபிமான மற்ற படை நடவடிக்கையை கட்டவிழ்த்து விட்டுள்ளது. பல்கலைக்கழக வளாகத்திற்குள் திறந்த வீட்டிற்குள் நாய் புகுவதைப் போல அத்துமீறி புகுந்த இராணுவத்தினர் மாணவர் மீதான தாக்குதலை ஆரம்பித்தனர். இராணுவமும், பொலிஸாரும் புலனாய்வாளர்களும் மாணவர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்டனர். கைகளில் கொட்டன்களுடனும் கண்களில் கொலை வெறியுடனும் பல்கலைக் கழகத்துள் புகுந்த படைகள் அடாவடித்தனங்களை கையிலெடுக்கத் தொடங்கினர். கண்ணாடிகள் தீப விளக்குகள் மாணவர்களின் உடமைகள் என எல்லாவற்றின் மீதும் இராணுவ காட்டுமிராண் டித்தனம் பாய்ந்தது. ஒரு சில நிமிடங்களுக்குள் அமைதியாக இருந்த பல்கலைக்கழகம் போர்க்களமாக மாறத் தொடங்கியது. அப்பகுதியில் நின்ற மாணவர்கள் சிலர் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல் களுக்கும் உள்ளானார்கள்.

திடீரென மாணவர் விடுதிகளிலும் தீப விளக்குகள் ஒளிர அது அங்கி ருந்த இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் கடுப்பை கிளப்பி யிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. கைகளில் குண்டாந்தடிகளுடனும் பிஸ்டல்கள் துப்பாக்கிகளுடனும் இராணுவமும் படைப்புல்னாய் வாளர்களுடனும் ஆண்கள் விடுதிகளுக்குள் புகுந்து தாக்குதலை தொடங்கினார். மாணவர்கள் தமது விடுதிக்குள் இராணுவத்தினர் புகுவதை தடுக்கப் பகீரத பிரயத்தனம் மேற்கொண்டபோதும் அவை எதுவும் அடாவடித்தனங்களுக்கும் அடிதடிகளுக்கும் பழக்கியெடுக்கப்பட்டு முன் எடுபடவேயில்லை.

இந் நிலையில் எந்தவித அனுமதியுமின்றி யாழ். பல்கலைக்கழக பெண்கள் விடுதியான ஆனந்தகுமாரசாமி விடுதிகளுக்குள் புகமுற்பட்டனர் இராணுவத்தினர். மாணவிகள் தமது தற்பாதுகாப்பிற்காக தங்கள் விடுதிகளின் கதவுகளை பூட்டிவிட்டதால் கடுப்படைந்த இராணுவம் பல்கலைக்கழக தண்ணீர் தாங்கியில் ஏறி அதன் மூலமாக பெண்கள் விடுதியில் ஒருபக்க கதவை உடைத்துக்கொண்டு உள்நுழைந்தது தேடுதல் நடாத்த தொடங்கின. பெண்கள் விடுதிகளுக்குள் நுழைவதற்கும் தேடுதல் நடாத்தப்படுவதற்கும் சட்டத்தில் இடமில்லை. காட்டுமிராண்டித்தனத்தையும் அடாவடித்தனங்களையும் பற்றியே சதா சிந்தனையில் மூழ்கியிருக்கும் கும்பலிடம் எப்படிச் சட்டத்தை எதிர்பார்க்கமுடியும்? கதவை உடைத்துக்கொண்டு புகுந்த இராணுவம் அங்கு புலிகளின் முகாமை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்துவதை போல ஒரு இடமும் விடாமல் சல்லடை போட்டுத் தேடினர். அப்பாவி மாணவிகளின் விடுதியில் எதைக் கண்டுபிடிக்க இந்தத் தேடுதல்? இராணுவம் பற்றி பழைய சில கொடூர மனப்பதிவுகள் மாணவிகளின் ஆழ்மனதில் இருந்ததால் அங்கிருந்த மாணவிகள் தம்மை காப்பாற்றுமாறு கதறியழத் தொடங்கினர். சில மாணவிகள் அச்சமேலீட்டால் மயங்கமடைந்து விழவும் செய்தனர்.

மாணவிகளின் கதறல்களை பொருட்படுத்தாமல் விடுதிக்குள் புகுந்த இராணுவம் மாணவிகளின் தளபாடங்கள், உடமைகள், மாணவிகள் கொழுத்திய தீபங்கள் என்பவற்றை அடித்து துவம்சம் செய்தனர். இராணுவத்தின் ருத்திர தாண்டவம் தொடர்ந்ததால் சில மணிநேரம் விடுதிகள் இராணுவ முற்றுகைக்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தன. விடுதியைச் சுற்றி பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டனர். அங்கிருந்த தீபங்களும் அணைக்கப்பட்டன. ஆனால் விடுதிகளுக்குள்ளும் பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளும் இராணுவம் உள்ளே புகும்போது பல்கலைக்கழக நிர்வாகம் எந்தவிதமான உருப்படியான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு இன்று நிர்வாகம் மீது எழுந்துள்ளது. பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட அனைவரும் அந்த நேரம் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருந்ததாகவும் தம்மை பாதுக்காக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றச்சாட்டுகின்றனர் மாணவர்கள். இந்நிலையில் நீண்ட நேரத்தின் பின் அப்பகுதிக்கு வந்த பல்கலைக்கழக நிர்வாகம் இராணுவம் விடுதிக்குள் புகுந்தது பிழை என வேதமோதத் தொடங்கியது. நிர்வாகத்தின் நீண்ட நேர கோரிக்கையின் பின் இராணுவம் அப்பகுதியை விட்டு அகன்று சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இச்சம்பவத்தின் மாணவிகள் பலர் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ இடத்திற்கு சென்று செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த உதயன் பத்திரிகையின் ஆசிரியர் இராணுவத்தினரால் தாக்குதலுக்குள்ளானார். அப்பகுதியில் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்த ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தல்களுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இராணுவத்தினர் விடுதிகளுக்குள் நுழைய அனுமதி கொடுத்ததும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்த சுதந்திரம் அளித்ததும் யார் என்ற கேள்வி இன்று மேலெழுந்து நிற்கின்றது.

இந் நிலையில் மறுநாள் வியாழக்கிழமை இராணுவத்தினரின் செயற்பாடுகளைக் கண்டித்து மாணவ்ர்கள் நடாத்திய ஆர்பாட்டப் பேரணி மீது காடைத்தனமான தாக்குதல் இராணுவத்தாலும் பொலிஸாராலும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. பல்கலைக்கழக வளாகத்திற்குள் அமைதியான முறையில் ஒன்றுகூடி கண்டனக் கூட்டம் ஒன்றை நடாத்திவிட்டு வாய்களில் துணிகளை கட்டியபடி அமைதியான முறையில் மௌன ஊர்வலம் நடாத்திய மாணவர்கள் மீதே அரச பயங்கரவாதம் தனது கோரமுகத்தை காட்டியிருக்கிறது. பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் நின்று பதாகைகளை ஏந்தியபடி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாம் பிரதான பாதையூடாக வெளியேறி பல்கலைக்கழக விஞ்ஞான பீட வாயிலூடாக பல்கலைக்கழகத்திற்குள் நுழைய அனுமதி தருமாறு அங்கிருந்த பொலிஸ் உயரதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் பல்கலைக் கழகத்தின் முன்னுள்ள பிரதான வீதியூடாக போக்குவரத்திற்கு எந்தவித இடையூறையும் ஏற்படுத்தாத வகையில் சென்றுகொண்டிருந்த மாணவர்கள் மீது மிகவும் கொடூரமான வன்முறை ஏவிவிடப்பட்டது. அப்பகுதியில் குண்டாந்தடிகளோடு தயாராக நின்ற இராணுவத்தினரும் பொலிஸாரும் மாணவர்களைச் சுற்றி வளைத்து கொடூரமாக தாக்கத் தொடங்கினர். பாதைகளை மூடி சுற்றிவளைத்து இராணுவமும் பொலிஸாரும் நடாத்திய கோர தாக்குத்தலால் அப்பாவி மாணவர்கள் காயங்களுக்கு உள்ளானார். அப்பகுதியில் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்த ஊடகவியல் மாணவர்கள் சுற்றிவளைக்கப்பட்டு வயர்களாலும் குண்டாந்தடிகளாலும் தாக்கப்பட்டு வாகனங்களுக்குள் தூக்கிப் போடப்பட்டனர். அவர்களின் புகைப்படக்கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டு அதிலிருந்த படங்கள் அழிக்கப்பட்ட பின்னரே கொடுக்கப்பட்டதாக கூறப்பட்டது. இதை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும் உறுதிப்படுத்தினர். உலகிலேயே சர்வதேச வல்லரசுகளுக்கு நிகரான படைகளை வைத்திருப்பதாக பீற்றியடித்துகொண்டு திரியும் இலங்கை பாதுகாப்பு துறையினர் அப்பாவி மாணவர்கள் மீது மிகவும் கோழைத்தனமான முறையில் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் சில மாணவ மாணவிகளும் காயத்திற்குள்ளானதோடு மேலும் 5 மாணவர்கள் கடுமையான தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். சில மாணவ மாணவிகள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு பின் வைத்திய சாலையில் வைத்து இராணுவ புலனாய்வாளர்கள் அச்சுறுத்தப்பட்டதால் சிகிச்சைகளைக்கூட ஒழுங்காக மேற்கொள்ள முடியாமல் வைத்திய சாலையை விட்டு வெளியேறியதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் பல்கலைக்கழகத்திற்கு விரைந்து நிலைமையை அவதானிக்கச் சென்ற யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் வாகனமும் பொலிஸாரும் இராணுவத்தினரும் கைகட்டி வேடிக்கை பார்த்து நிற்க சிவிலுடையாளர்களால் அடித்து நொருங்கப்பட்டது. இராணுவ புலனாய்வாளர்களே தனது வாகனத்தை நொருக்கியதாக வெளிப்படையாக தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் தர்சானந் உட்பட மாணவர்கள் வீடுகளில் வைத்து கடத்தல் பாணியில் கைது செய்யப்பட்ட சம்பவம் இதனை அச்சொட்டாக நிருபிக்கப்படுகின்றது. ஆர்பாட்டப் பேரணி மீது தாக்குதல் இடம்பெற்ற மறுநாள் அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகம் பெற்றோல் குண்டு வீச்சுக்கு இலக்கானமை தம்மீது பழிபோடவே என அச்சமுறுகின்றனர் மாணவர்கள். எந்த ஒரு குடிமகனும் கைதுசெய்யப்படும் போது அவர் கைது செய்யப்படுவதற்கான காரணம் தெளிவாகக் கூறப்பட்டு அதற்கான ஆவணம் அவரின் உறவினர்களுக்கு பொலிஸ்தரப்பால் வழங்கப்படவேண்டும் என்று இலங்கை அரசியல் சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ள போதிலும் சட்டத்தை அமுல்படுத்தும் பொலிஸ்தரப்பும் அதிகாரிகளும் தர்சானந் கைது செய்யப்பட்டபோது அவற்றை மேற்கொள்ளாமை மூலமாக சட்டவாட்சி நாட்டில் நிலவவில்லை என்ற உண்மையை ஆணித்தரமாக நிருபித்திருக்கின்றனர். இதேவேளை அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாலேயே அவர்கள் தாக்குதலுக்கு உள்ளானார்கள் என தாக்குதலை நியாயப்படுத்தும் பொலிஸ்தரப்பு வடக்கில் அரச சார்பு ஆர்பாட்டங்களின் போது மட்டும் ஏன் நழுவல் போக்கை கடைப்பிடிக்கின்றது என்ற கேள்வி தவிர்க்கமுடியாது எழுகின்றது. மாவீரர் நாள் நிகழ்வுகளை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்ததாக கூறும் இராணுவத்தினர் நெல்லியடியில் நில அபகரிப்புக்கு எதிரான போராட்ட இடம்பெறும்போது மோட்டார் சைக்கிளில் சாவகாசமாக வந்து புலிக்கொடியை காட்டியவர்களின் மீது ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை? சிறிரெலோ அலுவலகம் மீது பெற்றோல் குண்டை வீசினார்கள் என்ற குற்றச்சாட்டை சுமத்தி இருமாணவர்களை விழுந்தடித்து கைது செய்ததாக கூறும் பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தை அடித்து துவம்சம் செய்தவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. சந்தேகத்தின் பேரில் ஒருவரைக்கூட இதுவரை ஏன் கைது செய்யவில்லை போன்ற கேள்விகள் தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

அத்துடன் போராளிகளையும் போரில் உயிரிழந்தவர்களையும் நினைவு கூர்வது சட்டப்படி பிழையென்றால் தென்னிலங்கையில் நவம்பர் 13 அனுஷ்டிக்கப்படும் வீரமக்கள் நினைவு தினத்திற்கான அனுமதி எவ்வாறு வழங்கப்படுகின்றது என்ற கேள்வியும் தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தப்படும் வீதிகளும் திருத்தமற்ற நடவடிக்கைகளும்!

*•/ வில்லவன்*

யாழ்.குடா நாட்டு பிரதான வீதிகள் காப்பெற் போடும் செயல்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள அதேவேளை காப்பெற் வீதிகள் இன்று உயிர்க் கொலைகளுக்கும் கூட காரணமாக அமைகின்றது என்ற வேதனையான விடயத்தையும் கூற வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. வீதிகள் செப்பனிடப்படுவது தேவையானதே.

நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களின் நன்மை கருதியும் அரசினால் அமைக்கப்படும் காப்பெற் வீதியென்பது பொதுமக்களின் மரணக் குழியாக அமையக்கூடாது.

இந்தவகையில் யாழ்.குடாநாட்டில் அமைக்கப்படும் காப்பெற்வீதி அமைக்கும் செயற்பாடுகள் முறையான சட்ட திட்டங்களுக்கும் உட்பட்ட முறையிலும் அமையவில்லையென்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

காப்பெற் வீதி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இருபது மாதங்கள் ஆகும் நிலையில் இம் மக்கள் அடையும் துன்பதுயரங்கள் மிகவும் அதிகமாகும்.

குறிப்பிட்ட வீதி அமைப்புப் பணிகளுக்காக தென்பகுதியில் இருந்து கற்களையும் சரளை மணலையும் கொண்டுவரும் டிப்பர் வாகனங்களினால் மோதப்பட்டு கொலையுண்டவர்கள் எத்தனைபேர்.

இதனையிட்டு ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என்றால் இல்லையென்றே துணிந்து கூறலாம்.

கண்டி வீதியில் இடம்பெற்ற டிப்பர் வாகனங்களில் மோதுண்டு இறந்தவர்கள், புத்தூர் பகுதியில் இறந்தவர்கள், பலாலி வீதியில் இறந்தவர், காங்கேசன்துறை வீதியில் என்று மரணங்களும், அவலங்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. மனித உயிருக்கு மேலானது எவையும் இல்லையெனக் கூறுவார்கள். இந்த வகையில் காப்பெற் வீதி அமைப்பவர்களைப் பொறுத்த வரையில் இத்தகைய மனித உயிர் பற்றிய சிந்தனை அவர்களிடம் இருக்கின்றதா இல்லையா என்றால் இல்லையென்று கூறும் நிலையே உள்ளது.

காப்பெற் வீதி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களில் எம்மவர்களும் சரி தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட எந்தவகையான மனிதாபிமான செயல்பாடுகளும் இன்றி ஆண்டான் அடிமை மன நிலைமையிலும் தாம் ஏதோ சாதனையை நிலைநாட்டுபவர்கள் என்ற மனோபாவத்துடனேயே செயல்படுகின்றார்கள்.

வீதியில் டிப்பர் வாகனத்துடன் ஏனைய வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகினால் படையினரும் சரி, பொலிசாரும் சரி உடனடியாக அந்த இடத்தில் கூடும் பொது மக்களை விரட்டுவதும் வாகனத்தை உடன் அந்த இடத்தில் இருந்து தப்பிச் செல்ல வழியேற்படுத்துவதிலும் மிகவும் அக்கறையாக செயல்படுவது மக்களினால் கண்கூடாகவும் அனுபவ ரீதியாகவும் கண்ட உண்மைகளாகும்.

இந்த வகையில் வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள மதகுகளும் கூட மரண பொறிக்கிடங்காகவே மக்களுக்கு அமைந்துள்ளது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் மானிப்பாய் மருதனார்மடம் வீதியில் அமைக்கப்பட்ட மதவினுள் வீழ்ந்து சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையின் பிரதி முகாமையாளர் மரணம் அடைந்தார்.

ஒரு உயிர் வீதியில் அமைக்கப்பட்டு வரும் மதவில் உரிய விளக்கு வெளிச்சம் வைக்கப்படாத நிலையில் வீழ்ந்து இம்மரணம் ஏற்பட்டுள்ளது.

இந்த மரணம் சம்பந்தமாக ஊடகங்கள் செய்திகள் வெளியிட்ட போதிலும் அதனை வீதிக்கு காப்பெற் போடும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் கருத்தில் கொள்ளாத நிலையில்

இரண்டாவது மரணமாக காங்கேசன் துறை வீதியில் அமைக்கப்படும் மதவில் வீழ்ந்து மற்றுமொருவரும் சுமார் நான்கு மாத இடைவெளியில் மரணம் அடைந்துள்ளார்.

வீதியில் மதகுகள் அமைக்கும் போது உரிய முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும் உரிய நிறுவனங்களுக்கு உண்டு. எதன் பகுதியில் குறிப்பிட்ட நிறுவனங்கள் வீதிப்பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இத்தகைய பாலங்கள், மதகுகள் அமைக்கப்படும் இடங்களில் விளக்குகள் மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு பாதுகாப்புகள் செய்யப்படுகின்றன.

இத்துடன் மட்டும் நின்றுவிடாது மதகு, பாலம் அமைக்கப்படும் பகுதியைச் சுற்றி மிகவும் நெருக்கமாக மண் நிரப்பிய கழிவு பரல்களும் கூட பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

இதனை வைக்கத் தவறும் பட்சத்தில் தென்னிலங்கை மக்களும் பொது அமைப்புக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுப்பதுடன் உரிய அரச அதிகாரிகளும் கூட விழிப்பாக இருந்து பாதுகாப்பு விடயத்தில் அதிக அக்கறை காட்டுவார்கள்.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் இத்தகைய நிலமை பாரிய கேள்வியாகவே காணப்படுகின்றது. பொதுமக்கள் விபத்து ஏற்பட்டால் திட்டித் தீர்த்துவிட்டுச் செல்வதுடன் சரி.

பொது அமைப்புகள் எமக்கும் இதற்கும் தொடர்பில்லையென்ற அசமந்தமான நிலையில் செயல் படுகின்றன.

பிரதேச சபை உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலும்கூட இதனையிட்டு அலட்டிக் கொள்வதில்லை. அவர்கள் தமக்குள் குத்துப்பாடுகளில் ஈடுபட நேரம் சரியாகி விடுகின்றது.

ஒட்டு மொத்தத்தில் எம்மக்களிடையே காணப்படும் பொறுப்பற்ற தன்மையும் விழிப்புணர்வு அற்ற நிலையும் அரச அதிகாரிகளும் ஏனையவர்களும் தாம் நினைத்ததை செய்யவும் பொறுப்பற்ற முறையில் செயல்படவும் போதியளவுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

இன்னும் கூறப்போனால் காப்பெற் வீதி அமைக்கப்படும் வரை குறிப்பாக வீதி கிளறப்பட்டு சரளை மண்போடப் பட்டு, கலவை போடப்பட்டு, காப்பெற் போடப்படும் வரை காலை, மாலை, மதியம் என மூன்று நேரமும் நீர் ஊற்றப்படவேண்டியது அவசியமாகும்.

வீதியில் செல்லும் வாகனங்களினால் எழும் தூசுகள் மூலம் பொதுமக்களுக்கு சுவாசப் பாதிப்பு ஏற்படுவதையும் மற்றும் வாகனச் சாரதிகளுக்கு வாகனங்களை செலுத்துவதால் ஏற்படக்கூடிய இடையூறுகளையும் இதன்மூலம் தவிர்க்கமுடியும்.

இந் நடவடிக்கைகூட சீராக மேற்கொள்ளப்படவில்லை. வீதிப்பணிகள் நடைபெறும் இடங்களில் சென்றால் நேரடியாக இந்த அவலத்தை நாம் கண்கூடாகக் காணலாம். இதனை இந்த மண்ணில் வாழும் நாம் அனைவரும் யதார்த்த பூர்வமாக அனுபவித்தும் உள்ளோம்.

பாடசாலை செல்லும் சிறுவர்கள் முதல் நடை பயணிகள் வாகனங்களில் செல்பவர்கள் எனப்பலரும் வீதியில் கிளம்பும் தூசுகளினால் நாளாந்தம் திணறுவதை நாம் மறந்துவிட முடியாது.

இந்தளவுக்கு பொறுப்பற்ற முறையில்தான் எமது பகுதி காப்பெற் வீதி அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. இந்த வீதிகள் சீரான முறையில் அமைக்கப்படுகின்றனவா என்றால் அதுவும் கூட சீரில்லையென்றே கூறலாம்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி முக்கிய சந்திப் பகுதியில் காப்பெற் போடப்படாத நிலமை காணப்படுகின்றது. இதேபோன்று சுன்னாகம் நகரப்பகுதியில், கோண்டாவில் பகுதியில் என கூறிக்கொண்டே செல்லலாம்.

இப்பகுதிகளில் வீதிகள் மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாக ஆபத்து நிறைந்த போக்குவரத்துக்குரிய இடமாக காணப்படுகின்றது. இதனையிட்டு யாரும் பெரியளவில் கண்டுகொள்ளாத நிலமையே காணப்படுகின்றது.

குறிப்பிட்ட காப்பெற் போடாத இடங்களுக்கு நாளாந்தம் நீர் ஊற்றப்படுகின்றதா என்றால் அதுவும் கூட நடைபெறுவதில்லை.

சுன்னாகம் சந்தியில் காலை வேளையில் பொலிசார் கடமையில் ஈடுபடுவதினால் நீர் ஊற்றப்படுகின்றன. ஏனைய இடங்கள் எதிலும் இத்தகைய செயல்பாடுகள் எவையும் இடம்பெறுவதில்லை. வெறுமனே தூசுப் புழுதியில் வீதியோரத்தில் வாழும் மக்களும் வாகனங்களும் நடைபாதைப் பயணிகளும் திணறுவது அன்றாட நிகழ்வாக மாறியுள்ளது.

பலாலி வீதியில் ஏற்படும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் முகமாக பொலிசாரின் கண்காணிப்பு செயல்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாக யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஏனைய வீதிகளில் இத்தகைய வேகக் கட்டுப்பாடுகள் எவையும் இடம்பெறுவதில்லை. வெறுமனே பொலிசார் மோட்டார் சையிக்கிளையும் வாகனங்களையும் மறிப்பதும், வாகன வரி அனுமதிப்பத்திரம் காப்புறுதி பத்திரம் உண்டா என பார்ப்பதும், எல்லாம் இருந்தால் ரயர் சரியில்லை, சிக்னல் போடவில்லை, வீதிப்பக்கம் மாறிவந்தது, வாகனத்தை ஏனைய வாகனங்களுக்கு இடையூறாக செலுத்தியது என்ற குற்றச்சாட்டுக்களை பதிவு செய்வதும் செய்வது போல் பாவனைகாட்டி சந்தோஷம் பெறுவதும் போன்ற சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளனவே அன்றி ஆக்கபூர்வமான செயல்பாடுகளாக காணப்படவில்லை.

காப்பெற் வீதி போடப்பட்ட இடங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் வீதிக் கடவை குறியீடுகள் போடப்பட்டுள்ளனவா என்றால் அவை கூட நடைபெறவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை இதனையிட்டு கூறும் பதில் காப்பெற் வீதி அமைக்கும் பணிகள் நிறைவு பெறவில்லை. நிறைவடைந்ததும் வீதிக் கடவைகள் அமைக்கப்படும் என்ற பொறுப்பற்ற பதிலாகும்.

ஒட்டு மொத்தத்தில் அதிகாரிகளின் அசிரத்தையும் வீதி அமைப்பாளர்களின் பொறுப்பற்ற செயலும் எம்மிடையே இருக்கும் பொது அமைப்புக்களின் பார்வையற்ற தன்மையும் பொதுமக்களிடம் காணப்படும் விழிப்புணர்வு அற்ற தன்மையும் இன்னும் எத்தனை உயிர்களை பலிகொள்ளும், காயப்படுத்தும், நோய் துன்பங்களுக்கு உள்ளாக்கும் என்பதை காலம்தான் சொல்ல வேண்டும்.



காப்பெற் வீதி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களில் எம்மவர்களும் சரி தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட எந்தவகையான மனிதாபிமான செயல்பாடுகளும் இன்றி ஆண்டான் அடிமை மன நிலைமையிலும் தாம் ஏதோ சாதனையை நிலைநாட்டுபவர்கள் என்ற மனோபாவத்துடனேயே செயல்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்வையற்ற இந்திய இளைஞருக்கு உயர் பதவி வழங்கிய அதிபர் ஒபாமா!



அமெரிக்காவில் வசிக்கும் பார்வையற்ற இந்திய இளைஞருக்கு உயர்பதவி வழங்கி கௌரவித்துள்ளார் அதிபர் ஒபாமா.

அந்த இளைஞர் பெயர் சச்சின் தேவ் பவித்ரன். இவர் உட்டா பல்கலைக்கழகத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான திட்ட இயக்குநராக தற்போது பணியாற்றி வருகின்றார். 2002ஆம் ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அமெரிக்காவின் பல்வேறு அமைப்புகளில் இவர் பணியாற்றியுள்ளார். உட்டா பல்கலைக்கழகத்தில் பி.ஏ., பி.எஸ்., எம்.ஸ்., என பல பட்டங்களை பெற்றுள்ள இவருக்கு 2007ஆம் ஆண்டு அமெரிக்காவின் பார்வையிழந்தவர்களுக்கான தேசிய சம்மேளனம், கென்னத் கார்னிகன் ஸ்காலர்ஷிப் உதவி வழங்கி கௌரவித்தது.

இந்நிலையில், அமெரிக்க அரசின் நிர்வாகத்தில் இயங்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான தன்னாட்சி பெற்ற அமைப்பின் உயர் பதவியில் சச்சின் தேவ் பவித்ரனை நியமித்து அமெரிக்க அதிபர் ஒபாமா உத்தர விட்டுள்ளார்.

"அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகள், தங்களுக்கு கிடைக்கும் புதிய வாய்ப்புகளின் மூலம் அனுபவம் பெறுவார்கள். இந்த நிர்வாகத்தில் அவர்கள் பணியாற்றுவதை எண்ணி நான் பெருமைப்படுகின்றேன்," என்று அமெரிக்க அதிபர் ஒபாமா கூறியுள்ளார்.




# நீடூழி வாழ்க

## அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்

பதவியேற்று 07 ஆண்டுகள் நிறைவுக்கு

## எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

"வேண்டப்படாத அந்நிய கைத்தொழில்மயமாக்கலுக்குப் பதிலாக உள்ளூர் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

(மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு)

வர்த்தக சேவைகள், சர்வதேச வங்கி கொடுக்கல் வாங்கல்கள், சர்வதேச முதலீடு ஆகிய துறைகளில் இலங்கையை ஆசியாவின் முன்னணி மையமாக உருவாக்குவதற்கு நான் எண்ணியுள்ளேன்.

(மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு)



கௌரவ றிஸாட் பதியுதீன் அவர்கள் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்

கௌரவ ஜயந்த ஹேரத் அவர்கள் கைத்தொழில் மற்றும் வணிக பிரதியமைச்சர்

அனுர சிறிவர்தன அவர்கள் செயலாளர்- கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

"மஹிந்த சிந்தனைக்கமைய வலுமிக்க வணிக சூழலில் சர்வதேச போட்டியுடைய தேசிய கைத்தொழில் பிரிவை இலங்கையில் கட்டியெழுப்புதல் எமது அமைச்சின் தூர நோக்கமாகும்"





**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**

73/1, காலி வீதி, கொழும்பு-03




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க - தே.மு.தி.க கூட்டணி அமைந்தால் காங்கிரஸ் என்னவாகும்?

**2001 - 2006 காலப் பகுதியில் ஜெயலலிதா தந்த தொல்லைகள் தாங்காமல் வேறுவழியின்றி வைகோ தி.மு.க அணியில் தஞ்சமடைந்ததுபோல இன்று தே.மு.தி.கவின் நிலை உள்ளது. விஜய்காந் மீதும் அவரது எம்.எல்.ஏக்கள் மீதும் தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. பொடா வழக்கில் வைகோ உள்ளே தள்ளப்பட்ட 2002 காலப்பகுதியை இவை நினைவூட்டுகின்றன. ஒரு வேளை பொடா போன்ற ஒரு வியூகத்தினால் விஜய்காந்தை கம்பி எண்ண வைத்தால் அது ஜெயலலிதாவின் பிரதமர் பதவி அபிலாசைக்கு நிச்சயம் வேட்டு வைக்கும்.**

— அபிஜித்

கடந்த சில வாரங்களாகவே எதிர்வரும் லோக்சபா தேர்தலில் தமிழகத்தில் எந்தக் கட்சியுடன் எந்தக் கட்சி கூட்டணி அமைக்கும் என்பது பற்றிய ஹேஷ்யங்களும், ஊகங்களும் இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக எழுதப்பட்டு வருவதை பலர் கவனித்திருக்கக்கூடும். இங்கு எழுதப்படுபவற்றில் பல நடக்கலாம் நடக்காது போகலாம். எனினும் அதுபற்றி எழுதப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏனெனில் தமிழகத்தின் கட்சிகள் தமது அரசியலில் கடைசி இடத்தையே கொள்கைக்குத் தருகின்றன. ஓரளவு கொள்கைக்கு முக்கியத்துவம் தரும் வைகோவும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. வைகோவாவது காங்கிரசுடன் கூட்டணி வைப்பதாவது என்று பலரும் கருதிய நேரத்தில் 2004 லோக்சபா தேர்தலில் வைகோ காங்கிரசுடன் கூட்டணி வைத்து அந்தக் கூட்டணி அமோக வெற்றியும் பெற்றது. நேரெதிர்க் கொள்கையுடைய இரு கட்சிகள் சந்தர்ப்ப சூழ்நிலையில் கொள்கையை காற்றில் பறக்கவிட்டு கூட்டணி வைத்ததற்கு இந்த வைகோ - காங்கிரஸ் கூட்டணியை விட வேறு சிறந்த எடுத்துக்காட்டு எதுவும் கிடையாது.

இதேவிதமாக இன்று தி.மு.க - பி.ஜே.பி கூட்டணி அல்லது தி.மு.க - தே.மு.தி.க - பி.ஜே.பி மூன்றும் இணைந்த கூட்டணி அமையுமா என்று பலவிதப்பட்ட ஊகங்கள் நிலவி வருகின்றன. தே.மு.திகவிற்கு வலைவீச தி.மு.க பல தடவை முயன்றும் அது கைகூடவில்லை என்றே



கருதப்பட்டது. ஆனால் சமீபகாலமாக விஜய்காந்தை பழிதீர்க்கும் முயற்சியாக அவரது கட்சியிலிருந்து 4 சட்டசபை உறுப்பினர்களை தன்பக்கம் இழுத்தெடுத்ததைத் தொடர்ந்து வலிந்து அ.தி.மு.கவைத் தாக்கி வந்த தே.மு.திக தலைவர் இன்று தற்காப்புத் தேடி எங்காவது தஞ்சமடைய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். இப்போது கட்சி மாறிய 4 தே.மு.தி.க எம்.எல். ஏக்களுடன் மேலும் பலரை ஈர்க்க ஜெயலலிதா முயன்றும்கூட அது கைகூடவில்லை. ஆனால் விஜய்காந் கட்சி ஜெயலலிதாவின் இந்த அதிரடியால் ஆட்டம் கண்டுள்ளது மட்டும் உண்மை. தன்னையும் கட்சியையும் காக்க அவர் காங்கிரசிடம் பேச்சு நடத்தியுள்ளார் என சில வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால், கடந்தவாரம் ஒரு திருப்புமுனை நிகழ்வாக தி.மு.கவின் முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தும் அவரைப் புகழ்ந்தும் விஜய்காந் பேசியுள்ளமை சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த தி.மு.க ஆட்சியை கடுமையாகச் சாடி ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்த விஜய்காந் அக்காலத்தில் தி.மு.க ஆட்சியில் அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்தை கடுமையாக விமர்சித்து வந்துள்ளார்.

தி.மு.க ஆட்சியில் ரவுடிகளில் முதலாம் ஆள் வீரபாண்டி ஆறுமுகமே என்பது உண்மைதான். எனவே முன்பு விஜய்காந் ஆறுமுகத்தை விமர்சித்தது தவறு அல்ல, ஆனால் இன்று ஆட்சி மாறி, கட்சியும் மாறி ஆறுமுகம் இறுதிச் சடங்கில் தன் சார்பில் மலர்வளையம் வைக்க, 3 தே.மு.தி.க எம்.எல். ஏக்களையும் கூட அனுப்பி வைத்து புகழ்ந்தும் உரைத்திருப்பது தி.மு.கவை எடுத்தெறிய முடியாத நிலைக்கு தே.மு.தி.க சென்றுவிட்டது என்பதையே காட்டியது. இது தி.மு.கவுக் குஷியையும் அ.தி.மு.க காங்கிரஸ் மற்றும் பி.ஜே.பி வட்டாரங்களில் கவலையையும் ஏற்படுத்தும் விடயமாகும்.

காங்கிரசுடன் கூட்டணி தொடர்வதை கனிமொழியும், அழகிரியும் விரும்பினாலும் ஸ்டாலின் தரப்பு தே.மு.தி.க அல்லது பி.ஜே.பியுடன் கூட்டணி சேர்வதையே விரும்புகிறதாம். ஸ்டாலின் சில மாதங்களுக்கு முன்பு கூட விமனநிலையத்தில் விஜய்காந்தை சந்தித்தபோது, இது குறித்துப் பேச முயன்றதும் நைசாக நழுவிச் சென்றதும் நினைவிருக்கலாம்.

2001 - 2006 காலப்பகுதியில் ஜெயலலிதா தந்த தொல்லைகள் தாங்காமல் வேறுவழியின்றி வைகோ தி.மு.க அணியில் தஞ்சமடைந்தது போல இன்று தே.மு.தி.கவின் நிலை உள்ளது. விஜய்காந் மீதும் அவரது எம்.எல்.ஏக்கள் மீதும் தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. பொடா வழக்கில் வைகோ உள்ளே தள்ளப்பட்ட 2002காலப் பகுதியை இவை நினைவூட்டுகின்றன. ஒரு வேளை பொடா போன்ற ஒரு வியூகத்தினால் விஜய்காந்தை கம்பி எண்ண வைத்தால் அது ஜெயலலிதாவின் பிரதமர் பதவி அபிலாசைக்கு நிச்சயம் வேட்டு வைக்கும்.

'அரசியல் பழிவாங்கல்' என்பதற்கு புதிய இலக்கணம் வகுத்தவர் ஜெயலலிதா என்றால் அது மிகையாகாது. நள்ளிரவில் கலைஞரை தரதரவென்று இழுத்துச் சென்றதும், வைகோவை பொடாவில் தள்ளியதும் தான் அடுத்துவந்த 2004 லோக்சபா தேர்தலிலும், 2006 சட்டசபை தேர்தலிலும் அவரை தலைகுப்புற கவிழவைத்தன. இன்றைய தினம் ஜெயலலிதா முன்பைவிட பல மடங்கு தன்னை சீர்திருத்திக் கொண்டுள்ளார் எனினும் இரண்டு விஷயங்களில் அவர் மாறவே இல்லை என்பது தெளிவு: முதலாவது சசிகலாவை முற்றாக ஒதுக்காமல் இருப்பது, இரண்டாவது தனது அரசியல் எதிரிகளை வழக்குகள் அவர்களது திட்டங்களை வன்மமாக கிடப்பில் போடுவது, பழிதீர்ப்பது, சட்டசபை வளாகத்தை மாற்றியது, பாடசாலை நூல்களை மாற்றி மாணவர்களை இக்கட்டில் தள்ளியது, அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற முயன்றது என்பவற்றுடன் நில்லாது பல வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன திட்டம் முதலியவற்றைக் கூட, அது கலைஞரால் கொண்டுவரப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக கிடப்பில் போடுவது என்பன மக்கள் கோபத்தைக் கிளறக்கூடும். குறிப்பாக முன்பு தி.மு.க 'அறிவு பூர்வமான கட்சி' என எண்ணி அக்கட்சிக்கு வாக்களித்துவந்த நடுத்தர வர்க்க மக்கள் பின்பு அதே திமுகவில் ரவுடித்தனம் அதிகரிக்க, வேறு வழியின்றி ஜெயலலிதாவை ஆதரிக்க நேரிட்டது. இப்போது மீண்டும் சக்கரம் ஒரு முழுச் சுற்று சுற்றி முடிந்து பழைய நிலைக்கு வருவதுபோல மீண்டும் நடுத்தரவர்க்க நகர்ப்புற மக்கள் தி.மு.கவை ஆதரிக்க உந்துவிக்கப் படலாம். குறிப்பாக 'ஸ்டாலின் ரவுடிஅரசியலை விரும்பாதவர்' என ஓரளவு பெயரெடுத்துள்ளார்.



சண்டித்தனத்தை மக்களிடம் மட்டுமன்றி கருணாநிதியிடமே காட்டிவந்த வீரபாண்டி ஆறுமுகம் மறைந்தது ஸ்டாலினுக்கு புதுத்தென்பை தந்துள்ளது. ஆறுமுகம் தனது கடைசிகாலத்தில் நேரடியாக ஸ்டாலினை எதிர்த்து அழகிரி ஆதரவாளராக தன்னை வெளிப்படையாகவே காட்டிக் கொண்டார். ஸ்டாலினோ ஆறுமுகத்தின் அடாவடி அளவுமீறுவது கட்சியைப் பாதிக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தார்.

இவ்வாறு ஸ்டாலின் சீர்திருத்தங்களை முன்னெடுத்தால், அதே நேரம் ஜெயலலிதாவும் பழைய அடாவடியை தொடங்கினால் அ.தி.கவுக்கு எதிராக தே.மு.தி.க - பி.ஜே.பி - தி.மு.க என்ற வலுவான கூட்டணியை உருவாக்கி கரைசேரலாம் என ஸ்டாலின் தரப்பு கருதுகிறது. முடிந்தால் வைகோவையும் சேர்ப்பது என்றும் ஒரு திட்டம் இருக்கிறதாம்.

இந்த நிலைமையை தெளிவாக புரிந்து கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியோ தி.மு.கவை விடாமல் இறுகப் பிடித்துக் கொள்ளமுயன்று வருகிறது. அடுத்தடுத்து மூத்த அமைச்சர்கள் சிதம்பரமும், குலாம் நபி ஆசாத்தும் சென்னை வந்து கலைஞரை சமாதானப் படுத்திச் சென்றுள்ளனர். கலைஞரை சமாளிக்க சோனியாகாந்தி வசமுள்ள பிரம்மாஸ்திரம் ப.சிதம்பரம் என்றால் மிகையாகாது. ஜெயலலிதாவை எதிர்க்க ஸ்டாலினே தயங்கினாலும் சிதம்பரம் தயங்கவே மாட்டார் என்பதை கலைஞர் நன்கறிவார். கலைஞர் இவ்வாறு சிதம்பரத்தை மதிப்பதை அறியாதவரல்ல சோனியாகாந்தி. தற்போது சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை எதிர்க்க சகல எதிர்க்கட்சிகளும் கங்கணம் கட்டிக்கொண்டு நாடாளுமன்றம் சென்று சேர்ந்திருக்கும் வேளையில் தி.மு.கவின் ஆதரவை சிதம்பரம் ஊடாக காங்கிரஸ் உறுதிப்படுத்திக் கொண்டது. உத்தரப்பிரதேச முலாயம் சிங் கட்சியின் ஆதரவும் காங்கிரசுக்கு ஒருவேளை கிடைக்கலாம். பி.ஜே.பி, இடதுசாரிகள், மம்தா என எதிர்க்கட்சிகள் இது விடயத்தில் மத்திய அரசை ஒருகை பார்க்க தற்காலிகமாகவேனும் அணி சேர்ந்திருந்தன. ஆனால் முந்திக்கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை மம்தா கொண்டுவர முயன்றார். இதை பி.ஜே.பி கூட ஒத்துக்கொள்ளவில்லை. காரணம் பிரேரணை ஒருவேளை தோற்றால் இன்னும் 6 மாதத்திற்கு அப்படி ஒரு பிரேரணையை கொண்டுவர சட்டம் இடம் தராது.

இன்னும் ஓரிருமாதம் தாமதித்தால் மன்மோகன்சிங் அரசின் நிலை மேலும் மோசமடைந்திருக்கும். அப்போது ஆட்சியை கவிழ்த்து தேர்தல்வரச் செய்யமுடியும் என்பதே பி.ஜே.பியின் திட்டம். அந்த கால இடைவெளிக்குள் ஜெயலலிதா ஒரிசாவின் பட்நாயக், ஆஸ்திராவின் நாயுடு, ஹரியாணாவின் சௌத்தாலா முதலிய கட்சிகளை தனது கட்சிக்குள் கொண்டுவர பிஜேபிக்கு அவகாசமும் கிடைக்கும். மேலும் பி.ஜே.பி தலைவர் கட்காரி மீதான ஊழல் புகாரை மக்கள் மறக்கச் செய்யவும் இந்த அவகாசம் உதவுவதுடன் டிசம்பரில் குஜராத் மாநில சட்டசபைத் தேர்தலில் எதிர்பார்த்தபடி நரேந்திரமோடி மீண்டும் வென்றுவிட்டால் பி.ஜே.பி அசைக்கமுடியாத சக்தியாக தேசிய அரசியலில் உருவெடுக்கவும் முடியும். இந்த பல நோக்கு அணுகுமுறைப்படி தான் நம்பிக்கை இல்லா பிரேரணை இப்போதைக்கு வேண்டாமென்ற ஆலோசனையை பிஜேபி முன்வைத்தது. மம்தாவோ முந்திக்கொண்டு முதிர்ச்சியின்மையைக் காட்டி பி.ஜே.பியுடன் முரண்பட்டு மூக்குடைபட்டுள்ளார். எதிர்வரும் மாதங்களில் இவ்வாறான சுவாரஸ்யங்கள் நிறைய நடக்க இடமுண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்





இரகசியமாய் எம்மவர்களின்
உயிர்கள் தின்னப்பட்ட
அந்த இரவுகளை
மீண்டும் மீண்டும்
நினைவுபடுத்துகிறது
நீத்தவர்களின்
நினைவு தினங்கள்...

கண்திறவா மழலை
கருச்சுமந்த கர்ப்பிணி
வாலிபன் வயோதிபன்
பிணியாளன்.. ஏன்
அரச பணியாளன்?
இப்படி இறப்புப்பட்டியலுக்குள்
இணைந்து கொண்டவர்கள்
பல ஆயிரங்களுக்குள் அடக்கம்

குருதியில் குளித்தவர்களை
ஏறெடுத்துப் பார்க்கவும் எவருமில்லை
செய்மதியினால் சில வல்லரசுகள்
நாம் மரணம் சுமந்த நாட்களைப்
பார்த்து பச்சாதாபப்பட்டதோடு
முடிந்து போயிற்று
முள்ளிவாய்க்கால் அத்தியாயம்...

அந்த ரணங்களை
அனுபவித்த எங்களுக்குள் - பல
ஏற்கமுடியாத கேள்விகளின்
அணிவகுப்பு
இத்தனை உயிர்களுக்கும்
இறுதி முடிவு.......?

ஐ.ரமேஷ்




இடியை மட்டும்
இறக்கிப் போகிறது
மேகம்.

வரண்டு
சின்னாபின்னமாய்...
வெடித்திற்று
நிலம்.

வான்முகடு பார்த்து
கலங்கிச் சொரியும்
விழி நீரில்...
நனையும் வாழ்வு.

கூரையைப் பிடுங்கி
மூட்டிய அடுப்பில்...
வேகிக் கரிப்பிடிக்கிறது
வெறும் பானை.

காற்று நிறைந்து
வீங்கிற்று வயிறு
சூரியப் பொங்கலுக்காய்...
ஏங்கித் தவிக்கிறது
மனம்.

ஏதுமற்றுப் போன இருப்பின்
அடையாளங்களைக்
கணக்கெடுத்து
மீண்டும் மீண்டும்
காணாமற் போகும் வாழ்வை
தேடித் தேடிச் சமைகிறது
காலம்.

எட்டுநாள் வாழ்வின்...
அர்த்தங்களைப் புரியமுன்
தீக்குளித்து மாயும்
பட்டாம் பூச்சிகளாய்...
நாம்.

கு.கு.சிந்துதாசன்
மொல்லையூர்.

## ஆசியாவின் அதிசயம்!



இங்கே
விலை வாசிகள்
எகிறிச் செல்கின்றன
தேச...
விசுவாசிகளை விழுங்கியபடி
உயிரின் ஓலம்
கேட்கவில்லையா யாருக்கும்?

மா...
பால் மா...
எரி பொருள்...
மட்டுமல்ல
அத்தியாவசியம்
உயிரும் தானே.

பொருள்களின்
பெறுமதியை அதிகரிக்கிறாய்
உயிர்களின்
பெறுமதி அறியாமல் நீ!

தங்கத்தின் விலை கொடுத்து
பால் மா பை வாங்கும் காலமும்
பக்கத்தில் வரலாம்.
மொத்தத்தில்
'சிறீலங்கா' கூட
ஒரு 'சோமாலியா' ஆக
கனநாள் எடுக்காது
ஆசியாவின் அதிசயம்
இதுவாகத்தான் இருக்குமோ?
யாரறிவார் பராபரமே!

தேனாள் சுரேஷ்.
வேலணை.

## நம்பிக்கை நடையில் எம் சரிதம்











## என் காதல் சிற்பங்கள்

கனவுகள் முழுவதும் - உன்
நினைவுகள்
நினைவுகள் எல்லாம் - உன்
நிழல்கள்
நிழல்கள் முழுவதும் - உன்
உருவங்கள்
உருவங்கள் எல்லாம் - என்
காதல் சிற்பங்கள்.

எஸ்.துஷி
வவுனியா.

## சட்ட அரங்கேற்றம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

## அதிகம் சம்பாதித்த டென்னிஸ் நட்சத்திரங்கள்





இந்த ஆண்டுக்கான ஆடவர் சர்வதேச டென்னிஸ் (ஏ.டி.பி.) மற்றும் மகளிர் சர்வதேச டென்னிஸ் (டபிள்யூ.டி.ஏ.) போட்டிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

இதையடுத்து 2012ம் ஆண்டில் அதிக பரிசுத்தொகை வென்ற வீரர், வீராங்கனைகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஆடவர் பிரிவில் 'நம்பர் ஒன்' வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் முதலிடத்தை பிடித்துள்ளார். அவர் இந்த ஆண்டில் போட்டிகளின் மூலம் ரூ.70.50 கோடியை பரிசுத்தொகையாக அள்ளியிருக்கிறார்.

2வது இடத்தில் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளார். காயம் காரணமாக சில மாதங்களாக ஆடாததால் ஸ்பெயினின் ரபெல் நடால், வருமானத்தில் 4வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர வீரர் லியாண்டர் பயஸ் மொத்தம் ரூ.4 கோடியே 20 லட்சம் பரிசாக பெற்று இந்த பட்டியலில் 33வது இடம் வகிக்கிறார்.

மகளிர் பிரிவில், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அசரென்கா ரூ.43.50 கோடியை பரிசுத்தொகையாக பெற்று முதலிடத்தை தட்டிச்சென்றுள்ளார்.

ஒலிம்பிக் சாம்பியனும், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் மகுடங்களை கைப்பற்றியவருமான சாதனை மங்கை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ரூ.39 கோடியுடன் 2வது இடத்தில் உள்ளார். இந்த ஆண்டில் டென்னிசில் அதிகம் சம்பாதித்த

**டாப்-5 வீரர்கள் விபரம்:**

1. நோவக் ஜோகோவிச் (செர்பியா) ரூ.70.50 கோடி
2. ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) ரூ.47.50கோடி
3. ஆண்டி முர்ரே (இங்கிலாந்து) ரூ.31.50 கோடி
4. ரபெல் நடால் (ஸ்பெயின்) ரூ.27.50 கோடி
5. டேவிட் பெர்ரர் (ஸ்பெயின்) ரூ.24.25 கோடி

**டாப்-5 வீராங்கனைகள் விபரம்:**

1. விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) ரூ.43.50 கோடி
2. செரினா வில்லியம்ஸ் (அமெரிக்கா) ரூ.39 கோடி
3. மரியா ஷரபோவா (ரஷ்யா) ரூ.36 கோடி
4. அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா (போலந்து) ரூ.22.50 கோடி
5. சாரா எர்ராணி (இத்தாலி) ரூ.17.25 கோடி

## பார்சிலோனா வெற்றி



லெவாண்டே அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. வாண்டே அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் நடந்த லா லிகா கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுப் போட்டியில் பார்சிலோனா, லெவாண்டே அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் ஏதும் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர்கள் அசத்தினர். முதலில், மெஸ்சி (47, 52வது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார். பின் இனியஸ்தா(57), பேப்ரிகாஸ் (63) ஆகியோர் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். முடிவில் பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டு கோல் அடித்து அசத்திய அர்ஜென்டினா வீரர் மெஸ்சி, இந்த ஆண்டில் தனது 82வது கோலை பதிவு செய்தார். எஞ்சியுள்ள போட்டிகளில் மெஸ்சி இன்னும் 6 கோல் அடிக்கும் பட்சத்தில் ஜெர்மனி வீரர் முல்லரின் சாதனையை முறியடிக்கலாம். தவிர, இந்த ஆண்டு நடக்கும் லா லிகா தொடரில் அதிக பட்சமாக மெஸ்சி 19 கோல் அடித்துள்ளார்.

## மனைவிக்கு பயப்படுவேன்



இந்திய கிரிக்கெட் அணியின் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் டெண்டுல்கர் தனது மனைவிக்கு பயப்படுவேன் என்று கூறியுள்ளார்.

'ஜாம்பவான்களுடன் கலந்துரையாடல்' என்ற பெயரில் வெளியாகியுள்ள புத்தகத்தில் இந்திய கிரிக்கெட்டின் சாதனை மன்னன் சச்சின் டெண்டுல்கரின் பேட்டியும் இடம்பெற்றுள்ளது.

அதில் நகைச்சுவையாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது. பயங்கரமான வேகப்பந்து வீச்சு அல்லது கோபமான மனைவி இதில் எதற்கு பயப்படுவீர்கள் என்று கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த டெண்டுல்கர், என்னை சிக்கலில் இழுத்துவிட்டு விட்டீர்கள். நான் தற்போது வீட்டில் இருந்து வெளியே இருக்கிறேன். அதனால் கோபமான மனைவிக்கு பயப்படுவேன் என்று தான் சொல்ல முடியும் என்றார்.

## தொடரை வென்றது மேற்கிந்திய தீவுகள்

வங்கதேச அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை மேற்கிந்திய தீவுகள் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.

வங்கதேசம் சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் டெஸ்டில் வென்ற மேற்கிந்திய தீவுகள் 1-0 என முன்னிலை வகித்தது.

குல்னா நகரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்டின் முதல் இன்னிங்சில் வங்கதேசம் 387 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கிந்திய தீவுகள் அணி 9 விக்கெட்டுக்கு 648 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது.

பின்பு இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய வங்கதேச அணிக்கு நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் வங்கதேச அணி 6 விக்கெட்டுக்கு 226 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

கடைசிநாள் ஆட்டத்தை தொடர்ந்த வங்கதேச அணியின் விக்கெட்டுகள் சரிந்தன. வங்கதேச அணி இரண்டாவது இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 287 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கிந்திய தீவுகள் சார்பில் பெஸ்ட் 6 விக்கெட்டும், வீராசாமி பெருமாள் 3 விக்கெட்டும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 27 ஓட்டங்கள் என்ற சொற்ப இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி விக்கெட் இழப்பின்றி இலக்கை அடைந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்திய தீவுகள் அணியின் மர்லோன் சாமுவேல்ஸ் தெரிவானார். தொடரின் நாயகனாக ஷிவ்நரின் சந்தர்பால் தெரிவானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பிள்** நிறுவனம் ஒரு புதிய மெல்லிய ஐமேக் மேசைக் கணினியை களமிறக்கியுள்ளது. இந்த புதிய ஐமேக் கணினியை ஒன்லைன் மூலமாக வாங்கலாம்.

இந்த ஐமேக் 2 மொடல்களில் வருகிறது. அதாவது 27 இன்ச் அளவில் எல்ஈடி டிஸ்ப்ளேயைக் கொண்ட ஒரு மொடலும் 21.5 இன்ச் அளவில் எல்ஈடி ஐபிஎஸ் டிஸ்ப்ளே கொண்ட இன்னொரு மொடலுமாக இரண்டு மொடல்களில் வருகிறது.

21.5 ஐமேக் 1,299 அமெரிக்க டொலர்களுக்கும் 27 இன்ச் மொடல் 1,799 அமெரிக்க டொலர்களுக்கும் விற்பனை செய்யப்பட இருக்கிறது. 27 இன்ச் மொடல் ஐமேக்கில் கோர் ஐ5 அல்லது கோர் ஐ7 ப்ராசரில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். இந்திய மதிப்பில் 21.5 இன்ச் ஐமேக் ரூ.85,900க்கும், 27 இன்ச் மொடல் ரூ.99,990க்கும் விற்கப்படும் என்று தெரிகிறது.

இந்த புதிய ஐமேக் கணினி 3ஜி குவாட்கோர் இன்டல் கோர் ஐ ப்ராசஸர்களுடன் களம் இறங்குகிறது. இதில் கோர் ஐ7 ப்ராசஸரை அப்கிரேட் செய்ய முடியும். மேலும் இதில் என்விடியா ஜிபோர்ஸ் ப்ராசஸர் மற்றும் 8ஜிபி 1600 மெகாஹெர்ட்ஸ் மெமரி மற்றும் 1டிபி ஹார்ட் ட்ரைவ் உள்ளதால் இந்த ஐமேக் தாறுமாறான வேகத்தில் இயங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஐமேக்கில் வரும் சேமிப்புக்கு பியூசன் ட்ரைவ் என்று அப்பிள் பெயர் சூட்டி இருக்கிறது. இது 128ஜிபி எஸ்எஸ்டி ஹார்ட் ட்ரைவ், 1டிபி அல்லது 3டிபி எச்டிடி அளவைக் கொண்டது. மேலும் இந்த ஐமேக்கில் மைக்ரோ எஸ்டி கார்ட், யுஎஸ்பி போர்ட்டுகள் மற்றும் தன்டர்போல்ட் போர்ட்டுகளும் உள்ளன.




## மாணவர்களுக்கு பயனுள்ள இணையம்



உங்களுக்காகவே ஒன்லைனில் அனைத்து பாடங்களுக்குமான வீடியோ வகுப்பறைகள், பாடக் குறிப்புகள், அனிமேஷன் வழி பாடங்கள், படித்ததைச் சோதனை செய்து கொள்ள ஒன்லைன் தேர்வுகள், ஓடியோ உரைகள் என அனைத்து வழிகளிலும் கற்றுக் கொள்வதை உற்சாகப்படுத்தும் இணையத்தளம் ஒன்று இயங்குகிறது.

அறிவியல் பாடங்கள் அனைத்தும் புகழ்பெற்ற கல்வி நிலையங்களில் பாடம் நடத்தும் பேராசிரியர்களால் வீடியோ வகுப்பறைகளாகத் தரப்படுகின்றன.

Physics, Chemistry, Maths and Statistics, Biology, Medicine, Computer Science, Engineering, Accounting and Management, Dental Science, Nursing, History என ஏறத்தாழ அனைத்து பாடங்களும் இந்த தளத்தில் கிடைக்கின்றன.

இதில் ஒரு சில பாடங்களுக்கு அனிமேஷன் முறையிலும் பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன. இதனால் வேடிக்கையாக இந்த பாடங்களை விளக்கங்களுடன் கற்றுக் கொள்ளலாம்.

இது தவிர மாணவர்களின் அறித் திறனை வளர்ப்பதற்காக ஒன்லைன் தேர்வும் நடத்தப்படுகிறது. பாடத்தை செய்முறை விளக்கமுடன் எளிய முறையில் கற்றுக்கொள்ள நினைக்கும் மாணவர்களுக்கு இத்தளம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதற்கான இணையத்தள முகவரி

**www.learnerstv.com**





அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 டிசெம்பர் 05 ஆம் திகதி வெளியிடப்பட்டது.